KALKI 30.10.88 ரூ. 2.

கல்கி



"மனசாட்சியை விற்றுப் பணம் பண்ண முடியாது..."

— மலையாள சினிமா டைரக்டர் அரவிந்தன் பேட்டி



கேரளச் சிறப்பிதழ் I

நடனம் என்றதும் நினைவிற்கு வருவது
நற்சபையில் ஆடுகின்ற தெய்வம்.
அழகு மங்கையற்கு பட்டு என்றதும்
நினைவிற்கு வருவது...



UIPC:KS:2:88

அங்கங்கே பார்த்தவை

●● கேரளாவில் எல்லாப் பள்ளி மாணவர்களும் அனேகமாக வேஷ்டிதான் கட்டுகிறார்கள். பெரியவர்கள் வேஷ்டி, சட்டை, கையில் குடை. கல்யாணமாகும் வயது வரை பெண்கள், பாவாடை, சட்டை, குடை. கல்யாணமான பெண்கள், புடைவை, ரவிக்கை, குடை, நெற்றியில் சந்தனக் கீற்று. ஆண்கள், பெண்கள் இருபாலரும் இருவேளைக் குளியலை ஆதரிக்கிறார்கள். பெண்களின் கூந்தல் எப்போதும் வால் கட்டப்பட்ட பட்டம் போல் மேலே விரிந்து கீழே பின்னப்பட்டும் காணப்படுவது தனி அழகு.

●● கேரள மாநிலச் சாலை டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் பஸ்கள் கேரள மக்களால் 'ஆனைவண்டி' என்று அழைக்கப்படுகின்றன. பஸ்கள் அழுக்கானவை. சாலைகளில் இருக்கும் மேடு பள்ளங்களைப் பற்றிக் கவலைப்படாமல் டிரைவர்கள் படு ஸ்பீடாகப் பஸ்களை ஓட்டுகிறார்கள். உள்ளே உட்காரும் சீட்கள் வசதியற்றவை. நெடுந்தூரப் பயண பஸ்களில் கூட லக்கேஜ்களை வைத்துக் கொள்ளத் தலைக்கு மேலே 'சாமான்களுக்கு மாத்திரம்' இடம் கிடையாது. அரசாங்க பஸ்களில் சார்ஜும் அதிகமே. கோட்டயத்திலிருந்து திருவனந்தபுரம் வரைக்கும் நாங்கள் வந்த ஒரு பஸ் நெடுஞ்சாலையில் அங்கங்கே தன் பாகங்களை உதிர்த்து விட்டுக் கொண்டே வந்தது. நம் இதயங்களின் 'லப்—டப்' அதிகமாகிக் கொண்டே இருந்தன. டிரைவர் கவலையே படவில்லை!

●● புகழ்பெற்ற நேந்திரங்காய் சிப்ஸ், சில கேரள ஊர்களில் மட்டுமே தேங்காய் எண்ணெயில் வறுக்கப்படுகிறது. மற்ற ஊர்களில் எல்லாம் பாமாயில்தான். பாமாயில் வறுவலில் சுவை குறைவு. விலையும் அதிகம். நாட்பட்ட வறுவல்கள் பிளாஸ்டிக் பாக்கெட்டுகளில் விற்கப்படுகின்றன. தேங்காய் எண்ணெய் சிப்ஸ் விரும்புகிறவர்கள், பாலக்காட்டில் நடைபாதையில் வண்டியில் வறுபடும் வறுவல்களைச் சுவை பார்த்து வாங்கினால் நலம்.

●● பிரைவேட் பஸ்—ஸ்டாண்ட், கவர்ன்மெண்ட் பஸ் ஸ்டாண்ட் என்று எல்லா முக்கிய நகரங்களிலும் இரண்டிரண்டு பஸ் ஸ்டாண்ட்கள். எல்லா பஸ்களிலும் ஜிலேபி போல் மலையாள எழுத்துக்கள். வெளி மாநிலக்காரர்கள் பாடு திண்டாட்டம்தான். ஆனால் மக்கள் அன்பானவர்கள். விசாரித்தால் ஒழுங்காகப் பதில் சொல்கிறார்கள் — மலையாளத்தில்.

●● எல்லா ஊர்களிலும் கள்ளுக் கடை, சாராயக் கடை உண்டு. அது விசேஷமில்லை. ஆனால், வேறு எந்தக் கடையிலும் இல்லாமல், எல்லாக் கள்ளுக்கடை, சாராயக் கடை போர்டுகளில் மட்டும் தமிழில் 'கள்ளு' என்றும் 'சாராயம்' என்றும் எழுதியிருப்பது தான் விசேஷம். தமிழன் அதிகம் கேரளாவிற்கு வருகிறான்; தமிழன் கேரளாவில் அதிகம் குடிக்கிறான் என்று இரண்டு விஷயங்களை இந்த போர்டுகள் சொல்லுகின்றன, இல்லையா?




குடிப்பவர்களைக் கவரும் விளம்பரம்......

●● ஹோட்டல்களில் அளவுச் சாப்பாடு என்ற பேச்சே இல்லை. அளவில்லாச் சாப்பாடுதான். போடுவது குத்தரிசிச் சோறு. என்றாலும் கூட 'நீ இவ்வளவுதான் சாப்பிட வேண்டும்' என்று சாப்பாட்டிற்கு அளவு வைக்காதது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. சாப்பாடு, டிஃபன் ஆகியவை மிகவும் அதிக விலையில் விற்கப்படுவதில்லை. சராசரி மனிதனின் பர்ஸைக் காயப்படுத்தாத அளவுக்குத்தான் விலை.

●● நேந்திரம் பழத்தை டோஸ்ட் செய்து, நாட்டுச் சர்க்கரை, தேங்காய்த் துருவல் இரண்டையும் கலந்து கொடுக்கிறார்கள். நேந்திரம் பழ பஜ்ஜியும் கேரளாவின் மற்றொரு ஸ்பெஷல் ஐட்டம். காலை வேளைகளில் கேரள மக்கள் சூடான பிட்டுடன் நேந்திரம் பழத்தைப் பிசைந்து சாப்பிடுவதைக் கேரள ஹோட்டல்களில் பார்க்கலாம். பலவித கேரள ஸ்பெஷல் உணவுகளில் இது ஒன்று.

●● குடியை ஊக்கப்படுத்தும் வகையில் பல இடங்களிலும் 'பார்' வைத்து நடத்துபவர்கள் கவர்ச்சிகரமான பரிசுகளை அறிவிக்கிறார்கள். திருச்சூரிலுள்ள ஒரு பாரில், குடிக்கும் ஒவ்வொரு ஐம்பது ரூபாய்க்கும் ஒரு கூப்பன் தருகிறார்கள். அதிர்ஷ்டமிருந்தால் அதிலுள்ள எண்ணுக்குப் பரிசு விழும். முதல் பரிசு: டி.வி.எஸ். சுசுகி; இரண்டாம் பரிசு: ரெப்ரிஜிரேட்டர்... இப்படி. இந்த அநாகரிகத்தை எப்படி ஒரு கம்யூனிஸ்ட் அரசாங்கம் ஆதரிக்கிறது என்பதுதான் ஆச்சரியம்!



செவிகளுக்கே அதிக வேலை தரும் ரேடியோ நாடகங்களைப் போல் வசனங்களுக்கு முக்கியத்துவம் தந்து கொண்டிருந்த மலையாளச் சினிமா உலகம், ஒரு கட்டத்தில் திசை திரும்பி, காட்சிகளின் மூலம் கதை கூறியதுடன், கண்களைக் கவரவும் ஆரம்பித்தது. இந்த மாற்றத்திற்கான காரணகர்த்தாக்களில் டைரக்டர் அரவிந்தன் முக்கியமானவர். அவருடன் ஒரு பேட்டி......

''நீங்கள் எப்படி இந்த சினிமாத் துறைக்கு வந்தீர்கள்?''

''நீங்கள் எப்படி பத்திரிகைத் துறைக்கு வந்தீர்கள்? ஓர் ஈடுபாடு காரணமாகத் தானே! அதே போல்தான் நானும். என் உணர்வுகளைச் சரியானபடி வெளிக்காட்ட உதவக் கூடியது சினிமாத்துறையே தவிர, அரசாங்க வேலை அல்ல என்பதைப் புரிந்து கொண்டேன். அதனால்தான் வந்தேன்.''

''மலையாளத்தில் ஒருபுறம் உங்களைப் போன்ற சில டைரக்டர்கள் உலகத் தரத்திற்கு இணையாகப் படமெடுத்துக் கொண்டிருந்தாலும் மறுபுறம் மலையாளப் படங்கள் என்றாலே செக்ஸ் அதிகம் இருக்கும் என்கிற நிலைதான் இருக்கிறது. ஏன் இந்த முரண்பாடு? வங்காளத்தில் இந்த முரண்பாடு இல்லையென்று நினைக்கிறோம்.''

''கேரளாவுக்குள் திரையிடப்படுகிற எந்த மலையாள சினிமாவிலும் நீங்கள் சொல்லுகிற 'செக்ஸ்' கிடையவே கிடையாது என்று என்னால் அடித்துச் சொல்ல முடியும். அந்த 'செக்ஸ்' காட்சிகளெல்லாம் தமிழ்நாடு, ஆந்திரா போன்ற வெளி மாநிலங்களில் திரையிடப்படும் படங்களில் மட்டுமே சேர்க்கப்பட்டவை. அதுவும் விநியோகஸ்தர்களின் வேலை. இங்கு அதெல்லாம் எடுபடாது. சொல்லப் போனால் தமிழிலும் தெலுங்கிலும்தான் நீங்கள் சொல்லுகிற 'செக்ஸ்' படங்கள் ஏராளமாக எடுக்கப்படுகின்றன. மேலும் வங்கப் படங்களையெல்லாம் நீங்கள் சத்யஜித்ரே, மிருணாள் சென் போன்றவர்களை வைத்தே ஒரு முடிவுக்கு வந்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது. அங்கும் ஆபாசப் படங்கள் இருக்கின்றன. நானே பார்த்திருக்கிறேன்.''

''அண்மையில் வெளிவந்த உங்கள் படமான 'சிதம்பர'த்தில் கூட 'அடல்ட்ரி' சப்ஜெக்ட்தான் கையாளப்பட்டிருக்கிறது. இது கூட ஒரு வகையான 'கவர்ச்சி'க்காகத் தானா?''

''நிச்சயமாக இல்லை. நான் அடல்ட்ரி சப்ஜெக்டை எடுத்துக் கொண்டிருந்தாலும் அதில் எந்த இடத்திலாவது ஆபாசத்தைக் கையாண்டிருக்கிறேனா என்ன? எந்த விஷயமாக இருந்தாலும் அதைச் சொல்லுகிற முறையில்தான் தரம் இருக்கிறது.''

''உங்களைப் போன்றவர்களின் படங்கள் படு ஸ்லோவாக இருக்கின்றன என்று பலரும் சொல்வதுண்டு.''

''எப்படி? உங்கள் கேள்வி எனக்குப் புரியவில்லை.''

''உதாரணத்திற்கு உங்கள் 'சிதம்பரம்' படத்தையே எடுத்துக் கொள்வோம். அதில் ஓர் ஆபீஸரும் அவர் கீழ் வேலை செய்யும்

"மனச்சாட்சியை விற்றுப் பணம் பண்ண முடியாது..."

ஒரு தொழிலாளியும் சேர்ந்து மது அருந்தும் காட்சி. அதையே நீண்ட நேரம் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள்....''

''அந்தக் காட்சியை நான் மூன்று நிமிடங்கள்தான் காட்டுகிறேன். சாதாரணமாக ஓர் ஆபீஸருக்கும் கீழே வேலை செய்யும் ஒரு தொழிலாளிக்கும் இடையில் ஓர் அந்தஸ்து இடைவெளி இருக்கும். அதனால் திடீரென்று அவர்கள் ஒன்றாக மது அருந்துகிற அளவுக்கு நெருங்கிப் பழகிவிட மாட்டார்கள். எனவே அவர்கள் ஒன்றாக மது அருந்த வேண்டுமானால் அந்த இடைவெளி குறைக்கப்பட்டாக வேண்டும். அது திடீரென்று நிகழ்ந்து விட முடியாது. மெல்ல மெல்லத்தான் நிகழும். அதைத்தான் நான் யதார்த்தமாகக் காட்டியிருக்கிறேன். அதனால்தான் அந்த மூன்று நிமிடங்கள்.''

''இது மாதிரியான படங்களைத்தான் 'ஆர்ட் பிலிம்' என்று முத்திரை குத்துகிறார்கள்.''

''சினிமாவில் ஆர்ட் பிலிம், கமர்ஷியல் பிலிம் என்றெல்லாம் ஏதும் இல்லை. நல்ல படம், மோசமான படம் என்றுதான் உண்டு.''

''உங்களைப் போன்றவர்களின் படங்களை ஒரு குறிப்பிட்ட மக்கள்தான் பார்க்கிறார்கள். சாதாரண மக்கள் பார்பபதில்லை என்று சொல்லலாமா?''

''எம்.டி. ராமநாதன்; எஸ். ராமநாதன் போன்ற இசை மேதைகளின் கச்சேரிகளுக்கு அதிகக் கூட்டம் வந்ததில்லை. ஜேசுதாஸ் கச்சேரி பண்ணினால் கூட்டம் அதிகம் இருக்கும். அதனால் அந்த இசை மேதைகள் தமது கச்சேரி முறையை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று சொல்லுவீர்களா? அல்லது கூட்டம் அதிகம் வருகிறது என்பதாலேயே ஜேசுதாஸின் இசை ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுவீர்களா? கர்நாடக சங்கீதத்தை அதன் பல்வேறு பாணிகளைப் புரிந்து கொண்டு ரசிக்க வேண்டுமானால் நீங்கள்தான் உங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, உங்கள் ரசனைக்குத் தக்கபடி கர்நாடக சங்கீதத்தை மாற்றியமைக்கச் சொல்லக் கூடாது. பாக்ஸ் ஆஃபீஸ் வெற்றியைக் கருதியோ அல்லது நூறு நாள் விழா கொண்டாட வேண்டுமென்பதற்காகவோ என்னால் ஒருபோதும் விட்டுக் கொடுத்துக் காம்ப்ரமைஸ் செய்து கொள்ள முடியாது. என் மனசாட்சியை விற்றோ அல்லது அடகு வைத்தோ என்னால் பணம் பண்ண முடியாது. மக்களின் ரசனையை மேம்படுத்துவதற்காகத்தான் என்னால் படமெடுக்க முடியுமே தவிர, மக்களை எக்ஸ்ப்ளாய்ட் பண்ணிப் படமெடுக்க முடியாது. அதனால்தான் என் படங்களுக்கு நானே தயாரிப்பாளராகவும் இருக்கிறேன்.''

''நீங்கள் ஒரு வெற்றிகரமான டைரக்டராக இருப்பதைப் போல், ஒரு வெற்றிகரமான தயாரிப்பாளராக இருக்கிறீர்களா?''

''இல்லாமலிருந்தால் கடந்த பதினாறு ஆண்டுகளாகச் சினிமாவில் நான் இருக்க முடியுமா? என் தேவைகள் மிகக் குறைவு. அதிலேயே நான் திருப்தியடைந்து விடுகிறேன். அதனால்தான் தரத்தை என் படங்களில் காப்பாற்ற முடிகிறது. மேலும் கேரளாவிலுள்ள பிலிம் சொஸைட்டி மிகச் சுறுசுறுப்பாக இருப்பதால் பிரச்னையே இல்லை. அவர்களின் மூலம் என் படங்கள் திரையிடப்படுகின்றன. என் தேவைகளுக்கான பணமும் கிடைத்து விடுகிறது. நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்.''

''சாதாரணமாகத் தமிழகத்தில் மோசமான படங்களை எடுக்கும் ஒரு டைரக்டரிடம் போய்க் கேட்டால், 'மக்கள் ரசனைக்குத்தானே நான் படமெடுக்க முடியும்...' என்று மக்கள் மேல் பழியைப் போட்டு விடுவார். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

''உண்மை என்னவென்றால், கர்நாடக மாநிலத்திலுள்ள — நகர்ப்புறங்களிலிருந்து வெகுவாக விலகியுள்ள சில கிராமங்களில் உலகத்தின் சிறந்த படங்கள் சிலவற்றைத் திரையிட்டுக் காட்டிய போது மக்கள் அவற்றைப் பெரிதும் வரவேற்றார்கள்; ரசித்துப் பார்த்தார்கள். இந்நிலையில் மக்கள் ரசனையில் எப்படிப் பழி போட முடியும்? அதுவும்

தமிழ்நாட்டிலுள்ள கிராம மக்களின் மனது மிக மிகத் தூய்மையான மனது. அந்த மனது நல்லதை உடனடியாக ஏற்றுக் கொள்ளும். அதே போல அவர்களை ஏமாற்றிப் பணம் பண்ணுவதும் வெகு சுலபம். இதே நிலை தான் ஆந்திராவிலும். அந்தத் தூய்மையான மனத்தைத்தான் சினிமாக்காரர்களும் அரசியல்வாதிகளும் எக்ஸ்பிளாய்ட் பண்ணிக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கேரளாவில் அப்படியல்ல; எதையும் ஏற்றுக் கொள்வதா வேண்டாமா என்று ஒரு நீண்ட சர்ச்சை செய்தே ஏற்றுக் கொள்வார்கள்; அல்லது தள்ளுவார்கள்."

"நீங்கள் ஏன் அரசியலை மையமாக வைத்துப் படமெடுக்கக் கூடாது?"

"இன்றைக்கிருக்கிற சென்சார் நிலையில் ஓர் உண்மையான அரசியல் படம் எடுக்கவே முடியாது. எல்லாவற்றையும் வெட்டித் தள்ளி விடுவார்கள். இந்நிலையில் சென்சாருக்கு விட்டுக் கொடுத்துக் கொண்டு எதற்காகப் பொய்யாக ஓர் அரசியல் படம் எடுக்க வேண்டும்?"

"தமிழில் வெளிவந்த 'தண்ணீர் தண்ணீர்' படம் நல்ல வரவேற்பைப் பெற்றது."

"நான் 'தண்ணீர் தண்ணீர்' நாடகத்தையும் பார்த்தேன். படத்தையும் பார்த்தேன். நாடகத்திலிருந்த வேகம் சினிமாவில் இல்லை. அந்த வேகம் சினிமாவில் நீர்த்துப் போய் விட்டது என்றுதான் சொல்வேன்."

"நீங்கள் ஏன் பிற மொழிகளில் படமெடுக்கக் கூடாது?"

"அதுவும் என்னால் முடியாது. உதாரணத்திற்குச் 'செம்பரம்' படத்தையே எடுத்துக் கொள்வோம். அதில் வருகிற 'சிவகாமி' பாத்திரம் ஒரு தமிழ்ப் பெண். அவள் திருமணமாகிப் புகுந்த வீட்டுக்கு மாட்டு வண்டியில் புறப்படுகிறாள். ஒரு தமிழ்ப் பெண் புகுந்த வீட்டுக்கு முதன் முதலாகச் செல்லும் போது என்ன மாதிரியான உணர்ச்சிகளைக் காட்டுவாள்? எப்படிக் காட்டுவாள்? அது தெரியாமல் நான் திணறிப் போனேன். அந்த உணர்ச்சிகளைப் புறக்கணித்து விட்டுப் படமெடுப்பது சினிமாவாக — விஷுவல் மீடியமாக இருக்க முடியாது. எனவே, அந்த இடத்தில் அந்தப் பாத்திரத்தின் உணர்ச்சி எப்படியிருக்கும் என்பதை அறிந்து கொள்ள எனது நண்பரும் தமிழ் எழுத்தாளருமான நீல. பத்மநாபனை நாட வேண்டியதாயிற்று. ஆக, பிறமொழி மக்களின் வாழ்க்கை முறைகளையும் பண்பாடுகளையும் நான் முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல் அம் மொழிகளில் படமெடுப்பதென்பது எப்படி முடியும்?"

"இப்போது நீங்கள் என்ன படம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"இசை சம்பந்தமான விஷயத்தை மையமாக வைத்து டீ.வி.க்காக ஒரு படம் எடுத்துக் கொண்டிருக்கிறேன்."

"டீ.வி.யில் காம்ப்ரமைஸ் செய்து கொள்ள வேண்டியிருக்குமே?"

"இசை சம்பந்தமானது என்பதால் அவர்கள் இதுவரை தலையிடவில்லை. இனியும் தலையிட மாட்டார்கள் என்றும் நம்புகிறேன். அப்படியே தலையிட்டால் என்ன செய்வது? அந்த சந்தேகத்தால்தான் டீ.விக்காக என்றாலும் படத்தை வீடியோ கேசட்டில் எடுக்காமல் பிலிமில் எடுத்துக் கொண்டிருக்கிறேன். டீ.வியில் காம்ரமைஸ் செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால் டீ.விக்குக் கொடுக்காமல் தியேட்டரில் ரிலீஸ் செய்யலாமல்லவா?"

"பொதுவாக சினிமாத் தொழில் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"இன்றைய நிலையில் சினிமாவைத் தொழில் என்பதைவிட சூதாட்டம் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். இந்தச் சூதாட்டத்தில் ஈடுபடாமல் என்னைப் போன்ற சிலர் விலகி நின்று வெற்றிகரமாக இயங்க முடிவது மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது."



அவள்: உன் கணவர் கதை எழுதுவார்னு சொல்றியே, எதிலே வரும்...?

இவள்: புக்போஸ்ட்டில்!

— ஆர். வசந்தகுமார்.

திருடன் 1: ஏன் அண்ணே! சோகமா இருக்கே?

திருடன் 2: அந்த பஸ்ஸில் நாலு பர்ஸ் பிக்பாக்கெட் அடிச்சுக்கிட்டு இறங்கிப் பார்க்கிறேன். ரெண்டுதான் இருக்குது!

— மணியன் தர்மலிங்கம்.




நிபுணர்கள்
அனைவர்க்குமே
உடன்பாடான
அந்த சுவை
இதே தான்.
தர்லா தலால் — புகழ்பெற்ற சமையற் கலை நிபுணர்; சமையற் குறிப்புப் புத்தகங்களது ஆசிரியை.
பத்மஸ்ரீ தங்கம் ஃபிலிப் — முன்னாள் முதல்வர், கேட்டரிங் கல்லூரி, பம்பாய்.
பையன் ராஜூ — எல்லா வீட்டிலும் உள்ள சுவை மன்னன்! இவனது விருப்பத்தை மீற முடியுமா என்ன!
ஸன்ஃப்ளவர்®
ப்ராண்ட்
வனஸ்பதி
ஒவ்வொரு சமையற்கலை நிபுணரும் தமக்கே உரிய வழியையும், பாணியையும் பின்பற்றுவார். உணவு சமைக்க. ஆனால், சமையல் செய்ய ஏற்ற, சுவை மிக்க, சிக்கனமான பொருள் பற்றியோ அவர் அனைவர்க்குமே உடன்பாடுண்டு. அப்பொருள் — ஸன்ஃப்ளவர் ப்ராண்ட் வனஸ்பதி.
நீங்கள், லேசாக வறுப்பதானாலும், பொன்னிறமாக நன்கு வறுப்பதானாலும், இனிப்புகளோ, கேக்குகளோ செய்தாலும், தினசரி உணவு அல்லது சிறப்பு உணவு தயாரிப்பதானாலும், உங்களுக்குத் தேவை, ஆம் — ஸன்ஃப்ளவர் ப்ராண்ட் வனஸ்பதி.
சொல்லப்போனால், இதைவிடச் சிறந்தது வேறேதுமில்லை, தூய நெய் தவிர.
Sunflower BRAND Vanaspati
WIPRO
Close to the consumer
ஸன்ஃப்ளவர் ப்ராண்ட் வனஸ்பதி... இதைவிடச் சிறந்தது தூய நெய் மட்டுமே
HTA 2057

ஓர் வேண்டுகோள்



சுமார் 350 ஆதரவற்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை, இருக்க இருப்பிடம், கல்வி மற்றும் மருத்துவ வசதியும் அளித்துவரும் சிவனாந்த சரஸ்வதி சேவாஸ்ரமம் ஆண்டுதோறும் தீபாவளி அன்று குழந்தைகளுக்கு புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புகள் வழங்கி தீபாவளியை சிறப்பாக கொண்டாட பொது மக்கள் பண உதவியோ அல்லது பொருளுதவியோ கொடுத்து உதவும் படி கேட்டுக்கொள்கிறோம்.

தாங்கள் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களை ஒரு புதிய பாதையில் கொண்டுச் செல்லும் ஆசிரமத்தின் அரியதொரு செயலையும், திக்கற்ற முதியோர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வருவதையும் அறிந்திருப்பீர்கள் எனவே இது சம்பந்தமாக தாங்கள் அளிக்கும் உதவி அதரவற்ற குழந்தைகளுக்கும், ஆசிரமத்தில் இருக்கும் முதியோர் இல்லத்தின் ஆதரவற்ற முதியோர்களும், இல்லக் குழந்தைகளும் மனமகிழ்ச்சியுடன் தீபாவளி திருநாளைக் கொண்டாட அவர்களுக்கு புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புகள் வழங்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

பொது மக்கள் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும், அக்குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். வருமான வரி விலக்கும் அளிக்கப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாகவோ அல்லது பொருட்களாகவோ


நிர்வாகி,

சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,


நெ.20, கம்பர் தெரு,

கிழக்கு தாம்பரம், சென்னை — 600 059.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.



* கேரளச் சிறப்பிதழ் — II




* ஆதிசங்கரர் அவதரித்த காலடி, குருவாயூர், பத்மநாப சுவாமி கோயில் — தரிசனக் கட்டுரைகள்...
* படகுப் போக்குவரத்து அனுபவங்கள்...
* கேரளத் தொழில் வளர்ச்சி மற்றும் இலக்கிய வளர்ச்சி பற்றிய கட்டுரைகள்
* "தமிழக மக்களே ஏமாந்து விடாதீர்கள்..."
  — கேரள முதல்வர் நாயனார் சிறப்புப் பேட்டி!
* இன்னும் ஏராளச் செய்திகள்....



* டாக்டர் எம். எஸ். உதய மூர்த்தி எழுதும் வித்தியாசமான கட்டுரைத் தொடர்....

* தராசு பதில்கள்
  — மீண்டும் ஆரம்பம்!



* கல்லூரிகளைச் சுற்றி — மாணவர்களுக்காக ஸ்பெஷல் பக்கங்கள்...

கல்கி — அடுத்த இதழ்
— தீபாவளிச் சிறப்பிதழ்...



கோவளம் கடற்கரை.

கேரளா என்றால் நீலமேகங்கள் வழி நடக்கும்; காற்றில் பனிப்புகை ஊடுருவி இருக்கும்; தென்னைகளில் இளநீர்கள் ஊஞ்சலாடும்; முண்டு கட்டிய பெண்கள் சந்தனப்பொட்டுடன் தோணிகளில் வலம் வருவார்கள்; மிளகும், இஞ்சியும், ரப்பரும், காப்பியும் தேக்கும் எல்லாத் தோட்டங்களிலும் ஊன்றிப் படர்ந்து இருக்கும் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

எதுவுமே பொய்யில்லை. கேரளாவைப் படகுகளில், பஸ்களில், ஜீப்களில், ஆட்டோக்களில் வலம் வந்தபோது கேள்விப்பட்டவை அத்தனையும் கண் முன்னால்.

பூமியில் ஒரு சொர்க்கம் போல் பசுமை நிறைந்த கேரளம்; எழில் கொஞ்சும் கேரளம்.

ஒரு சுற்றுலாப் பயணியாகக் கேரளாவைச் சுற்றினால் எங்கெங்கே போகலாம் என்று லிஸ்ட் எடுத்து லிஸ்டில் மிக முக்கியமாக எங்களுக்குப் பட்ட மூன்று சுற்றுலா இடங்களுக்குப் போனோம்.

முதலில் அயல் நாட்டவர் பலரும் வந்து தங்கி, இளைப்பாற ஆசைப்படும் கோவளம் கடற்கரை.

அப்படி என்னதான் இருக்கிறது கோவளத்தில்?

திருவனந்தபுரத்தில் இருந்து 'ஆனை வண்டி' என்று கேரள மக்களால் செல்லமாக அழைக்கப்படும் கேரள அரசாங்க பஸ்ஸில் ஏறி 'கோவளம்' என்றோம்.

கடற்கரை இருப்பதற்கான அறிகுறியே இல்லாத ஒரு சாலையில் சுமார் பதினான்கு கி.மீ. தூரம் பஸ் நின்று நின்று ஊர்ந்தது. சாலையோரம் தென்னைமரங்கள். ஆறு. ஆற்றில் மிதந்த தோணி, தோணியில் எங்கேயோ போய்க்கொண்டிருந்த தேங்காய் நார். —சரேலென்று ஒளிந்திருந்த கடற்கரை எட்டிப் பார்த்தது; மறைந்தது.

பஸ் ஒரு சரிவில் ஏறி, இறங்கி நின்று 'கோவளம்' என்றது. 'கடற்கரை' என்றது.

இந்த இடத்திலா கடற்கரை? சுற்றிலும் கடல் தெரியவில்லை. ஏதோ ஒரு வடக்கு மாநிலத்தின் ஹாண்ட்லூம் ஷோரூம், ஒரு பெரிய ஹோட்டலின் முகப்பு வாயில், அப்புறம் 'சர்'ரென்று சரிந்த சாலை.

சரிவான சாலை பீச்சை நோக்கிப் போகிறது என்று அங்கிருந்த ஒரு ஆசாமி சொல்ல, சரிந்தோம். வழியில் சின்னச் சின்னக்கடைகளில் சங்கு மாலைகள், சிப்பிப்பொம்மைகள், தோரணங்கள், பறவைகளின் கீச்கீச், ஒரேயொரு பெட்டி ஐஸ், சைக்கிளில் சோகையாக விற்பனையாகிக் கொண்டிருக்க சடாரென்று அந்த வளைவு.

வந்து விட்டது கோவளம் கடற்கரை.


ச்சே. என்ன ஒரு காட்சி! என்ன ஒரு காட்சி! எப்படிச் சொல்வது? எப்படி எழுது



• எங்கு பார்க்கினும் எழில்கோலம்...

வது? சொன்னால் சொற்கள் போதாது. எழுதினால் எழுத்துக்கள் இன்னும் மிகை யாகச் சொல் என்று உத்தரவிடும்!

கடல் அந்த இடத்தில் ஒரு வளைவு வளைந் திருந்தது, ஒரு கன்னிப் பெண் படுத்திருப்பது போல. அவள் சந்தன முகம். சந்தன நிறக் கழுத்து. அவளது முக எல்லை முடிந்ததும் அடர்ந்த கூந்தல் பறந்து விரிந்திருக்கிறாற் போல் நீல நீர் பரந்திருந்தது. மல்லிகைச் சரமாக வெள்ளை அலைகள். சந்தன முக



குழந்தைகளைக் கவரும் மீன் காட்சியகம்......

மாகக் கழுத்தாக வெண்மணல் பரப்பு. ஒரு பக்கக் காதில் தோடுகளை மாட்டியிருப்பது போல் கடலின் ஒரு பக்கம் பாறைகள். பழுப்பு நிறப்பாறைகள் அவ்வப்போது கருமைதட்டி, அவ்வப்போது பசுமைபடர்ந்து இயற்கையின் உன்னதமான சில நிறங் களுடன் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப் பட்டிருந்தன. மறுபுறத்தில் தூரத்தில் தொடு வானம் வரை தெரிந்த வளைந்த தென்னை கள். தென்னைகள் அங்கங்கே நீலநீரைக் குடிக்கும் பேராசையுடன் கடல் நோக்கி வளைந்திருந்தன.

மணலில் நின்று மூச்சு விடுவது கூட அறியாமல், இயற்கையின் அந்த சித்து விளை யாட்டைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தோம்.

கடலில் தூரத்தில் தொடுவானம் தெரிந் தது. தொடுவானுக்கு அப்பால் ஆதவன் இளஞ்சூட்டுடன் பார்த்தான். கடலில் தொடு வானுக்கருகே தோணி ஒன்று மூக்கை நீட் டியது. கரையை நோக்கி முன்னேறியது. ஒரு பல்லக்கு போல. 'ஐலஸா..... ஐலஸா..... படகில் இருந்தவர்கள் பாடினார்களோ இல்லையோ எங்களுக்குப் பாடத்தோன்றி யது. அந்தத்தோணியைத் தொடர்ந்து, இன்னொன்று. அதைத் தொடர்ந்து வேறொன்று. ஒரு சிறு தோணி வரிசை. நிழ லாக, வெள்ளியாக, தங்கமாக தோணிகள் ஆதவனின் வெளிச்சத்தில் நிறம் மாறி நிறம் மாறிக் கரையை நோக்கி முன்னேறின.

டூரிஸ்ட் பஸ் நிறைய ஒரு பட்டாளம் வந் திறங்கியது. வந்தவர்களின் கால்களைக் கடல் அலைகள் தொட்டதால் எழுந்த 'ஹோ', தொடர்ந்து ஹஹஹா! சிலா அந்தக் கடலில் குளிக்காவிட்டால் பாவ விமோசனம் இல்லை என்பது போல் அவசர அவசரமாக ஆடைகளைக் களைந்து உள்ளாடைகளுடன் கடலை நோக்கி முன் னேறினார்கள். ஆற்றில் மிதக்கும் காகிதம் போல, அலைமேல் குளிக்கும் மக்கள். தாழ்ந்து உயர்ந்து, தாழ்ந்து உயர்ந்து...

சிரிப்பு, உற்சாகம், இளமை, துடிப்பு, இசை, காதல், தாலாட்டு என்ற அத்தனை

பாறைகள் குளிக்கப் போகும் வழி...





• எடக்கல் போகும் வழியில்... இஞ்சித் தோட்டத்தில்.

வார்த்தைகளும் 'சபக்' 'சபக்' என்று தரையை மோதும் அலைகளாக நம் நெஞ்சங்களில் மோதின.

கடற்கரையை ஒட்டி இருந்த நட்சத்திர ஹோட்டலில் அறை எடுத்திருந்த சில அயல் நாட்டுப் பயணிகள் டூ-பீஸ் நீச்சல் உடையுடன், அரை ட்ராயருடன் கடலை நோக்கி நீச்சல் தாகத்துடன் ஓடினார்கள். நீச்சலில் களைத்துப் போன டூ-பீஸ் ஒன்று கடற்கரை மணலில் மல்லாந்து படுத்திருக்க, ஹோட்டலின் செக்யூரிட்டி ஆசாமி ஹோட்டலுக்குச் சொந்தமான அந்த எல்லைக்குள் எந்தச் சுற்றுலாப் பயணியையும் உள்ளே வரவிடாமல் விசில் அடித்து விசில் அடித்து விரட்டிக் கொண்டிருந்தார்.

நாங்கள் அந்த செக்யூரிட்டி ஆசாமியைக் கடந்து (எழுத்துக்காரன்... அறியோ சேட்டா?) போய் பாறைகளில் ஏறினோம். பாறைகளில் அங்கங்கே அலைகள் மோதி வெண் திவலைகளைக் காற்றில் தெளித்தன. கறுப்பு நண்டுகள் தண்ணீரில் இருந்து பாறை மேல் ஏறி, வழுக்கித் தண்ணீரிலேயே விழுந்தன.

சற்றுத் தள்ளி கண்களில் நீர் புகாத கண்ணாடியை மாட்டிக் கொண்டு, கையில் பட்டாம் பூச்சியைப் பிடிக்கும் வலை போன்ற ஒரு வலையுடன் நீரில் மூழ்கிப் பெரிய பெரிய நண்டுகளாகப் பிடித்துக் கொண்டு லோக்கல் இளைஞர்கள் இரண்டு பேர் பாறையேறினார்கள். பிடித்துவந்த நண்டுகளைப் பத்திரப்படுத்திவிட்டு மறுபடி நீரின் உள்ளே பாய்ச்சல். சில நாற்பது வயது கட்டு மஸ்தான இளைஞர்கள் கையில் கூர்க் கத்தியுடன் கடலில் இறங்கிக் கிளிஞ்சல் பாறைகளை வெட்டிக் கொண்டு, மடி நிறையக் கட்டிக் கொண்டு பாறைகளில் வந்து இளைப்பாறினார்கள். மீனவப் பெண்கள் அந்தக் கிளிஞ்சல் பாறைகளில் இருந்து கிளிஞ்சல்களைப் பிரித்தார்கள். கிளிஞ்சலுக்காக அல்ல. அதனுள்ளே இருக்கும் உயிரினம் ரொம்ப ருசியாம்! மீனவச் சிறுவர்கள் கட்டு மரங்களில் ஏறிக் கரையோரக் கடலில் செலுத்திப் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்க, வயதானவர்கள் மட்டும் பாறை மேல் நின்று தூண்டில் போட்டு ஒற்றை மீனுக்காகக் காத்திருந்தார்கள்.

பாறைகள். மேலும் பாறைகள். பாறைகளின் இடுக்குகளில் புகுந்து குடையும் அலைகள். கரையோரத் தென்னைகள். தென்னைகளின் தலைமுடியைச் செல்லமாகக் கலைத்த காற்று.

கோவளம் கடற்கரையை இந்த ஜென்மத்தில் மறக்க முடியாது.

எடக்கல்

'வயநாடு சென்றால் தவறாமல் எடக்கல் குகைச் சித்திரங்களைப் பார்த்து விடுங்கள்' என்று ஆசை காட்டியது நாங்கள் படித்த கேரள டூரிஸ்ட் புத்தகம்.

வயநாடு எங்கே, வயநாட்டில் சுல்தான் பத்தேரி எங்கே, சுல்தான் பத்தேரியில் எடக்கல் எங்கே என்று நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு புறப்பட்டோம்.

சுல்தான் பத்தேரியில் இருந்து, உள்ளும் புறமும் குறைந்தது பதினைந்து பேரைச் சுமக்கும் வாடகை ஜீப்பில், மூச்சு முட்ட ஆறு கி. மீ. பயணம்.

இரக்கமில்லாத வழிகாட்டி போர்டு எடக்கல் குகைக்கு இன்னும் மூன்றே கி.மீட்டர்தான் என்று திசை காட்டிய இடத்தில்

ஜீப் எங்களை உதிர்த்தது. அந்த மூன்று கிலோ மீட்டரும் நடைப் பயணமே.

செம்மண் பாதை, போகப் போகத் தேய்ந்து தேடிப் பிடிக்க வேண்டிய ஒற்றையடிப் பாதை. நூறடிக்கு ஒருமுறை கிளை கிளையாய்ப் பிரிவதால், அப்படிப் பிரியும் இடங்களில் வேறு எந்தத் திசைகாட்டிகளும் இல்லாததால் வழியில் சந்தித்த நாட்டு மக்களை விசாரித்தோம்.

'எடக்கல் குகைக்கா போறீங்க?' என்று அவர்கள் கேட்ட தொனியிலேயே அடிவயிறு கலங்கியது. 'முயற்சி உடையார்...' பழமொழியை நினைவில் கொண்டு விடாக்கண்டர்களாய் நடந்தோம். ஒரு கிலோ மீட்டர் தாண்டியதும் விசாரிக்க மக்கள்கூட இல்லாமல் கிட்டத்தட்டக் காட்டுப் பாதை. கோரைப் புற்கள், பச்சை மரங்கள், செடிகள், கொடிகள், அவற்றில் சந்தோஷித்திருக்கும் பட்சிகள், எங்கோ ஓடிய ஓடையின் ரகசிய சலசல, சற்றே ஏமாந்தால் காலை வாரிவிடும் சேற்றுப் பூமி. இதுதான் எடக்கல் பாதை.

கால்களில் அணிய வேண்டிய செருப்புகள் கைகளில்!

ஹெ... இதோ வந்துவிட்டது.

ஹெ... ஹெஹ்... ஹெ... இதோ வந்துவிடும்.

ஹெஹ்.... ஹெஹ்.... ஹெஹ்.... ஹேஏஏ... இதோ வந்தேவிட்டது.

மேகங்கள் தாலிப்பாட்டிய வழுக்குப் பாறைகள். அவற்றின் மேல் மேலும் பாறைகள். மேலும், மேலும் பாறைகள். இங்கே ஒரு கால், அங்கே ஒரு கை, அங்கே ஒரு கால், இங்கே ஒரு கை என்று தொற்றித் தொற்றி ஏறினோம்.

குகை நம்பர் ஒன்று என்று பிக்னிக் வந்த யாரோ ஒரு மாணவன் எழுதிய வழி காட்டி...

குகை நம்பர் ஒன்றில் அத்தனை பாறைகளிலும், எட்ட முடியாத உயரங்களிலும் கல்வெட்டுகள், பெயின்ட் சித்திரங்கள். மாதிரிக்கு:

'கோட்டயம் நம்பீசன் I, B. Sc.,
I love you Chandrika — Achuthan.'

குகை நம்பர் இரண்டு என்று இன்னோர் அம்புக் குறி. அம்புக்குறி என்றால் வான் நோக்கிய அம்புக் குறி. ஏற வேண்டும், சரி! மேலே ஏற வேண்டும், சரி! ஆனால் படிக்கட்டுகள் எங்கே? வேண்டாமையா! பிடிப்புகளோடு சில பாறைகள்? நத்திங் டுயிங். கனமான ஒரு மூங்கில் கழி. அதில் துருத்தியிருக்கும் கணுக்களில் கவனமாகக் காலை வைத்துக் கைலாசம் போகிறாற் போல் ஏற வேண்டும். கால் வழுக்கினால் நிஜமாகவே கைலாசப் பிராப்தி. ஏறிவிட்டால் பரமபத சோபன படம் போல் இன்னும் அபாயமான அடுத்த மூங்கில் கழி. அதிலும் ஜெயித்து விட்டால் இரண்டாவது குகை.

பாசி படர்ந்த இரும்பு முன்வேலி. காவலுக்கு அப்பாவியாய் ஒரு வாட்ச்மேன். 'இது பழங்காலக் குகைதான்' என்று அறிவிக்கும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் போர்டு.

சீட்டுக்கட்டுக் கோபுரம் போல இரண்டு பாறைகளுக்கு இடையே ஒரு கல் குகை. இடைக்கல், அதுவே எடக்கல்.

ஈர சிமெண்டில் ஆணியால் கிறுக்கியது போல் சில கோட்டுச் சித்திரங்கள். நமக்குப் புரிபடாத சுழித்த எழுத்துக்கள்.

'ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு குடியிருந்த மலையான் இனத்தவரின் 'நாகலிபி' தான் இந்தச் சித்திரங்கள்' என்று ஒரு சாரார்.

'இல்லை, இவை ஜைன எழுத்துக்கள்' என்று இன்னொரு தகவல்.


எது உண்மை, குகையின் நிஜமான பின்னணி என்ன என்று தெளிவுபடுத்த தொல்பொருள் ஆராய்ச்சித் துறை ஏதாவது அறிவிப்பு வைத்திருக்கிறார்களா என்று தேடினோம், தேடினோம், தேடினோம்... ஊம் ஹூம். டூரிஸ்டுகள் வருவதற்குப் பாதையையே ஒழுங்கு பண்ணித் தராதவர்கள் அதை மட்டுமா செய்துவிடப் போகிறார்கள்?

எப்படியோ வழுக்காமல் இறங்கி விட்டோம். மீண்டு விட்டோம்!

அனுபவத்தை நினைத்தால் இப்போதும் சிலிர்க்கிறது; முழங்காலைத் தொட்டால் இப்போதும் வலிக்கிறது.

மலம்புழா

தமிழ்நாட்டின் எல்லையைத் தொட்டாற் போல இருக்கும் ஒரு கேரள ஊர் பாலக்காடு. பாலக்காடு பக்கத்தில் சுமார் பதினாறு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் ஓர் இடம் மலம்புழா.



அரசியல்வாதி: என்னை அனுமார்னு திட்டியிருந்தாக் கூடப் பொறுத்திருப்பேன்!

மனைவி: பின்னே என்ன செய்தாங்க?

அரசியல்வாதி: பேசிக்கிட்டிருக்கும்போது வடைமாலை போட்டுட்டாங்க!

— கீழை. அ. கதிர்வேல்.



மலம்புழா என்று வெறுமனே சொன்னால் உங்களுக்குப் புரியாது. கல்பாத்தி ஆறு. அதன் பக்கத்தில் ஒரு நீர்த் தேக்கம், பக்கத்தில் இயற்கையைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு செயற்கைத் தோட்டம் என்றால் நிமிர்ந்து உட்காருவீர்கள்!

பாலக்காட்டில் இருந்து சற்று ஒதுங்கியே இருக்கிறது மலம்புழா. 'குத்தரிசிச் சோறும், மீனு கறியும் தயார்' என்றது ஒரு ஹோட்டல் வாசல் போர்டு. அதைத் தவிர இன்னொரு ஹோட்டல். பஸ் ஸ்டாண்ட். கரும்புச் சாறு பிழிந்து தரும் பெட்டிக்கடை. 'மீனுக்குப் பொரி போடுங்கள்' என்று கூவி நம்மை அழைக்கும் இரண்டு 'பொடியான' பொரி வியாபாரிகள்.

தோட்டத்தில் ஒரு மீன் காட்சியகம், ஒரு பெரிய பொம்மை மீனின் வயிற்றில் இயங்குகிறது. நிறையத் தொட்டிகள். தொட்டிகளில் மீன்கள். சின்னக் குழந்தைகள், 'அதோ ஃபைட்டர், இதோ ஏஞ்சல்' என்று சுறுசுறுப்பாக மீன்களைப் பார்த்துக் கத்திக் கொண்டிருந்தன.

மீன் காட்சியகத்தில் இருந்து வெளியே வந்து சரிவில் மேலேறினால் ஜீப் பாதை. ஜீப் பாதையின் இடது புறம் 'ஹோ' என்று பரந்து விரிந்த நீர்ப் பரப்பு. மறுபுறம் தோட்டம்.

நாங்கள் போன நேரத்தில் மேகங்களும் குழந்தை குட்டிகளுடன் மலம்புழாவிற்குப் பிக்னிக் கொண்டாட வந்திருந்தன. நீர்த் தேக்கத்தை ஒட்டியிருந்த குட்டைச் சுவரில் உட்கார்ந்தோம்.

நீர்ப்பரப்பில் அவ்வப்போது தோணிகள் சென்றன. ட்ர் என்று நீரைச் சுழற்றிச் சுழற்றி விலக்கும் சத்தத்துடன் மோட்டார் படகுகள் உலவின. படகுகளுக்கு அப்பால் தொடுவானத்திற்கு அருகே மலைத்தொடர். யானை நிறத்திலான மேகங்கள் மலைத் தொடர்களைக் கட்டி அணைத்துக் கொண்டிருந்தன. தூரத்தில் மழை ஊசிச் சரங்களாக இறங்கியது இங்கிருந்தே தெரிந்தது. காற்றில் லேசாகக் குளிர்.

வேலை எதுவும் இல்லாமல் இருந்தால் அந்தச் சுவர் மீது உட்கார்ந்து கொண்டு ஏதாவது ஒரு நல்ல கானத்தில் கரைந்து போகலாம்.


ஏறக்குறைய மூன்று மணிநேரம் அந்த இயற்கை வரைந்த ஓவியத்தை ரசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தோம். 'பொட்' என்று மழைத்துளி இறங்கியது மணிக்கட்டில்.

பொட், பொட், பொட்.

நாங்கள் சரிவான சாலையில் கீழே இறங்கி நீர்த் தேக்கத்தை ஒட்டி இருந்த தோட்டத்தில் நுழைந்தோம். சென்னை காந்தி மண்டபப் பூங்கா போல ஒரு தோட்டம். ஆனால் காந்தி மண்டபப் பூங்காவை விடப் பசுமையான தோட்டம். ஒரு தொங்கு பாலம். விதவிதமான, டிஸைன் டிஸைனான, கலர் கலரான பூக்கள், வெள்ளை எலிகள், குரங்குகள், பட்சிகள், முதலை, பாம்பு... என்று இன்ன பிற குழந்தைக் கவர்ச்சிகள்.

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் கோயமுத்தூரில் இருந்து, பழனியில் இருந்து, பொள்ளாச்சியில் இருந்து படை திரண்டு வரும் என்றார்கள். இரண்டு நாட்களும் அந்தத் தோட்டமும், நீர்த்தேக்கமும் ஒரே உற்சாகப் பந்துதான். மலம்புழா ஒரு சிறந்த பிக்னிக் ஸ்பாட்.

மலம்புழா தோட்டம் மாலை வேளைகளில் விளக்கு நட்சத்திரங்களுடன் மின்னும். அந்த விளக்கொளியின் கீழே மறைவான சில இடங்களில் பார்வைப் பரிமாற்றங்கள், லேசான திருட்டுத்தனமான உரசல்கள், அரும்பும் காதல் எல்லாமே உண்டு!


ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே! 18 வயசுக்காரர்களுக்கும் வோட்டு. வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவதைத் தடை செய்து சட்டம். குற்றவாளிகள் தேர்தலில் நிற்கத் தடை. வாக்காளர்களுக்கு அடையாளக் கார்டுகள்... அப்புறம்...
நரசிம்ம ராவ்.. எதிர்க் கட்சிகள் சொன்ன சீர்திருத்தங்கள் என்ன? அதுக்கும் மேலே அமலாக்கணும்னு சொல்றோம்!
நரசிம்ம ராவ்
காங்கிரஸ் செயற்குழு காலட்சேபம்! வருக! வருக!



நீங்க நல்ல பைலட்டாக இருக்கலாம்.. ஆனா இனிமே நீங்க வெளிநாட்டுப் பயணம் போவது பாத யாத்திரையாகத் தான் இருக்கணும்! அது தான் பாதுகாப்பு!
பாதுகாப்பு அதிகாரி
கௌஹாட்டி விபத்து


பஸ் தொழிலாளிகளுக்கு போனஸ், சம்பள உயர்வு
அடுத்தது: பஸ் பயணிகள் கட்டண உயர்வு



கல்கி

1988 அக்டோபர் 30
மலர் 47 இதழ் 13
விபவ ஐப்பசி 14



அடுத்த விபத்து எப்போது?

ராஜீவ் பதவி ஏற்ற சில நாட்களில் கருணாநிதி சொன்னார்: ''டேக் ஆஃப் நன்றாக இருக்கிறது: விமானம் நன்றாகப் பறக்குமா, விபத்தின்றி இறங்குமா, பார்க்கலாம்!''

இன்றோ அதே ராஜீவைப் பார்த்து உலகமே கேட்கிறது: ''ஐயா, பைலட் பிரதமரே, தேசம் என்ற விமானத்தைத்தான் சரியாகச் செலுத்திச் செல்ல உங்களுக்குத் தெரியவில்லை; நாட்டிலுள்ள அசல் விமானங்களாவது விபத்தின்றி பறக்குமாறு கவனித்துக் கொள்ளக் கூடாதா?''

சரஸ்வதி பூஜையன்று பேரிடிகள் நம் தலையில் இறங்கின. ஒன்றல்ல, இரண்டு விமான விபத்துக்கள்! இந்தியன் ஏர்லைன்ஸ், வாயுதூத் என்ற இரு அரசுத் துறை நிறுவனங்களில் வகைக்கு ஒன்றாக இரு விபத்துக்கள்.

கடந்த சில காலமாகவே பலவிதமான விபத்துக்கள் பயணிகளின் அதிர்ஷ்டவசத்தாலோ அல்லது பணியாளரின் சமயோசிதத்தாலோ மயிரிழையில் தவிர்க்கப்பட்டு வந்துள்ளன. ரயில்கள் தண்டவாளத்தை விட்டு இறங்குவதும் கவிழ்வதுமோ சர்வ சாதாரணமாகி விட்டது.

விமான விபத்துக்களுக்கு முக்கிய காரணம் விமானங்கள் சரியாகப் பராமரிக்கப்படாததுதான். பராமரிக்கப்படாததற்குக் காரணம், நேரமின்மைதான். அதாவது விமானத்தைப் பராமரிக்கவும் பழுதுபார்க்கவும் கூட நேரமில்லாத அளவுக்கு அவை பறக்கவிடப்படுகின்றன. இப்படி குறைந்த எண்ணிக்கையில் விமானங்களை வைத்துக் கொண்டு அதிகபட்சமாக அவற்றைப் பயன்படுத்துவதாலேயே அவை பழுதடைய கூடும். இது தவிர, ஒரு விமானத்தில் ஏதாவது குறை இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டால் அதனைப் பராமரிப்புப் பகுதிக்கு அனுப்பி விட்டு அதற்குப் பதில் இன்னொரு விமானத்தைச் செலுத்தலாம் என்பது கிடையாது. காரணம், அப்படி ஒரு 'ஸ்டேண்ட்—பை' விமானம் என்பதே இல்லை! பிரதமருக்கு மட்டும் எப்போதும் ஒரு 'ஸ்டேண்ட்—பை' விமானம் சித்தமாக இருக்கும் என்பது வேறு விஷயம். அவரைக் காசு கொடுத்துப் பறக்கும் பயணிகளுடன் ஒப்பிட்டு நோக்கக் கூடாது! 'ஸ்டேண்ட்—பை' விமானம் இல்லாததால் விமானம் அவசரம் அவசரமாகப் பழுதுபார்க்கப்பட்டுப் பயணத்தைத் தொடர்கிறது. இதனால் பயணிகள் காலத்தை விரயம் செய்து காத்திருக்க நேர்கிறது. ஒரு விமானமும் நேரத்தோடு புறப்பட்டுப் போவதும் இல்லை; நேரத்தோடு வந்து சேர்வதும் இல்லை. பயணிகளோ, நேரத்தோடு போய்ச் சேராவிட்டால் பரவாயில்லை; உயிரோடு போய்ச் சேர்ந்தால் போதும் என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். அதற்கும் உத்தரவாதமில்லை!

அரசுத் துறை நிறுவனங்களுக்கே உரிய அலட்சியப் போக்கு இந்தியன் ஏர்லைன்ஸில் புகுந்து கொண்டிருக்கிறது என்பதோடு ஏக போக்கியமாக இருப்பதால் யாருக்கும் கவலையும் இல்லை! சென்னையிலிருந்து தில்லிக்கு தினம் மூன்று ஃப்ளைட் என்றால் மூன்றும் வெவ்வேறு தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த மூன்று விமானங்கள் என்ற நிலைமை உருவானால், போட்டா போட்டியில் பிரமிக்கத்தக்க விதத்தில் பயணிகளுக்கு வசதிகள் மட்டுமின்றி, விமானப் பராமரிப்பும் பயணிகளுக்குப் பாதுகாப்பும் அதிகரிக்கும்.

விமானிகள் குடித்து விட்டு வருவது பேராபத்து. வறட்டுக் கௌரவம் பாராமல் மது சோதனைக்கு அவர்கள் தங்களை உள்ளாக்கிக் கொள்ளத் தயாராக வேண்டும். இது, வேலை நியமனத்தின் போதே நிபந்தனையாக்கப்பட வேண்டும்.

விமானம், நிலையத்தில் நிற்குமிடத்தைச் சுற்றிக் குப்பை கூளம்; விமான நிலையங்கள் அருகே குடியிருப்புக்கள் தோன்றுதல்; ஆடு, மாடு போன்ற பிராணிகளின் நடமாட்டம்; பறவைகளின் தொல்லை முதலியனவும் விமானப் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிப்பவை. இவற்றில் விமான நிலைய அதிகாரிகளுக்கு மாநில அரசுகள் முழு ஒத்துழைப்புத் தர வேண்டும்.

விழிப்புணர்ச்சி ஏற்படவில்லையென்றால் அடுத்த விபத்துக்கு அதிக நாள் ஆகாது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

நேரு ஒருமுறை பம்பாய்க்கு வந்த போது, "இத்தனை பெரிய நகரில் 2000, 3000 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய வசதி உள்ள அரங்கம் ஒன்று கூட இல்லையே!" என்று அங்கலாய்த்துக் கொண்டார். அதைக் கேட்டு, ஆசியாவிலேயே பிரும்மாண்டமான ஷண்முகானந்தா ஹாலை நிர்மாணித்த பெருமை டி. வி. ராமானுஜம் அவர்களுக்குத்தான் சாரும். அவருடன் நெருங்கிப் பழகிய இசையுலகக் கலைஞர்கள் ஏராளம். அவரைப் பற்றி நினைவு கூர்கிறார்கள் இருவர்....



ராமானுஜம்:

அசைக்க முடியாத அன்புள்ளம்

லால்குடி ஜெயராமன்:

பல வருடங்களுக்கு முன், பம்பாயில் வி.வி. சடகோபன் அவர்களின் கச்சேரிக்கு வயலின் வாசிக்கப் போயிருந்தேன். அப்போது நான் அதிகமாகப் பிரபலமாக வில்லை. கச்சேரிக்கு வாசித்து விட்டு மறு நாள் ரயிலேறிச் சென்னை திரும்பினேன். இரண்டு நாட்கள் பயணம் அப்போதெல்லாம்.

வீட்டுக்கு நான் வந்து சேர்ந்து என் தகப்பனாரிடம் கச்சேரி எப்படி இருந்தது என்று சொல்லும் முன்னாலேயே, அவர் தம் கையில் வைத்திருந்த கடிதத்தைக் காண்பித்தார். எழுதியவர், ராமானுஜம்! 'உங்கள் குமாரர் இங்கே வந்து அற்புதமாக வாசித்தார். எல்லார் இதயத்தையும் கவர்ந்து விட்டார். ரசிகர்கள் அடிக்கடி கரகோஷம் செய்து மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். இந்தப் பெருமை எல்லாம் உங்களுக்குத்தான் சேர வேண்டும்' என்று தம் கைப்பட எழுதியிருந்தார். வளரும் கலைஞரை ஊக்குவிக்க வேண்டும் என்ற பண்பாடு. இளம் கலைஞனான என்னை நேரில் பாராட்டுவதற்குப் பதில் என் தகப்பனாருக்கு எழுதியதில் உள்ள மனோதத்துவம், என் வளர்ச்சிக்கு என் தகப்பனாரே காரணம் என்பதை உணர்ந்து செயல்பட்ட பாங்கு, காலந் தாழ்த்தாமல் விரைந்து செயல்பட்ட அன்பு முதலிய பல சிறப்பு அம்சங்களை இந்த ஒரு நிகழ்ச்சியிலேயே பார்க்கிறோம்.

நான் வளர்ந்து பிரபலமடைந்த பின் என் கச்சேரி பற்றி எந்தப் பத்திரிகையில் விமர்சனம் வந்தாலும் படித்து விட்டு, சிரமம் பார்க்காமல் உடனே அதைக் குறிப்பிட்டு எனக்குக் கடிதம் எழுதி விடுவார். பரபரப்பான பம்பாய் நகரில் இருந்து கொண்டு, இத்தனை வேலைகளில் மூழ்கியிருக்கிற மனிதருக்கு எப்படி இதற்கெல்லாம் நேரம் கிடைக்கிறது என்று வியந்து போவேன்.

அவர் எனக்கு எழுதிய கடிதங்கள் பலவற்றில் 'இப்படிக்கு' என்று முடிக்காமல், "அசைக்க முடியாத அன்பும், வளர்ந்து கொண்டே வரும் நட்பும் பூண்ட..." என்று எழுதிக் கையெழுத்துப் போட்டிருக்கிறார்! ஒரு கடிதத்தில் காணப்படும் ஒரு பின் குறிப்பு அவருடைய அடக்கத்துக்கு எடுத்துக் காட்டு: "இந்தக் கடிதம் கிடைத்து, அதிகமாகப் பிழைகள் இல்லை என்று (தமிழில் எழுதியோ பேசியோ பழக்கமில்லாத போதும்) அறிவித்தால் மேலும் மேலும் தமிழில் பேச, எழுத வரும்."

அண்மையில் காலமான ராமானுஜம், பம்பாய் நகர ஷெரீஃபாகப் பதவி வகித்த முதல் தமிழர். சென்னை மாநிலக் கல்லூரி மாணவரான அவர், ஆலப்புழை கல்லூரியிலும் சென்னை விவேகானந்தா கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றியவர். பின்னர் பம்பாயில் குடியேறி, அரசுத் துறையிலும் தனியார் நிறுவனங்களிலும் பல பெரிய பதவிகளை வகித்தார்.

ஸ்ரீமதி எம். எல். வசந்தகுமாரி:

சென்னைக்கு ஒருமுறை அவர் வந்திருந்த போது, என் கணவர் (கிருஷ்ணமூர்த்தி) அவரை ஒரு பிரபல புகைப்பட ஸ்டுடியோவுக்கு வற்புறுத்தி அழைத்துச் சென்று ஒரு படம் எடுத்து வந்தார். 'எதற்கு என் படம்?' என்று அவர் கேட்ட போது நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. அவருடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்ட போது, அவருடைய படத்தைப் பெரிது பண்ணி எடுத்துக் கொண்டு போய் அவர் கட்டிய சண்முகாநந்தா ஹாலில் மாட்டினோம். பிறகு அவரை அழைத்து வந்து காட்டிய போது, அவருக்கு ஆச்சரியமாக இருந்தது! அதைவிட அவர் அப்போது கூறிய வார்த்தைகள் எங்களுக்குப் பெரிய ஆச்சர்யத்தை அளித்தன! "என் படத்தை இங்கே மாட்டி வைக்க நான் அப்படி என்ன செய்து விட்டேன்?" என்று கேட்டார் அவர்!

— சாருகேசி




பிறந்த நாள் இன்று... அரும்பெரும் பரிசு ஒன்றை மீனுவுக்கு அளித்துவிட்டது ஃபேர் அண்ட் லவ்லி.

இந்த நாளுக்காகவே மீனா அரு முயற்சி எடுத்திருக்கிறாள். இரு மாத முன்னேற்பாடுகள் — அதில் முக்கியமானது ஃபேர் அண்ட் லவ்லி ஒத்துழைத்த மகிமை. அவள் மேனிமீது வெண்ணிலவைப் பொழிந்துள்ளது இதமாக, இயல்பாக. பரிசுப் பெட்டகத்தை அவளிடம் நீட்டும் ரவி, பால்நிலா முகத்தழகை பருகுகிறான் சக்கரவாகப் பறவை போல். அதை வாங்கும் மீனாவின் இதயம் பாடுகிறது நன்றிக் கீதம் — ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமுக்கு!

மீனாவைப் போலவே நீங்களும், கவனிக்கத் தக்க சிகப்பழகை அடைந்திட முடியும் ஃபேர் அண்ட் லவ்லி துணையோடு.

ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு...

ஃபேர் அண்ட் லவ்லி. இயல்பாக உங்களை சிகப்பழகியாக்க இதிலுள்ள ஒப்பற்ற ஃபார்முலா — இரு முக்கிய வழிகளில் வேலை செய்கிறது. ஒன்று: சருமத்தின் அடியாழத்தில் செயல்பட்டு, உடல்



கறுக்கும் உள்வினையைத் தடுக்கிறது — வேறெந்த க்ரீமுக்கும் இது இயலாத சாதனை.

மற்றொன்று: இதிலுள்ள இரட்டை ஸன்ஸ்க்ரீன் ஆற்றல், உடல்கறுக்க வைக்கும் சூரிய ஒளியை உட்புகாதபடி தடுத்து நிறம் காத்திடுகிறது. ஆகவே 6 முதல் 8 வாரங்களில் புதிதாக மேலெழும்பும் கொழுந்துச் சருமப் படலங்களில் செவ்வையான சாயல் மிளிரும். அன்றாடம் இருமுறை ஃபேர் அண்ட் லவ்லி — நாள் தவறாமல் உபயோகித்து வந்தால், மென்மை கொஞ்சும் இயல்பான சிகப்பழகு உறுதியாக உமதாகி விடும்.



ஃபேர் அண்ட் லவ்லி துவங்குமுன்



ஃபேர் அண்ட் லவ்லி உபயோகிக்கும் நாட்களில்

உபயோக முறை:

கழுவிக் கொண்ட முகம், கழுத்து, கரங்கள் மீது ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை பொட்டுப் பொட்டாக இட்ட பின், மேல் நோக்கித் தேய்க்க வேண்டும் மெதுவாக. ஃபேர் அண்ட் லவ்லி, செயல்படத் துவங்கும் போது சற்றே கூசும் உணர்வு ஏற்படுமானால் கவலை வேண்டாம், விரைவில் அது மறைந்துவிடும்.

எளிதில் உள் உறிஞ்சப்படும் குழைவு குணமோங்கி முன்னிலும் மென்மையாக வருகிறது ஃபேர் அண்ட் லவ்லி. ஒரே சீராகப் பரவுகிறது சருமத்தில் மேலும் எளிதில் உறிஞ்சப் படுகிறது.

உடலார உணருவீர் இம் மாறுதலை... பிறகு காண்பீர் கண்ணார.

ஃபேர் அண்ட் லவ்லி பற்றி மேலும் கேட்டறிய விரும்பினீரானால் எழுதுங்கள் இம் முகவரிக்கு:
திருமதி கவிதா குமார், ஃபேர் அண்ட் லவ்லி ஆட்வைசர், பி.ஓ.பாக்ஸ் 758, பம்பாய்-400 021.

ஃபேர் அண்ட் லவ்லி
சிகப்பழகு க்ரீம்




கண்காணும் சிகப்பழகை உமதாக்கும்... இயற்கைக்கே உரிய இதமான வழியில்

LINTAS FAL 59 2517 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு


துப்பறியும்
சூர்யா — கிரண்
நவீன் பிரதாப் மூல்விக்.
தொடர்ந்து ஆராய்ச்சிகள் செய்தேன். மானுடர்களின் தோற்றம், குணம் ஆகியவற்றை நிர்ணயிக்கும் சில ஜீன்களைக் கண்டுபிடித்தேன்.
ஒருவனிடமிருந்து குறிப்பிட்ட ஜீன்களைப் பிரித்தெடுத்து, பதப்படுத்தி, இன்னொருவனுக்கு ஊசி மூலம் செலுத்தினால், அந்த ஜீன்களின் நிர்ணயிக்கப்பட்ட குணத்தையும் தோற்றத்தையும் இவன் பெறுவான்.
கல்தானுடைய ஒற்றர்கள் எல்லா பெரிய விஞ்ஞானிகளிடமும் வேலை பார்க்கிறார்கள்.
அவர்களில் ஒருவன் மூலம் என் ஆய்வு பற்றி அறிந்து கொண்டான் கல்தான்.
அவன் ஆட்கள் என்னைப் பலவந்தமாகக் கடத்திப் போனார்கள்.
© INDIAN FEATURES SYNDICATE Bombay-400092
வரவேணும் டாக்டர் சூரானர்! உன் புதிய கண்டுபிடிப்புக்காகக் கங்கிராட்ஸ்!
எனக்கு நீ உதவியாக இருப்பாயா எனக்கு வேலை செய்வாயா?
முடியவே முடியாது! நீ ஒரு அயோக்கியன்!
(தொடரும்)
13

போட்டிக் கதை — 9 (அறிமுக எழுத்தாளர்)



டைரக்டர் கோபி சந்தர் வீட்டு வாசலில் என்றைக்கும் இல்லாத பெண்கள் கூட்டம் இன்று கூடியிருந்தது.

நேற்று ஒரு படத்தின் நூறாவது நாள் விழாவில் கலைஞர்களைப் பாராட்டிப் பேசுகையில், தான் ஒரு 'டைனமிக்'கான கதாநாயகியைத் தேடிக் கொண்டிருப்பதாயும் இதுவரையில் கிடைக்கவில்லை என்றும் கூறினார். அவ்வளவுதான்! இன்று அவர் வீட்டு வாசலில் மாநாடு போல் குவிந்து விட்டனர்.

இதற்கே இப்படி நிலைமை என்றால் 'புதுமுகம் தேவை' என்று பத்திரிகையில் விளம்பரம் கொடுத்திருந்தால் என்ன ஆவது? பெண்கள் கல்லூரி அத்தனைக்கும் அன்றைக்கு விடுமுறைதான்.

இன்றைய திரைப்பட உலகில் கோபி சந்தர் ஒரு முடிசூடா மன்னனாகத் திகழ்ந்து கொண்டிருப்பவர். வருடம் ஒரு படம் ஆனாலும் சூப்பர் ஹிட், பாக்ஸ் ஆபீஸ் படம்தான் பண்ணுவார். 'பைரவி'யைச் சென்ற வருடம் வெளியிட்டார். வசூலை அள்ளிக் குவித்தது. பாராட்டுக்கள் குவிந்தன. சங்கீதத்தை முன்னணியாக வைத்துக் கதாநாயகிக்கு வெயிட் கொடுத்திருந்தார். படம் இன்றைக்கும் செகண்ட் ரன், தேர்டு ரன் என்று சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கிறது.

நாயகி '88

இவரது திறமையை மெச்சி மாநில அரசு இருமுறை சிறந்த டைரக்டராகத் தேர்ந்தெடுத்துக் கௌரவித்தது.

புதிதாக அறிமுகமாகியிருக்கும் நாயகியாக இருந்தாலும் சரி, பழைய கதாநாயகியாக இருந்தாலும் சரி, நடிகர்களாக இருந்தாலும் சரி, தங்களது பேட்டியில், கோபி சந்தர் செய்யும் ஒரு படத்திலாவது தாங்கள் நடிக்க வேண்டும் என்று சொல்வார்கள்.

தென்னகத்தில் இருக்கும் அத்தனை மொழி டைரக்டர்களுக்கும் இவர் ஒரு சிம்ம சொப்பனம். எந்தப் பிரச்னையை மையமாக வைத்துப் படமெடுப்பாரோ என்றே சிந்தனை! அடுத்த படத்திற்குப் பூஜை போட நாள் பார்க்கிறார் என்றாலே போதும்; அத்தனை ஏரியா ஆட்களும் சென்னையில் வந்து குவிந்து விடுவார்கள்!

இப்போது அவர் கதாநாயகியைத் தேடுவது உண்மை. ஆனால் இன்றைக்கேவா, என்று யோசனை செய்தார். வாசலில் கூட்டம் வேறு கூடிவிட்டது. விரைவில் அப்புறப்படுத்தி விட்டு வேலையைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன், "யோவ பீ. எம். (புரொடக்ஷன் மானேஜர்) ஆபீஸ் பாயை வெளியே உட்கார வைச்சு ஒவ்வொரு ஆளா விடச் சொல்லு. அதுக்கு முன்னாடி அவங்க எல்லார் கையிலேயும் அவங்களோட போட்டோ இருக்கணும்னு சொல்லிடு. ஒரு மணிக்கு விஜயவாடாவிலிருந்து தாசரி வர்றார்; அடையாறு பங்களாவில் தெலுங்கு ஸ்டோரி டிஸ்கஷன் இருக்கு. அதுக்குள்ளே முடிச்சாகணும்..." என்றார்.

முதலில் ஒரு பெண் உள்ளே நுழைந்தாள். கறுப்பாக இருந்தாலும் லட்சணமாக இருந்தாள். போட்டோ கொடுத்தாள். சுமாராகத்தான் ஃபோகஸ் செய்திருந்தார்கள்.

"உட்காரும்மா, தாய் பாஷை என்ன?"

"மலையாளம் சார்."

"இதுக்கு முன்னே அனுபவம் ஏதும் இருக்கா?"

"இல்லை சார்."

"நீ யாரைப் போல் நடிக்கணும்னு ஆசைப்படறே?"

"சுகாசினி."

"ஓ. கே. போயிட்டு வாம்மா. அப்புறமா தகவல் சொல்றோம்."

முதலில் பயத்தைத் தவிர்க்கச் சில கேள்வி



ஜி.எல்.ராஜேந்திரன்

கள் கேட்டு விட்டுப் பிறகு கொக்கி மாதிரி 'யாரைப் போல?' என்று ஒரு கேள்வியி லேயே அவர்களது திறமையை, அனுபவத்தை ஆர்வத்தை எடை போட்டு விட்டார். வந்தவர்களிடமெல்லாம் இந்த மூன்று கேள்விகளைத்தான் கேட்டார்.

மூன்றாவது கேள்விக்கான பதிலை யாராவது வேறு வித்தியாசமான முறையில் பதில் சொல்ல மாட்டார்களா என்று எதிர்பார்த்தார். வருபவர்கள் எல்லாம் நான் இவரைப் போல் நடிப்பேன், அவரைப் போல் பாடுவேன் என்றால் இவர்கள் எதற்கு? அதற்கு அவர்களே செய்வார்களே!

நேரம் ஆகிக் கொண்டிருந்தது. வாசலில் கூட்டம் குறைந்தபாடில்லை. என்னவோ, ஏதோ என்று தெருவில் நின்று வேடிக்கை பார்க்கும் கூட்டம் வேறு.

''யோவ் பி.எம்., என்னய்யா ஒண்ணும் தேற மாட்டேங்குது. ஒண்ணாவது நான் யார் பாணியிலும் கிடையாது சார். என் பாணி வித்தியாசமானது...ன்னு சொல்லுதா? வந்து போனது ஏதும் தேறலை. இனிமே வரப் போவதும் தேறுமான்னு எனக்குச் சந்தேகமா இருக்குது.''

மானேஜர், ''நான் வேணா வெளியே போய் செலக்ட் பண்ணி உள்ளே அனுப்பட்டுமா?'' என்றார்.

''ஒரு மண்ணும் வேணாம். அடுத்த ஆளை உள்ளே அனுப்பு.''

இப்படிச் சொல்கையில் வாசலில் ஒரே பரபரப்பு. ஜீப், வேன், கார் என்று தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் சப்தம். வெளியில் நிற்பவர்கள் எல்லோரும் தங்களுக்குள், வந்திருக்கும் வாகனங்களைப் பார்த்து விட்டு அவர்களுக்குத் தெரிந்த வரையில் விமர்சித்துக் கொண்டிருந்தார்கள்.

"யோவ்... பி.எம். வாசல்ல என்னன்னு பாரு. நாலஞ்சி வண்டிங்க லைனா வந்து நின்னுக்கிட்டிருக்கு. சி சென்டரிலிருந்து குமாரசாமி வர்ரேன்னு சொல்லியிருந்தாரு. அவரா இருந்தாலும் இருக்கலாம்...."

மானேஜர் வெளியே வந்து பார்க்கையில், வந்திருந்த ஜீப், வேன், கார் ஆகியவற்றிலிருந்து அனைவரும் தங்கள் கையில் ஆளுக்கொரு பையுடன் இறங்கிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் வெளியே வாசல் கேட்டை யாரிடமும் கேட்காமல் தன்னிச்சையாகப் பூட்டி விட்டார். வெளியே யாரும் போகாதவாறு அங்கேயே நின்று கொண்டார்.

அரசு அம்பாஸிடர் காரிலிருந்து ஒரு பெண்மணி, சில பேப்பர்களை வைத்து நாடா வைத்து இறுகக் கட்டிய தொகுதியுடன் இறங்கினார். ஓர் உயர்ந்த ரகச் சேலையை எளிமையாகக் கட்டிக் கொண்டு தலையில் வெகு ஸ்டைலாகக் கொண்டை போட்டிருந்தார். நெற்றியில் சிவப்பு நிற ஸ்டிக்கர். கண்ணில் மெல்லிய தங்க முலாம் பூசப்பட்ட பிரேமில் ஒரு வெளிர் நிறத்தில் கூலிங்கிளாஸ் அணிந்திருந்தார்.

வெளியில் நின்ற கூட்டம் அசந்து போயிற்று. எங்கே இவள் நமக்குப் போட்டியாக வந்து விடுவாளோ என்று பயந்தார்கள். ஆனால் வந்திருப்பவர்கள் அரசு அதி

வைஷாலி

புராணத்திலுள்ள ஒரு கிளைக் கதையை எடுத்து, அதற்குச் செலுலாயிட் உயிர் கொடுப்பது சாதாரணக் காரியமில்லை.

பன்னிரண்டு ஆண்டுகளாக மழையின்றி அங்க ராஜ்ஜியத்தில் பஞ்சம் தாண்டவமாடுகிறது. மழை பெய்ய வேண்டுமானால், களங்கமில்லாத ஒரு ரிஷிகுமாரன் வந்து யாகம் வளர்க்க வேண்டுமென்கிறார் ராஜகுரு. அப்படிப்பட்ட ரிஷிகுமாரனை மயக்கி அங்கதேசத்திற்கு அழைத்து வரும் பொறுப்பு வைஷாலி என்னும் தேவதாசி மகளிடம் ஒப்படைக்கப்படுகிறது. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற அவளும், அவளது தாயும் எதிர் கொள்ளும் அடுத்தடுத்த பிரச்னைகள், அந்த பிரச்னைகளை வைஷாலி எதிர்கொள்ளும் அழகு — நாலு வரிக்கதைதான்.



பஞ்சத்தாலும், மழையின்மையாலும் வாடும் அங்கதேசம் பற்றிய ஆரம்பக் காட்சிகள் — 'ஹ்ஹா!' என்று ஆச்சரியப்பட வைக்கின்றன. காமிராவிற்கும், டைரக்ஷனுக்கும் கைகுலுக்கல்கள்.

நிலா வெளிச்சத்தில் நீரில் மிதந்து போகும் படகு — இரவைக் கண்முன் நிறுத்தும் காட்சிகள் — மறுபடியும் காமிராவிற்கு 'வெரிகுட்'.

ரிஷிகுமாரனான ரிஷ்யசிருங்கராய் வங்கப் புதுமுகம் சஞ்சய். இளமை முறுக்கும், முகத்தில் தெய்வீகமும் — பார்க்க வேண்டும் நம்புவதற்கு.

முனிவரை மயக்கும் தைரிய உடைகளில் உடலை நிறைய எக்ஸ்போஸ் செய்யும் காட்சிகளில் பம்பாய் ஆர்ட்டிஸ்ட் சுபர்ணா. தேன்முகம்; பொன் நிறம். உடம்பு இன்னும் கொஞ்சம் சிக்கென்றிருக்கலாம்.

காட்சியமைப்புகள், உடையலங்காரம், பிரம்மாண்ட செட்டிங்குகள், இயற்கை வனப்பு மிகுந்த லொகேஷன்கள், அளவான ஆனால் நறுக்கென்ற உரையாடல்கள் — படத்தின் எத்தனையோ பிளஸ் பாயிண்ட்கள்.

புராணக் கதையில் சற்றே கற்பனை சேர்த்து உயிரோட்டம் கொடுத்திருக்கும் எம்.டி. வாசுதேவன் நாயர், உயர்ந்த சங்கீதத்தை இனிமையாகப் பொழிந்துள்ள ரவி, காமிராவில் கவிதை படைக்கும் மது அம்பத், இவர்களின் அற்புத ஒத்துழைப்பைத் திரைக்குக் கொணர்ந்திருக்கும் டைரக்டர் பரதன்— மலையாள சினிமாவின் ஒரு வைரக்கல் "வைஷாலி'.

— ஜெயமன்மதன்.



"ட்ரூ"வின் மற்றொரு புதிய படைப்பு.

ஷார்ட் வெர்மிசெல்லி

அதிக சுவையுள்ள உப்புமாவும் கிச்சடியும் தயாரிக்க



ட்ரூவின்
ஷார்ட் வெர்மிசெல்லி

- மிக உயர்ந்த தரத்தைக் குறிக்கும் கிரீம்-மஞ்சள் வண்ணம் கொண்டது.
- ஒட்டுவதை தவிர்க்க பருமனாகவும் வலிமையுடனும் தயாரிக்கப்பட்டது.
- மிக உயர்ந்த சுவையுடன் கூடிய கிச்சடி, உப்புமா, புலவ், பாயாசம், கீர் மற்றும் ஹல்வா தயாரிக்க மிகவும் ஏற்றது.

அறிமுகச் சலுகை
25
பைசா
தள்ளுபடி
ஸ்டாக் தீரும் வரை

ட்ரூ
ஷார்ட் வெர்மிசெல்லி
உபயோகித்து அதன் மேன்மையை உணருங்கள்

ட்ரூ பிஸ்கட்டுகள், சேமியா, வேஃபர்ஸ் —
சிறந்த பொருட்களைக் கொண்டு அன்புடனும் அக்கறையுடனும் தயாரிக்கப்படுபவை

AFL 3488



''பிணி மனை கால் கோள் விழாவில் அடிக்கல் காலில் விழுந்து விட்டதாம்...''

காரிகள் என்று சமாதானமடைந்தார்கள்.

வேனிலிருந்து இறங்கியவர் மானேஜரிடம் நெருங்கித் தம்முடைய ஐடெண்டிகார்டைக் காண்பித்தார். அதில் அவருடைய போட்டோ இருந்தது. அசோகத் தூண் சிங்கம் படம் போட்டிருந்தது. உடனே மூடிக் கொண்டார்.

மானேஜருக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. அந்த அதிகாரி தாங்கள் யார் என்று சொல்லச் சொல்ல மானேஜருக்கு வியர்த்துக் கொட்டியது.

வருமான வரித் துறை மற்றும் விஜிலென்ஸிலிருந்து வந்திருப்பதாகத் தெரிவித்து விட்டுப் பதிலுக்குக் காத்திராமல் திபுதிபுவென உள்ளே புகுந்தனர்.

டைரக்டர் பரபரப்புடன் உள்ளே உட்கார்ந்திருந்தார்.

எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக உள்ளே நுழைந்தனர். கடைசியாகத்தான் அந்தப் பெண்மணி நுழைந்தார். அவருக்கு மற்ற ஆபீசர்கள் வழி விட்டு ஏக மரியாதை கொடுத்து, சீட் ஒதுக்கினர்.

இதையெல்லாம் பார்த்த டைரக்டர் 'ரெய்டு' என்று புரிந்து கொண்டார்.

டைரக்டரைப் பார்த்து ஓர் அதிகாரி, தாங்கள் வந்த நோக்கத்தை விவரித்தார்.

''உங்க கம்பெனியிலே பல இளம் பெண்களுக்குச் சினிமா ஆசை காட்டி வரவழைத்து அரபு நாடுகளுக்குக் கடத்துவதாகவும், பல தீய செயல்களுக்குக் கட்டாயப்படுத்தி உடன்படுத்துவதாகவும் எங்களுக்குப் பல புகார்கள் வந்திருக்கு. அதோடு, நீங்க உங்க அக்கௌண்ட்ஸ்களைச் சரியா மெயின்டெயின் பண்றதில்லை என்றும், அரசு அதிகாரிகளை உங்கள் கைக்குள் வைத்துக் கொண்டு வரி ஏய்ப்புச் செய்து வருவதாகவும் எங்களுக்குத் தகவல்கள் வந்திருக்கு...''

டைரக்டர் முதலில் பயந்தார். இது யாரோட சதிவேலை என்று யோசித்துப் பார்த்தார்; ஒன்றும் பிடிபடவில்லை. பின்னர் துணிந்து, மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ''மன்னிக்கணும் சார், நான் உங்க புகார்களையெல்லாம் மறுக்கிறேன். மேலும் எங்களுடையது அந்த மாதிரி செய்யக்கூடிய கம்பெனி இல்லை. யாரோ வேண்டப்படாதவங்க எங்களைப் பற்றித் தங்களுக்குத் தவறான தகவல்களைக் கொடுத்திருக்காங்க.....''

''எது எப்படியிருந்தாலும் எங்களுக்குப் புகார்னு வந்துட்டா விசாரிக்கிறது எங்க கடமை. தினமும் பெண்களை மோசடி செய்ற கும்பல் பற்றிப் பேப்பர்ல வருகிறது. கம்பெனி பற்றியும் வருகிறது. அதனாலே நீங்க எங்களோட எல்லா விதத்திலேயும் ஒத்துழைப்புக் கொடுத்தீங்கன்னா, எங்களுக்கு வேலை சுலபமா முடியும். உங்களுக்கும் நிம்மதியாயிருக்கும். இதற்கு மறுப்புச் சொல்ல மாட்டீங்கன்னு நினைக்கின்றேன்.....'' என்றார் அந்தப் பெண் அதிகாரி.

அப்பப்பா... எவ்வளவு தீர்க்கமான பேச்சு; அதிகாரத் தோரணை! பதவி ஒன்று கிடைத்து விட்டால், அனைத்தும் தனக்குக் கீழ்தான் என்று எண்ணத் தோன்றும் போலிருக்கிறது!

டைரக்டர் அந்தப் பெண்ணைப் பார்த்து வியந்தே போனார்.

கணக்குப் புத்தகங்கள், லெட்ஜர்கள், பேங்க் பாஸ் புத்தகங்கள் சினிமா கம்பெனி யார் யார் பெயருக்கு ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது என்ற வகையறா... கையிருப்பில் இருக்கும் பணம் முதலியவற்றைத் தங்கள் எதிரில் இருக்கும் டேபிளில் கொண்டு வந்து வைத்தனர்.

பிறகு உயர் அதிகாரி ஒருவர், ''இதையெல்லாம் எங்க ஆபீஸ் கொண்டு போய்த்தான் கவனிக்கணும். ஆகையால் என்னென்ன வைத்திருக்கிறீர்கள் என்ற விவரத்தையும் அதற்கு உண்டான சார்ஜ் ஷீட்டையும் நாங்கள் உங்களுக்குக் கொடுத்து விடுகிறோம். கையெழுத்து போட்டுக் கொடுங்கள்'' என்றார்.

பெண் அதிகாரி எழுந்து உயர் அதிகாரியுடன் கலந்தாலோசித்தார். பின்னர் ஒரு முடிவுக்கு வந்து, ஒரு பேப்பரை எடுத்து அனைவரின் கையெழுத்தைப் பெற்றுக் கொண்டு டைரக்டரிடம் கொடுத்தார்.

பயந்து கொண்டே அந்தப் பேப்பரை வாங்கிப் பார்த்தார் டைரக்டர். அதில் ''இந்தப் புதுமுகம் அறிமுகம் ஆக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். மன்னிக்க வேண்டும்!'' என்று எழுதப்பட்டு, வந்திருந்த ஆறு பேரும் கையெழுத்திட்டிருந்தனர். படித்து விட்டு நிமிர்ந்து பார்த்தால் ஐந்து பேர் கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள். வந்திருந்த பெண், டைரக்டரின் காலைப் பிடித்திருந்தாள்.

''அசத்திட்டேம்மா, எழுந்திரு. என் மனமார்ந்த பாராட்டுக்கள்! ஆகஸ்ட் 7—ந்தேதி ஷூட்டிங்; தீபாவளிக்கு ரிலீஸ். மற்றதை புரொடக்ஷன் மானேஜர் சொல்வார். பெஸ்ட் ஆப் லக்!''

வந்திருந்த அனைவருக்கும் ஆனந்தக் கண்ணீர்

வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுவீர்.
பற்சிதைவை எதிர்த்திடுவீர்.



கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தைப் பெற்றிடுவீர் !

வாய் துர்நாற்றம் இக்கட்டான சூழ்நிலையை உருவாக்குகிறது. சுவாசம் சுத்தமாக, புத்துணர்ச்சியுடன் திகழவும், பற்கள் உறுதியாக, ஆரோக்கியமாக விளங்கவும் முறையாக கோல்கேட் கொண்டு பிரஷ் செய்யுங்கள். அதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.



பற்களுக்கிடையே சிக்கிக் கொள்ளும் உணவுத் துணுக்குகளில் பாக்டீரியா வளர்ந்து, வாய் துர்நாற்றத்திற்கும் பற்சிதைவுக்கும் காரணமாகிறது.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயலாற்றல் மிக்க நுரை ஆழமாகச் சென்று, துர்நாற்றம் உண்டாக்கும் உணவுத் துணுக்குகளையும், பற்சிதைவை ஏற்படுத்தும் பாக்டீரியாவையும் நீக்குகிறது.



முறையாக கோல்கேட் கொண்டு பிரஷ் செய்வதால், சுத்தமான, புத்துணர்ச்சிமிகு சுவாசத்தையும், உறுதிமிகு, ஆரோக்கியமான பற்களையும் பெற்றிடுவீர்.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும் பெப்பர்மென்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !

“என்ட மலையாளம்: என்ட மக்கள்”...

புள்ளி விவரங்களை நீங்கள் நம்பத் தயாரா?

தயார் என்றால், இந்தியாவிலேயே அதிகக் கல்வி அறிவுள்ள மக்களைக் கொண்ட மாநிலம் தென்னை துலங்கும் கேரளம். வடக்கே மஞ்ஜேஸ்வராவில் தொடங்கி தெற்கே பரசாலா வரை நீண்டிருக்கும் கேரளத்தில் கிட்டத்தட்ட மத்தியில் இருக்கும் திருச்சூர்தான் கல்வியறிவில் கேரளத்தில் முதல் ராங்க். இங்கே மட்டும் வெண்டைக்காய் அதிகம் சாப்பிடுகிறார்களா, என்ன?

பஸ்களில், நடைபாதைகளில், ஏற்றங்களில், இறக்கங்களில், கடைவீதிகளில் கிராமங்களிலுள்ள ஒற்றையடிப் பாதைகளில்... என்று எங்கு பார்த்தாலும் புத்தகச் சுமையுடன் மாணவ, மாணவியர்களைக் கண்ட போது எழுந்த ஆச்சரியக் கேள்வி இது.

விசாரித்தால் என்ன?

பார்க்கில் பழக்கமான உள்ளூர் இளைஞர் சாபுவின் உதவியுடன் பாத்திமா நகரில் வசிக்கும் ஆண்ட்ரூஸ் அவர்களைச் சந்தித்தோம்.

ஆண்ட்ரூஸ் செயிண்ட் தாமஸ் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராய்ப் பணிபுரிந்தவர். தற்போது சைதன்ய பெண்கள் டுடோரியல் கல்லூரியின் பிரின்சிபால்.

துல்லியமான ஆங்கிலத்தில், ஆண்ட்ரூஸ் ‘பரைஞ்ச’திலிருந்து:

- திருச்சூரில் கல்வி பெருக முதல் காரணமாக இருந்தவர்கள் கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவர்கள் புதிதாய் எந்த இடத்தில் குடியேறினாலும் வழிபாட்டிற்காக முதலில் சர்ச்களை நிறுவுவார்கள். கூடவே பள்ளிக்கூடங்களையும் துவங்குவார்கள். காலப்போக்கில் மேற்படிப்பிற்காகக் கல்லூரிகளையும் தொடங்குவார்கள். திருச்சூரில் பள்ளிகள், கல்லூரிகள் நிறைய, நிறைய இப்படித்தான் உருவாகி உள்ளன.
- எஸ். எஸ். எல். சி. வரை படிப்புக்காகச் செலவு அதிகமில்லை.
- கல்லூரிக்குப் போன பின்பும் மாதத்திற்குப் பதினான்கு, பதினைந்து ரூபாய் ஃபீஸாய்க் கட்டினால் போதும். இதுதவிர வழக்கமான ஸ்காலர்ஷிப்கள் வேறு.
- பஸ்களில் நம்மிடம் அறுபது காசு வாங்கும் தூரத்திற்கு மாணவர்களிடம் பத்தே காசுதான் வசூலிக்கிறார்கள். அரசாங்க பஸ்கள் மட்டுமல்ல, தனியார் பஸ்களும். படகுச் சவாரி என்றால் மாணவர்களுக்கு முற்றிலும் இலவசம்.
- குடும்பக் கட்டுப்பாடு காரணமாக ஜனத்தொகை குறைந்து விட்டது. எனவே மாணவர்களின் எண்ணிக்கை குறைவு. பள்ளிகளின் எண்ணிக்கை அதிகம். தவிர ஏறக்குறைய தெருவுக்கு ஒரு பள்ளி என்று இருப்பதால் ஸ்கூல் அட்மிஷன் என்பது வெகு சுலபம்.
- அரசாங்கம் அங்கீகரித்த கல்லூரிகளில் இடம்போதாவிட்டாலும், தனியார் நடத்தும் ஏராள இணைக் கல்லூரிகள், மாணவர்களை அரசுத் தேர்வுகளுக்குப் பயிற்சி அளித்து அனுப்புகின்றன.
- பொதுவாகவே, இன்றையத் தேதியில், கேரளாவில் எல்லா பெற்றோர்களும் தங்கள் குழந்தைகள் கல்வியறிவு பெற்றிருக்க வேண்டும் என்று திடமாக விரும்புகிறார்கள்.
- அங்கங்கே, மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்

° ஆண்ட்ரூஸ்



வதற்கான காரணம் அவர்களுக்குள் எதிர் காலம் பற்றி எழுந்திருக்கும் நம்பிக்கையின் மையே. மற்றபடி மாணவர்கள் ஒழுக்கமான வர்கள். அமைதியைக் காதலிப்பவர்கள்.



ஒரு மாணவியின் டாண் — டாண் பதில்கள்:

"உங்கள் பெயர்?"

"செல்வி ஜாய்ஸி."

"வகுப்பு?"

"ஸ்கூல் ஃபைனல்."

"ஸ்கூல் நாட்களை விரும்புகிறீர்களா? விடுமுறை நாட்களையா?"

"ஸ்கூல் நாட்களைத்தான். டைஃபாய்ட் வந்து ஒரு மாதம் ஸ்கூல் போக முடியாமல் மிகவும் வேதனைப்பட்டேன்."

"உங்கள் டீச்சர்கள் எப்படி?"

"நன்றாகச் சொல்லித் தருகிறார்கள்."

"வீட்டில் உங்களுக்குப் படிப்பு விஷயத்தில் உதவி உண்டா?"

"சகோதரர்கள், சகோதரிகள் எல்லோரும் படிப்பவர்கள். They help me a lot. தவிர தோழிகளுடன் சேர்ந்து combined studies செய்வதால் மேலும் மேலும் படிக்க வேண்டும் போல் இருக்கிறது."

"ஆங்கிலத்தில் கேள்வி கேட்டாலும் மலையாளத்திலேயே பதில் சொல்கிறீர்களே ஏன்?"

"மலையாளம் என் தாய்மொழி. ஆங்கிலம் உபயோகமாக இருக்கும் என்பதால் கற்கிறோம். ஆனால் அதற்கு அடிமைப்பட மாட்டோம். நான் மட்டுமல்ல; இங்கிருக்கும் மெஜாரிட்டி மாணவர்கள் அப்படித்தான்."



ஜிந்தாபாத்...! கேரளா ஜிந்தாபாத்!

கொச்சின் சேம்பர் ஆஃப் காமர்ஸின் செயலாளர் சேதுராமனை அவரது அலுவலகத்தில் சந்தித்தோம். கேரளத்தின் தொழிற்சாலைகளைப் பற்றியும், தொழில் வளர்ச்சி பற்றியும் அவர் பேசிக் கொண்டிருந்தார். இடையில் கேரள மக்களின் விழிப்புணர்வு பற்றியும் அவர் கூறினார். இதோ சில கேள்விகள், பதில்கள்.

"மற்ற மாநிலங்களில் பார்த்ததை விட கேரளத்தில் நிறைய ஊர்வலங்கள் பார்க்கிறோமே — இத்தனை தொழிற்சங்கங்கள் இருப்பது ஆரோக்கியமா?"

"இந்தியாவில் வேறெந்த மாநிலத்தையும் விட இங்கேதான் படித்தவர்கள் அதிகம். பெண்கள் கூட கல்வி கற்பதில் சளைப்பதில்லை. நிறையப் பெண்கள் டீச்சர்களாகவும், நர்ஸ்களாகவும் வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் யூனியன்கள் இருக்கின்றன. வீட்டு வேலை செய்யும் வேலைக்காரிகளுக்குக் கூடச் சங்கம் இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், கேரளத்தில் 'ஒற்றுமைதான் பலம்' என்று நம்புகிறார்கள். இந்த உணர்வு ஒருவித கிராம உணர்வு. ஒன்றாகச் சேர்ந்து குரல் கொடுத்தால் யாராலும் ஏமாற்ற முடியாது என்ற உணர்வு. அரசியல்வாதிகள் புகுந்து குழப்புவதால்தான் பிரச்னைகள். மற்றபடி வன்முறையை அதிகம் நம்புவர்களில்லை கேரள மக்கள். வேலைவாய்ப்பின்மை பெருகிவிட்ட பயம், கவலை — இதுதான் இன்றைய கேரளம்..."

"நாங்கள் பார்த்தவரை கேரளத்தில் பிச்சைக்காரர்கள் இல்லை. சேரிகள் குறைவு. வசதியாகத்தானே இருக்கிறார்கள்?"

"இதற்கும் காரணம் கிராம உணர்வுதான். இங்கே கூட்டுக் குடும்ப வாழ்க்கைதான் பிரதானமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. அரேபியா போன்ற வெளிநாடுகளுக்குப் பணம் சம்பாதிக்கப் போகிறவர்கள் கூடப் பண்டிகை நாட்களில் குடும்பத்தோடு சேர்ந்து இருக்க வேண்டும் என்று விரும்பி வந்து விடுகிறார்கள். கூட்டுக் குடும்ப வாழ்க்கை காரணமாகத் தீவிரமான ஏழைமை இங்கு இல்லை....."

"மக்கள் எந்தக் கட்சியின் ஆட்சியை விரும்புகிறார்கள்?"

"தமிழ்நாட்டைப் போலவோ, ஆந்திரத்தைப் போலவோ இங்கே மக்கள் — முக்கியமாய்ப் பெண்கள் கூட உணர்ச்சி வேகத்தில் யாரையும் 'ஹீரோ ஒர்ஷிப்' செய்வதில்லை. மிகவும் உஷாராக இருக்கிறார்கள். நீ ஒழுங்காய் ஆட்சி செய்தால் உனக்கு மறுபடி வாய்ப்பு. இல்லையானால் தூக்கி எறிந்து விடுவேன் என்பதுதான் இங்கே கொள்கை."



அத்தியாயம் 45

வானதிக்கு அபாயம்!

அக்கா! ஐந்து வயதில் நான் காவேரி வெள்ளத்தில் மூழ்கியது நினைவிருக்கிறதா? காவேரித் தாய் என்னை எடுத்துக் காப்பாற்றிப் படகிலே விட்டு விட்டு மறைந்தது நினைவிருக்கிறதா?'' என்று அருள்வர்மன் கேட்டான்.

''இது என்ன கேள்வி, தம்பி! எப்படி அதை நான் மறந்துவிட முடியும்? 'பொன்னியின் செல்வன்' என்று உன்னை அழைத்து வருவதே அந்தச் சம்பவத்தின் காரணமாகத்தானே?'' என்றாள் குந்தவை.

''என்னைக் காப்பாற்றிய காவேரித் தாயை இலங்கையில் நான் கண்டேன். அக்கா!.... என்ன, பேசாதிருக்கிறாயே? உனக்கு ஆச்சரியமாயில்லையா?''

''ஆச்சரியமில்லை, தம்பி! ஆனால் ஆர்வம் நிறைய இருக்கிறது. அவளைப் பற்றி எல்லா விவரங்களையும் சொல்!''

''ஒருநாளில், ஒரு தடவையில், சொல்ல முடியாது. முக்கியமானதை மட்டும் சொல்லுகிறேன். காவேரி வெள்ளத்திலிருந்து என்னை அவள் காப்பாற்றியது மட்டுமல்ல; இலங்கையில் பல தடவை என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாள். உயிரைக் காப்பாற்றியது பெரிதல்ல, அக்கா! எத்தனையோ பேர் தற்செயலாகப் பிறர் உயிரைக் காப்பாற்றுகிறார்கள். அவள் என்னிடத்தில் வைத்துள்ள அன்பு இருக்கிறதே, அதற்கு இந்த ஈரேழு பதினாலு உலகங்களும் இணையாகாது... ஏன்? நீ என்னிடம் வைத்துள்ள அன்பைக்கூட அடுத்தபடியாகத்தான் சொல்ல வேண்டும்!"

''அதைச் சொல்லுவதற்கு நீ தயங்க வேண்டாம். உன்னிடம் என் அன்பு அவ்வளவு ஒன்றும் உயர்ந்தது அல்ல; சுயநலம் கலந்தது. உண்மையைச் சொல்கிறேன், தம்பி! எனக்கு இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் மேன்மைதான் முதன்மையானது. அதற்கு நீ பயன்படுவாய் என்றுதான் உன் பேரில் அன்பு வைத்திருக்கிறேன். அந்த நோக்கத்துக்கு நீ தடையாயிருப்பாய் என்று தெரிந்தால், என் அன்பு வெறுப்பாக மாறினாலும் மாறிவிடும். ஆனால் அந்த ஊமைச் செவிட்டு ஸ்திரீயின் அன்பு அத்தகையதல்ல. நம்முடைய தந்தையிடம் இருபது வருஷங்களுக்கு மேலாக அவள் உள்ளத்தில் பொங்கித் ததும்பிக்

கொண்டிருந்த அத்தனை அன்பையும் உன் பேரிலே சொரிந்திருக்கிறாள். அதற்குப் பதினாலு உலகமும் இணையில்லைதான்!''

''உனக்கு அது எப்படித் தெரிந்தது, அக்கா!''

''எதைச் சொல்கிறாய், தம்பி!''

''அவள் நம்முடைய பெரிய தாயார் என்பது?''

''தந்தை சொன்னதிலிருந்தும் வந்தியத்தேவர் சொன்னதிலிருந்தும் ஊகித்துக் கொண்டேன், தம்பி! அவள் உன்னைத் தன் சொந்த மகன் என்று எண்ணியிருக்கிறாளா? அல்லது சக்களத்தியின் மகன் என்று எண்ணியிருக்கிறாளா?''

''அந்த மாதிரி வேற்றுமையான எண்ணம் என் மனத்திலும் உதிக்கவில்லை; அவள் மனத்தில் எள்ளளவும் இருப்பதாகத் தெரியவில்லை. நீ ஏன் அம்மாதிரி வேற்றுமைப்படுத்திப் பேசுகிறாய்?''

''தம்பி! அந்த ஊமை ஸ்திரீ வீற்றிருக்க வேண்டிய சிங்காதனத்தில் இன்று நம் தாயார் வீற்றிருக்கிறாள். அது தெரிந்திருந்தும் அவள் உன்னிடம் அத்தனை அன்பு வைத்திருந்தால், அது மிக்க விசேஷமல்லவா?''

''நான் அவள் வயிற்றில் பிறந்த மகன் அல்ல என்பது அவளுக்குத் தெரிந்துதானிருக்க வேண்டும். வயது வித்தியாசம் தெரியாமலா போகும்? அவளால் பேச முடியாது; மனத்தில் உள்ளதைச் சொல்ல முடியாது. ஏதோ சித்திரங்கள் எழுதிக் காட்டியதைக் கொண்டு எவ்வளவு தெரிந்து கொள்ளலாமோ, அவ்வளவு தெரிந்து கொண்டேன். என்னிடம் அவளுடைய அன்பு இருக்கட்டும்; நம் தந்தையிடம் அவள் எத்தகைய அன்பு வைத்திருக்க வேண்டும் என்பதை நினைத்தால் என் நெஞ்சு உடனே உருகி விடுகிறது. அக்கா! என்னுடைய பிராயத்தில் அப்பா என்னைப் போல இருப்பாரா?''

''இல்லை, தம்பி, இல்லை! உன்னுடைய பிராயத்தில் நம் தந்தை மன்மதனைத் தோற்கடிக்கும் அழகுடன் விளங்கினார். நம்முடைய சோழ குலம் வீரத்துக்குப் பெயர் போனதே தவிர அழகுக்குப் பெயர் போனதல்ல. நம் பாட்டனார் அரிஞ்சய தேவர் அழகில் நிகரற்ற வைதும்பராயன் குலத்தில் பிறந்த கல்யாணியை மணந்தார். கல்யாணியை அரிஞ்சயர் மணந்த போது அவள் பத்தரை மாற்றுப் பசும்பொன்னொத்த மேனியும் பூரண சந்திரனையொத்த முகமும் கொண்ட புவனமோஹினியாக விளங்கினாள். தற்சமயம் இத்தனை வயதான பிறகும் கல்யாணிப் பாட்டி எவ்வளவு அழகாயிருக்கிறாள் என்பதை நீயே பார்த்திருக்கிறாய். அதனால் நமது தந்தையும் அவ்வளவு அழகுடன் இருந்தார்; 'சுந்தர சோழர்' என்ற பட்டப் பெயரும் பெற்றார். நாம் நம்முடைய தாயாரைக் கொண்டு பிறந்திருக்கிறோம். திருக்கோவலூர் மலையமான் வம்சத்தில் பிறந்தவர்கள் அழகை வெறுப்பவர்கள்; அழகு வீரத்துக்குச் சத்துரு என்று நினைப்பவர்கள்.....''

''அழகுக்கும் வீரத்துக்கும் என்ன சம்பந்தம் உண்டோ, என்னமோ, எனக்குத் தெரியாது. ஆனால் அழகுக்கும் அன்புக்கும் சம்பந்தமில்லை என்பதை அறிவேன். இல்லாவிடில்....''

''இல்லாவிடில் இந்தப் பெண் வானதி எதற்காக உன்னைத் தூண் மறைவிலிருந்து கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள்? அதோ அந்தப் படகில் சேந்தன் அமுதன் பூங்குழலியை ஏன் கண்கொட்டாமல் பார்த்துப் பரவசமடைந்து கொண்டிருக்கிறான்?''

இளவரசர் புன்னகை புரிந்து, ''அக்கா! நீ எதிலிருந்தோ எதற்கோ போய் விட்டாய்! என் பெரியன்னை என்னிடம் வைத்துள்ள அன்பைக் குறித்துச் சொன்னேன். அது போனால் போகட்டும்; இவ்வுலகில் ஒருவரைப் போல் இன்னொருவர் தத்ரூபமாக இருப்பதென்பது சாத்தியமா, அக்கா?''

''ஏன் சாத்தியமில்லை? இரட்டைப் பிள்ளைகளாயிருந்தால் அது சாத்தியம். அல்லது தாயும் மகளும் ஒரு பிரா

அமரர் கல்கி

யத்தில் ஒரே மாதிரி இருப்பது சாத்தியந்தான். இதைத் தவிர பிரம்ம சிருஷ்டியில் ஒருவருக்கொருவர் சம்பந்தமேயில்லாதவர்கள், அபூர்வமாகச் சில சமயம் ஒரே மாதிரி இருப்பதும் உண்டு.''

''பழுவூர் இளையராணியும் இலங்கையில் நான் பார்த்த நம் பெரியன்னையும் ஒரே மாதிரி இருப்பதாக வந்தியத்தேவர் சொல்வது உண்மையாயிருக்க முடியுமா? நந்தினி சிறு பெண்ணாயிருந்த போதுதான் நான் பார்த்திருக்கிறேன். பழுவூர் இளைய ராணியான பிறகு நன்றாய்ப் பார்த்ததில்லை. உனக்கு என்ன தோன்றுகிறது?''

''நான் பழுவூர் ராணியைப் பார்த்திருக்கிறேனே தவிர, நம் பெரியம்மாவைப் பார்த்ததில்லை. ஆனால் வந்தியத்தேவர் கூறியது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். என் தந்தை கூறிய வரலாற்றிலிருந்து அதைத் தெரிந்து கொண்டேன், தம்பி!''

''தந்தையே கூறினாரா உன்னிடம்? என்ன கூறினார்? எப்போது கூறினார்?''

''சில நாளைக்கு முன்பு நானும் வானதியும் தஞ்சைக்குப் போயிருந்தோம். அப்போது தம் இளம்பிராயத்தில் நடந்த சம்பவத்தைக் கூறினார். இலங்கைக்கு அருகில் உள்ள ஒரு தீவில் தான் தனியாக ஒதுக்கப்பட்டதையும், அத் தீவில் ஒரு ஊமைப் பெண் தம்மிடம் காட்டிய அன்பைப் பற்றியும் கூறினார். பராந்தகர் அனுப்பிய ஆட்கள் தம்மை அத் தீவில் கண்டு பிடித்து அழைத்து வந்ததைப் பற்றிச் சொன்னார். தமக்கு இளவரசுப் பட்டம் சூட்டிய அன்று அரண்மனையில் வாசலில் நின்ற கூட்டத்தில் அவளைப் பார்த்தாராம். அடுத்த கணம் அவள் மறைந்து விட்டாளாம். அவளைத் தேடி அழைத்து வர முதன் மந்திரி அநிருத்தரையே அனுப்பினாராம். ஆனால் அந்தப் பெண் கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து கடலில் குதித்து இறந்து விட்டாள் என்று அநிருத்தர் வந்து கூறினாராம். இந்தச் சம்பவம் நம் தந்தையின் உள்ளத்தில் இருபத்தி நாலு வருஷங்களாக இருந்து அல்லும் பகலும் வேதனை அளித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்தேன். அவள் இறந்து விட்டதாகவே தந்தை நினைத்துக் கொண்டிருக்கிறார். தம்மால், தமது குற்றத்தால், அவள் மனம் புண்பட்டு உயிரை விட்டு விட்டதாகவும் எண்ணிக் கொண்டிருக்கிறார். தம்பி! சோழ சாம்ராஜ்யத்தைப் பற்றி நம் மனக் கோட்டையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். நீயும் நானுமாக முயன்று நம் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கிறது. நீ எப்படியாவது இலங்கையிலிருந்து அம்மாதரசியைத் தஞ்சைக்கு அழைத்து வரவேண்டும். தந்தையிடம் அவள் இறந்து விடவில்லை; உயிரோடு இருக்கிறாள் என்பதை நேரில் நிரூபித்துக் காட்ட வேண்டும். இல்லாவிட்டால், நம் தந்தைக்கு இந்த ஜன்மத்திலும் மனச் சாந்தி இல்லை. மறு ஜன்மத்திலும்



அவருக்கு நிம்மதியிருக்க முடியாது!"

"அக்கா! சமீபத்தில் நான் இரண்டு மூன்று தடவை மரணத்தின் வாசல் வரையில் சென்று திரும்பினேன். அப்போதெல்லாம் என் மனத்தில் தோன்றிய எண்ணம் என்ன தெரியுமா? பெரியம்மாவைத் தந்தையிடம் அழைத்துப் போய் விடாமல் செத்துப் போகிறோமே என்ற ஏக்கந்தான். அக்கா! அந்த மாதரசியை நினைத்தாலும் என் உள்ளம் குமுறுகிறது. வாயிருந்தால் மனத்திலுள்ள குறைகளையும் வேதனைகளையும் வெளியிட்டுச் சொல்லி ஆறுதல் அடையலாம். காது இருந்தால் பிறர் கூறும் ஆறுதல் மொழிகளைக் கேட்டுத் துக்கம் தீரலாம். வாயும் செவியும் இல்லாத ஒருத்தியினுடைய நிலைமையை எண்ணிப் பார்! உள்ளத்தில் குமுறும் அன்பையும் ஆர்வத்தையும் துன்பத்தையும் வேதனையையும் கோபத்தையும் தாபத்தையும் எல்லாவற்றையும் மனத்திற்குள்ளே அடக்கி வைத்திருக்க வேண்டும். அதிலும் நம் பெரியன்னையைப் போல் ஆசாபங்கம் அடைந்தவளின் மனோ நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? அவள் பைத்தியக்காரியைப் போல் இலங்கைத் தீவின் காடுகளில் சுற்றித் திரிந்து கொண்டிருப்பதில் வியப்பென்ன? அதையெல்லாம் நினைக்க நினைக்க என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது. அவளை எப்படியாவது அழைத்து வந்து தந்தையிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகிறது. ஆனால், நம் தந்தை அதை விரும்புவார் என்று நினைக்கிறாயா, அக்கா?"

"தந்தை விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, நம்முடைய கடமை அது, தம்பி! இறந்து போனவளின் ஆவி வந்து அவரைத் துன்புறுத்துவதாக எண்ணி இரவு நேரங்களில் நம் தந்தை அலறுகிறார். இதனாலேயே அவர் உடம்பும் குணமடையவில்லை."

"இது எப்படி உனக்குத் தெரிந்தது, அக்கா! இதுவும் தந்தை சொன்னாரா?"

"தந்தையும் சொன்னார்; என் தோழி வானதியும் சொன்னாள்."

"வானதி சொன்னாளா? அவளுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம். அக்கா! நீ அவளிடம் சொன்னாயா, என்ன?"

"இல்லை, இல்லை! தஞ்சை அரண்மனையில் ஒரு நாள் நிகழ்ந்ததை அவள் வாய்மொழியாகவே சொல்லச் சொல்கிறேன். இருந்தாலும் நீ ரொம்பப் பொல்லாதவன், தம்பி! சோழர் குலத்தின் பண்பாட்டையே மறந்து விட்டாய்! கொடும்பாளூர் இளவரசியிடம் ஒரு வார்த்தை பேசவும் இல்லை; சௌக்கியமாக இருக்கிறாயா என்று கேட்கக்கூட இல்லையே? மகா வீரரான சிறிய வேளாரின் புதல்விக்கு நீ செய்யும் மரியாதை இதுதானா? அழகாயிருக்கிறது!"

"அக்கா! வானதியைக் கவனித்துக் கொள்ள நீ இருக்கும்போது கவலை என்ன? சௌக்கியமா என்று நான் விசாரிப்பதுதான் என்ன?"

"ரொம்ப சரி; சற்று வாயை மூடிக் கொண்டிரு! வானதி! இங்கே வா! உன்னை இளவரசன் நன்றாய்ப் பார்க்க வேண்டுமாம்!" என்றாள் குந்தவை.


வானதி அருகில் வந்தாள். இளவரசரைப் பார்த்தும் பாராமலும் நின்று கொண்டு, "அக்கா! எதற்காகக் கற்பனை செய்து கூறுகிறீர்கள்! தங்கள் தம்பி என்னைப் பார்க்க விரும்பவில்லை. அவர் பார்வையெல்லாம் அதோ ஓடையில் இருக்கும் ஓடத்தின் மேலேயே இருக்கிறது. அவசரமாகத் திரும்பிப் போக வேண்டும் போலிருக்கிறது!" என்று பட்டுப் போன்ற மிருதுவான குரலில் கூறினாள். ஓடத்தில் இருந்த பூங்குழலியை நினைத்துக் கொண்டு ஓடத்தைக் குறிப்பிட்டாள் போலும்!

இளவரசன் நகைத்துக் கொண்டே, "அக்கா! உன் தோழிக்குப் பேசத் தெரிகிறதே நம் குடும்பத்தைச் சேர்ந்த ஊமைகளுடன் இவளும் ஒரு ஊமையோ என்று பயந்து போனேன்!" என்றான்.

"அக்கா! இவரைப் பார்த்தால் எனக்குப் பேச வருகிறதில்லை. எனக்கே நான் ஊமையாய்ப் போய் விட்டேனோ என்று பயம் உண்டா

உங்களை கலங்க வைப்பது அவ்வளவு சுலபமல்ல!




உங்கள் ரசனை
எங்களுக்குத் தெரியும்!
பின்னி
∴பேப்ரிக்ஸ்
OBM 901 TM

கிறது!'' என்றாள் வானதி.

''அது ரொம்ப நல்லது. கோடிக்கரையில் ஒருவன் இருக்கிறான். பூங்குழலியின் தமையன். அவன் மற்றவர்களிடம் ஒருவாறு தெத்தித் தெத்திப் பேசுகிறான். ஆனால் அவன் மனைவியைக் கண்டால் ஊமையாகி விடுகிறான். அதனால் அவனை அவன் விட்டார் ஊமை என்றே வைத்து விட்டார்கள்'' என்றான் இளவரசன்.

''இந்தக் கொடும்பாளூர்ப் பெண் கொஞ்சம் அந்தமாதிரிதான். முன்னேயெல்லாம் இவளைச் சற்று நேரம் பேசாமல் சும்மா இருக்கச் சொன்னால் இவளால் முடியவே முடியாது. பேச ஆரம்பித்தால் நிறுத்தவே மாட்டாள். நீ முதன் முதலில் இலங்கைக்குப் போனாயே அது முதல் இவளுடைய பேச்சுக் குறைந்து விட்டது. தனியாகத் தனியாகப் போய் உட்கார்ந்து கொண்டு எதையோ எண்ணிக் கொண்டிருக்கிறாள். அது போனால் போகட்டும். வானதி! அன்று இரவு தஞ்சை அரண்மனையில் நடந்ததையெல்லாம் இளவரசனுக்கு விவரமாகச் சொல்லு!'' என்றாள் குந்தவை.

''கொடும்பாளூர் இளவரசி உட்கார்ந்து கொண்டு சொல்லட்டும், அக்கா! இவள் இத்தனை நேரம் நிற்பதைப் பார்த்தால் இவளுடைய பெரிய தந்தை உருகிப் போய் விடுவார். தென் திசைச் சேநாதிபதி என்னைப் பார்க்கும் போதெல்லாம் இவளைப் பற்றி விசாரிப்பார். நீயோ இவளைப் பற்றி ஒன்றுமே சொல்லி அனுப்புவதில்லை. ஆகையால், நான் அவருக்குப் பதில் சொல்ல முடியாமல் திண்டாடுவேன்'' என்றான் இளவரசன்.

''வாணர் குலத்து வீரரிடம் இவளைப் பற்றி விவரமாய்ச் சொல்லி அனுப்பினேனே, அவர் ஒன்றும் உன்னிடம் சொல்லவில்லையா?''

''அவர் சொல்லித்தான் இருப்பார், அக்கா! இவர் காதில் ஒன்றும் விழுந்திராது. இவருக்கு எத்தனையோ ஞாபகம்!'' என்றாள் வானதி.

''அதுவும் உண்மைதான். உன்னுடைய ஓலையைப் பார்த்த பிறகு வேறு ஒன்றிலும் என் மனது செல்லவில்லை. இந்த சுரத்திற்குப் பிறகு என் காது கூடக் கொஞ்சம் மந்தமாயிருக்கிறது. உன் தோழியை உரக்கப் பேசச் சொல்லு!'' என்றான் அருள்வர்மன்.

பிறகு, வானதி தஞ்சை அரண்மனையில் குந்தவை துர்க்கை கோயிலுக்குப் போன பிறகு தான் தனியே மேன்மாடத்தில் உலாவச் சென்றதையும், சக்கரவர்த்தியின் அபயக் குரல் கேட்டதையும், அந்த இடத்துக்குத் தான் சென்று கீழே எட்டிப் பார்த்ததையும் அங்கே தான் கண்ட காட்சியையும் கூறினாள். இடையிடையே வானதி இளவரசனின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க நேர்ந்த போதெல்லாம் மெய்மறந்து நின்றுவிட்டாள். இளைய பிராட்டி அவளை ஒவ்வொரு தடவையும் தூண்டிப் பேசும் படி செய்வது அவசியமாயிருந்தது.

எல்லாவற்றையும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்த இளவரசன், கடைசியாகத் தமக்கையை நோக்கி, ''அக்கா! உன் தோழி முக்கியமான ஒரு சம்பவத்தை விட்டு விட்டாள் போலிருக்கிறதே! இவ்வளவையும் பார்த்துக் கேட்ட பிறகு இவள் மூர்ச்சை அடைந்து விழுந்திருக்க வேண்டுமே?'' என்றான்.

குந்தவை சிரித்தாள்; வானதி நாணத்துடன் தலைகுனிந்து நின்றாள்.

குந்தவை அவளை அன்பு ததும்பிய கண்களினால் பார்த்து, ''வானதி! நீ சற்று நேரம் ஓடைக்கரையோடு உலாவி விட்டு வா! இல்லாவிட்டால், நம் பரிவாரங்கள் இருக்குமிடத்துக்குப் போயிரு! அருள்வர்மன் இன்னும் சில நாள் இங்கேயேதான் இருப்பான். மறுபடியும் சந்திக்கலாம்!'' என்றாள்.

''ஆகட்டும், அக்கா! உலாவி விட்டு வருகிறேன்!'' என்று சொல்லிக் கொண்டு வானதி துள்ளிக் குதித்துச் சென்றாள். திடீரென்று அவ்வளவு குதூகலம் அவளுக்கு எப்படி ஏற்பட்டதோ, தெரியாது.

மலர்ந்த முகத்தோடும் விரிந்த கண்களோடும் அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த அருள்வர்மன், அவள் மறைந்ததும், தமக்கையை நோக்கினான்.

''அக்கா! தந்தையின் புலம்பலின் காரணம் எனக்குத் தெரிகிறது. ஆனால் அவர் கண்ட காட்சியைப்



பற்றி உன் கருத்து என்ன? அவர் முன்னால் காணப்பட்ட தோற்றம் என்னவாயிருக்கக்கூடும்? தந்தையின் மனப் பிரமையா? அப்படியானால் உன் தோழிக்கும் அந்தப் பிரமை எப்படி ஏற்பட்டிருக்கும்?''

''தந்தை கண்டதும் பிரமை அல்ல; வானதி கண்டதும் மாயத் தோற்றம் அல்ல. தந்தை முன் நடந்தது நள்ளிரவு நாடகம். அதில் முக்கிய பாத்திரமாக நடித்தவள் பழுவூர் இளைய ராணி நந்தினி. இதை அப்போதே நான் ஊகித்துத் தெரிந்து கொண்டேன். வந்தியத்தேவரும் நீயும் சொன்ன விவரங்களுக்குப் பிறகு அது உறுதியாயிற்று....''

''அந்த நாடகத்திற்குக் காரணம் என்ன? பழுவூர் ராணி எதற்காக அப்படிச் செய்ய வேணும், அக்கா?''

''நந்தினிக்குத் தன் பிறப்பைக் குறித்துச் சந்தேகம் உண்டு. சக்கரவர்த்தி தன்னைப் பார்த்து முன்னொரு தடவை நினைவிழந்ததை அவள் அறிவாள். அதற்குப் பிறகு அவள் தந்தை முன்னால் வருவதே இல்லை. இப்படி ஒரு நாடகம் நடத்தினால் ஏதாவது உண்மை கண்டறியலாம் என்று செய்திருக்கிறாள்...''

''தெரிந்திருக்குமா, அக்கா?''

''அதை நான் அறியேன். நந்தினியின் உள்ளத்தை அவளைப் படைத்த பிரம்மதேவனாலும் கண்டறிய முடியாது. பழுவேட்டரையர் அவளிடம் படும்பாட்டை நினைத்தால் எனக்குப் பரிதாபமாயிருக்கிறது. தம்பி! சற்று முன் அழகைப் பற்றிப் பேசினோம் அல்லவா? பெண்களில் அழகி என்றால், நந்தினிதான் அழகி. நாங்கள் எல்லாரும் அவள் கால் தூசி பெற மாட்டோம். நந்தினி முன்னால் எதிர்ப்பட்ட புருஷர்கள் அவளுக்கு அக்கணமே அடிமையாகி விடுகிறார்கள். பழுவேட்டரையர், மதுராந்தகன், திருமலையப்பன், கந்தமாறன், கடைசியாக, பார்த்திபேந்திரன்! அவளுடைய அழகுக்குப் பயந்து கொண்டு முதன் மந்திரி அநிருத்தர் அவள் பக்கத்திலேயே போவதில்லை. ஆதித்த கரிகாலன் அதனாலேயே தஞ்சைக்கு வருவதில்லை. தம்பி! நந்தினியின் சௌந்தரியத்துக்கு அஞ்சாமல், அவளிடம் தோற்றுப் போகாமல் மிஞ்சி வந்தவர், ஒரே ஒருவர்தான்!....''

''வாணர் குலத்து வீரரைத்தானே சொல்லுகிறாய்?''

''ஆம்! அவர்தான்! அதனாலேயே அவரைக் காஞ்சிக்கு ஆதித்த கரிகாலனிடம் அனுப்பியிருக்கிறேன்.''

''எதற்காக?''

''பழுவூர் ராணி கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு வரும்படி நம் தமையனுக்குச் சொல்லியனுப்பியிருக்கிறாள். அவர்களுடைய சந்திப்பைத் தடுப்பதற்காக அனுப்பியிருக்கிறேன். அப்படிச் சந்தித்தாலும் விபரீதம் எதுவுமே நேராமல் பாதுகாப்பதற்கு அனுப்பியிருக்கிறேன். கரிகாலனுக்கு நந்தினி நம் தமக்கை என்று தெரியாது. நந்தினி நம் உறவைக் கண்டு கொண்டாளா என்பதையும் நான் அறியேன்.''

''அவள் நம் தமக்கை என்பது நிச்சயந்தானா, அக்கா?''

''அதில் என்ன சந்தேகம்? தம்பி! அதை நான் அறிந்ததிலிருந்து என்னுடைய மனத்தை அடியோடு மாற்றிக் கொண்டு விட்டேன். நாம் குழந்தைகளாயிருந்த போது நந்தினியை நான் வெறுத்தேன்; அவமதித்தேன். அவள் அழகைக் கண்டு பொறாமைப்பட்டேன். நீயும் கரிகாலனும் அவளோடு பேசவும் கூடாது என்று திட்டம் செய்தேன். அவள் பாண்டிய நாட்டுக்குப் போன பிறகும் அவளிடம் நான் கொண்டிருந்த அசூயையும் வெறுப்பும் அப்படியே இருந்தன. பழுவூர்க்

கிழவரை மணம் செய்து கொண்டு திரும்பி வந்த பிறகு எத்தனையோ தடவை அவளைப் பரிகசித்து அவமானப்படுத்தினேன். அதற்கெல்லாம் பிராயச்சித்தம் செய்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன்....''

''எப்படி, அக்கா! என்ன மாதிரி பிராயச்சித்தம்?''

''அடுத்த தடவை அவளைச் சந்திக்கும் போது அவள் காலில் விழுந்து என்னுடைய குற்றங்களையெல்லாம் மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வேன். அதற்காக என்ன தண்டனை விதித்தாலும் ஏற்றுக் கொள்வேன்...''

''அதை நான் தடுப்பேன். நீ ஒரு குற்றமும் செய்யவில்லை. நீ யாரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. இந்த ஈரேழு பதினாலு உலகத்தில் உனக்குத் தண்டனை கொடுக்கக் கூடியவர்கள் யாரும் இல்லை. நீ பழுவூர் இளைய ராணி நந்தினியைப் பார்த்து அசூயைப்படவில்லை. அவள்தான் உன்னைப் பார்த்துப் பொறாமைப்பட்டாள். அவள்தான் உன்னை வெறுத்தாள்.....''

''தம்பி! இலங்கையில் பைத்தியக்காரியைப் போல் திரியும் நம் பெரியம்மாவை நினைத்து நீ நெஞ்சம் குமுறுவதாகச் சொன்னாய். அரண்மனையில் சகல சுகபோகங்களுடன் வாழ்ந்திருக்க வேண்டிய நந்தினி எப்படியெல்லாம் வாழ்க்கையில் கஷ்டப்பட்டாள் என்பதை நினைக்கும் போது என் இதயம் பிளந்து போகும் போலிருக்கிறது. யாரோ, எப்பொழுதோ செய்த தவறுகளின் காரணமாக, எனக்கு முன் பிறந்த தமக்கை இந்தக் கிழவர் பழுவேட்டரையரை மணக்க நேர்ந்து விட்டது.....''

''அக்கா! இதெல்லாம் எப்படி நேர்ந்திருக்கும் என்று உனக்கு ஏதாவது தெரிகிறதா? நம் பெரியம்மா இறந்து விட்டதாகத் தந்தை எண்ணுவதற்குக் காரணம் என்ன? நந்தினி அநாதையைப் போல் எங்கேயோ, யார் வீட்டிலோ வளர்ந்து, இந்த நிலைமைக்கு வருவதற்குக் காரணம் என்ன?.....''

''அதைப்பற்றியெல்லாம் நான் இரவும் பகலும் யோசித்து வருகிறேன். ஆனால் இன்னமும் நிச்சயமாய்க் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த இரகசியங்களை அறிந்தவர்கள் இப்போது இரண்டு பேர் நமக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய பாட்டி செம்பியன் மாதேவிக்கு ஏதோ விஷயம் தெரிந்திருக்கிறது. முதன் மந்திரி அநிருத்தருக்கு எல்லா விஷயமும் தெரிந்திருக்கும் எனத் தோன்றுகிறது. ஆனால் அவர்கள் இரண்டு பேரிடமிருந்தும் நாம் எதுவும் தெரிந்து கொள்ள முடியாது. அநிருத்தருடைய சீடன் ஆழ்வார்க்கடியானுக்கும் ஓரளவேனும் தெரிந்திருக்க வேண்டும். அவன் குருவை மிஞ்சியவன்; வாயைத் திறக்க மாட்டான். தம்பி! அதையெல்லாம் கண்டுபிடிப்பதற்கு இப்போது அவசரமும் இல்லை. நந்தினியினால் நம் குலத்துக்கு விபரீதமான அபாயமும் அபகீர்த்தியும் ஏற்படாமல் தடுப்பதுதான் இப்போது முக்கியம். வந்தியத்தேவர் சொன்னார்: பழுவூர் ராணி, மீன் சின்னம் பொறித்த மின்னலைப் போல் ஒளிரும் வாள் ஒன்றை வைத்துப் பூஜை செய்து கொண்டிருக்கிறாள் என்று. அதைக் கேட்டதிலிருந்து என் நெஞ்சு பதைத்துக் கொண்டேயிருக்கிறது. தான் பிறந்த குலம் சோழ குலம் என்பதை அறியாமல் பழுவூர் ராணி ஏதாவது செய்துவிடப் போகிறாளே என்று கவலையாயிருக்கிறது.''

''பழுவூர் ராணியிடம் எல்லாவற்றையும் சொல்லி விட்டால், என்ன?''

''சொன்னாலும் என்ன பயன் ஏற்படுமோ, தெரியாது. நம்மிடமெல்லாம் அவளுடைய கோபம் அதிகமானாலும் ஆகும். ஆனால் நமது கடமையை நாம் செய்துவிட வேண்டியது தான்!''

''அதற்காக வந்தியத்தேவரை நீ அனுப்பியிருப்பது சரிதான். ஆனால் தந்தையிடமும் தெரிவிக்க வேண்டாமா? அவர் எதற்காக உடல்வேதனை போதாதென்று மனவேதனையும் பட்டுக் கொண்டிருக்க வேண்டும்? நாம் உடனே தஞ்சைக்குப் புறப்படலாம் அல்லவா?''

''கூடவே கூடாது, தம்பி! இரண்டு நாளில் தஞ்சைக்கு நான் புறப்படுகிறேன். ஆனால் இந்தச் சூடாமணி



நீங்கள் அழகிய வண்ணங்களை நெஞ்சார நேசிப்பவர். ஆகவேதான் அவைகளின் மாயாஜாலங்களை புதிய உன்னதமான பட்டு வகைகளில் உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் உங்கள் தீபாவளித் திருநாளுக்கு மேலும் பொலிவு சேர்க்கட்டும்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

20% சிறப்பு அரசு தள்ளுபடி

இந்தியாவின் அதி உயர் விற்பனை கைத்தறி வகைகள்

● பருத்தி/பாலியெஸ்டர்/பட்டு புடவைகள் ● ஷர்ட்டிங் ● சூட்டிங் ● ஃபர்னிஷிங் ● பெட்ஷீட்கள் ● வேட்டிகள் ● லுங்கிகள் ●

விஹாரத்தில் தான் நீ இன்னும் சில காலம் இருக்க வேண்டும்.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்? தந்தையின் கட்டளையை மீறி என்னை இங்கே இன்னமும் ஒளிந்து மறைந்து வாழச் சொல்கிறாயா?''

''ஆம்; நீ இப்போது தஞ்சைக்கு வந்தால் நாடெங்கும் ஒரே குழப்ப மாகி விடும். மக்கள் மதுராந்தகர் மீதும் பழுவேட்டரையர்கள் மீதும் ஒரே கோபமாயிருக்கிறார்கள். உன்னைச் சிறைப்படுத்திக் கொண்டு வரச் சொன்னதற்காகச் சக்கரவர்த்தி மீது கூட ஜனங்கள் கோபமாயிருக்கிறார்கள். உன்னை இப்போது கண்டால், மக்களின் உணர்ச்சி வெள்ளம் பொங்கிப் பெருகும். அதன் விளைவுகள் என்ன ஆகுமோ தெரியாது. உடனே உனக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்று ஜனங்கள் கூச்சல் போட்டாலும் போடுவார்கள். தஞ்சைக் கோட்டையையும் அரண்மனையையும் முற்றுகை போடுவார்கள். ஏற்கெனவே மனம் புண்பட்டிருக்கும் த்ந்தையின் உள்ளம் மேலும் புண்ணாகும். தம்பி! இராஜ்யத்துக்கு ஆபத்து வந்திருக்கிறது என்று உன்னை நான் வரச் சொல்லி ஓலை எழுதினேன். அதே காரணத்துக்காக இப்போது நீ திரும்பி இலங்கைக்குப் போய் விட்டால் நல்லது என்று நி னை க் கி றேன்....''

''அக்கா! அது ஒருநாளும் இயலாத காரியம். நம் தந்தையைப் பார்க்காமல் நான் திரும்பிப் போக மாட்டேன். தஞ்சைக்கு நான் இரகசியமாக வருவது நல்லது என்று நினைத்தால் அப்படியே செய்கிறேன். ஆனால் சக்கரவர்த்தியை நான் பார்த்தேயாக வேண்டும். அவரிடம் என்னைக் காப்பாற்றிய காவேரி அம்மன் யார் என்பதைச் சொல்ல வேண்டும்.''

''அதையெல்லாம் நானே சமயம் பார்த்துச் சொல்லி விடுகிறேன். நீ வந்துதான் தீர வேண்டுமா?''

''நேரில் பார்த்த நானே சொன்னால், தந்தைக்குப் பூரண நம்பிக்கை ஏற்படும்; என் மனமும் ஆறுதல் அடையும். பெரியம்மாவை அழைத்துக்கொண்டு வருவதற்கு அவருடைய அனுமதியையும் பெற்றுக் கொள்

அருள்வாக்கு



''தனக்கு மிஞ்சித் தர்மம்'' என்பதற்கு நான் புது வியாக்யானம் செய்கிறேன். தனக்கு எது உயிர் வாழ்வதற்கு அத்யாவசியமோ, எதெல்லாம் இல்லாவிட்டால் உயிர் வாழ முடியாதோ, bare necessities க்கு அதிகமாக எவரும் வைத்துக் கொள்ளாவிட்டால்தான் ''தனக்கு மிஞ்சி'' கையில் தர்மத்துக்குப் பணமே இருக்கும். முடிவில்லாமல் தனக்கென்று ஆடம்பர போக்யங்களை (லக்ஷுரிகளை)ப் பெருக்கிக் கொண்டே போய் விட்டு, 'தனக்கு மிஞ்சித் தர்மம் பண்ண எதுவுமே இல்லை'' என்று கைவிரித்தால் அது நியாயமில்லை. ஆனதால் தனக்கென்று எவ்வளவு குறைவாகச் செலவழிக்க முடியுமோ, அப்படி எளிமையாக வாழ்ந்து, மிச்சம் பிடித்து, அதைத் தர்மத்துக்குச் செலவழிப்பதுதான் ''தனக்கு மிஞ்சித் தர்மம்''. தர்மம் பண்ணியே ஆக வேண்டுமே! வேதத்தில் 'தர்மம் சர' என்றும் படிப்பு ஆரம்பத்திலேயே அவ்வை 'அறம் செய விரும்பு' என்றும் சொல்லியிருப்பதைச் செய்தேயாக வேண்டுமே! ஆனதால் நமக்கு வரும்படி எவ்வளவு குறைச்சலாயிருந்தாலும் அதற்குள் தர்மம் பண்ணும்படியாகவும் செலவைக் கட்டுப்படுத்திக் கொண்டு, 'தனக்கு மிஞ்சும்'படி பண்ண வேண்டும் என்றே இந்த வசனத்தை அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் எவனுமே தர்மத்துக்காகச் சேமித்துத்தான் ஆக வேண்டும் என்றாகும். அதாவது எவனுமே கடன்பட மாட்டான். இது ஒரு பெரிய ஸ்வய உபகாரம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

வேன்....''

''அருள்வர்மா! உன் இஷ்டத்துக்கு நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் இன்னும் ஒரு வார காலம் சூடாமணி விஹாரத்தில் இரு. நான் முன்னதாகத் தஞ்சைக்குப் போகிறேன். நீ வந்திருப்பதைத் தந்தையிடம் அறிவித்துவிட்டுச் செய்தி அனுப்புகிறேன். தம்பி! நான் இங்கே உன்னைத் தேடி வந்தது உன்னைப் பார்ப்பதற்காக மட்டுமல்ல; உன்னிடம் ஒரு வரம் கோரிப் பெறுவதற்காக வந்தேன். அதை நிறைவேற்றி வைத்து விட்டால், பின்னர் உன்னைத் தொந்தரவு செய்ய மாட்டேன். அபாயத்துக்குப் பயந்து ஒளிந்திருக்கும்படியும் சொல்ல மாட்டேன். ஆண் பிள்ளைகள் அபாயத்துக்கு உட்பட வேண்டியவர்கள்தான். வீர சௌரிய பராக்கிரமங்களில் இணையில்லாதவன் என நீ புகழ் பெற வேண்டும் என்பதுதான் என் ஆசை. ஆனால் மறுபடி நீ உன்னை அபாயத்துக்கு உட்படுத்திக் கொள்ளுவதற்கு முன்னால் என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்......''

''இவ்வளவு பெரிய பீடிகை எதற்கு, அக்கா! நீ சொல்லுவதை என்றைக்காவது நான் மறுத்ததுண்டா?''

''மறுத்ததில்லை; அந்த நம்பிக்கையோடுதான் இப்போதும் கேட்கிறேன். ஆதித்த கரிகாலன் கலியாணம் செய்து கொள்ளவில்லை; கலியாணம் செய்து கொள்வான் என்றும் தோன்றவில்லை. சுந்தர சோழரின் குலம் உன்னாலேதான் விளங்க வேண்டும். என் விருப்பத்தை இந்த ஒரு விஷயத்தில் நீ நிறைவேற்றி வைக்க வேண்டும்.....''

''உன் விருப்பத்தை நிறைவேற்ற நான் சம்மதித்தால், எனக்குப் பிரியமான பெண்ணை மணந்து கொள்ள நீ சம்மதம் கொடுப்பாய் அல்லவா?''

''இது என்ன இப்படிக் கேட்கிறாய்? இருபது ஆண்டுகளாக நம் விருப்பங்கள் மாறுபட்டதில்லை. இதிலே மட்டும் தனியாக எதற்குச் சம்மதம் கேட்கிறாய்?''

''அக்கா! அதற்குக் காரணம் இருக்கிறது. நான் மணந்து கொள்ளும் பெண் நான் காணும் பகற் கனவுகளை நிறைவேற்றுவதற்கு ஒத்தாசையாயிருக்க வேண்டும் அல்லவா?''


''தம்பி! உன் பகற் கனவுகளை ஒரு பெண்ணின் ஒத்தாசை கொண்டு நிறைவேற்றிக் கொள்ளவா ஆசைப்படுகிறாய்?'' என்றாள் குந்தவை.

அச்சமயத்தில், ''ஐயோ! ஐயோ! அக்கா! அக்கா!'' என்ற அபயக் குரல் கேட்டது. குரல் வானதியின் குரல்தான்.

(தொடரும்)


குட்டிக்யூரா அழகி
Cuticura
TALCUM POWDER
SOOTHES
COMFORTS
BEAUTIFIES
குட்டிக்யூரா
டால்க்
இளம் பெண்கள் இதை
விரும்புவது இயற்கையே
CHAITRA-B-MP-2 TMR

யானை வளர்க்கும் யானை!



புல்லிக்கா ஷவரில் குளிக்கும் யானை...



எங்கும் குருவாயூர் யானையாக...



கேரளா என்றால் நினைவுக்கு வருவது முதலில் குருவாயூர்.

குருவாயூர் என்றதும் கோவிலைத் தவிர இரண்டாவதாக நினைவுக்கு வருவது — யானைகள். அங்கே, ராணுவக் கல்லூரிகள் போல யானைகளுக்கும் ஒரு பயிற்சிக் கூடம் இருக்கிறது.

கோவிலிலிருந்து மூன்று கி. மீ. தூரம் குண்டும் குழியுமான தார்ச் சாலைகளில் பயணம் செய்தால் —

புன்னத்தூர்க் கோட்டம்.

குருவாயூர் தேவஸ்தானம் பராமரிக்கும் இந்தக் கோட்டத்தில் நுழைந்தோம். ஏதோ அதிர்ஷ்ட தினத்தில் முதுமலைக் காட்டிற்குள் நுழைந்து விட்டது போல் ஒரு காட்சி.

யானைகள். யானைகள். யானைகள்.

கறுப்பு நிறத்தில்; சற்றே தேய்ந்த சிமெண்ட் நிறத்தில்: தந்தங்களுடன்: தந்தங்கள்

இல்லாமல்; முதுகில் மண்ணை வாரி வாரி அடித்துக் கொண்டு; பனை ஓலைகளை வெகு லாகவமாக வாயில் நுழைத்துக் கொண்டு...

சிறுகுளத்தில் காலில் நீளமான சங்கிலி கட்டப்பட்ட யானை, இரு பாகர்களின் தயவில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தது. பாகர்கள் தேய்த்துவிட, தேய்த்து விடத் தனக்குத் தானே ஷவர் அடித்துக் கொள்ள வசதியாய்த் தும்பிக்கை. முதுகில், குனிந்து வயிற்றில், வலது புறம்; இடதுபுறம்... கொடுக்கப்பட்ட ஆணைகளின்படி தும்பிக்கை ஷவர் திசை மாறியது. குளித்து முடித்ததும் ஆண்டவனைத் துதிக்கும் வகையில் பிளிறல்கள்.

வளமான காடு போல் பரந்திருந்த பிரதேசத்தில் சுதந்திரம் இழந்த யானைகள். காமிராவை எடுத்ததும், காலைத் தூக்கியோ, தும்பிக்கையை வளைத்தோ ஆட்டோமாடிக்காகப் போஸ் கொடுக்கும் யானைகள்.

அஸ்வன் என்ற யானையைக் கவனித்துக் கொண்டிருந்த யானைக்காரர்கள் பிரபாகரன், மற்றும் சிவசங்கரனைச் 'சோதிச்ச போது':

இங்கு மொத்தம் 41 யானைகள், 33 ஆண், எட்டு பெண்.

இரு யானைகள் கோயில் வழிபாட்டில் இருக்க, மற்ற 39 யானைகளும் புன்னத்தூர்க் கோட்டத்தில்.

தும்பிக்கையை வலதுபுறம், இடது புறம், மேலே என்று தூக்கச் சொன்னால் தூக்கும். பாகனை ஏற்றிக் கொள்ள வசதியாய் மண்டி போடச் சொன்னால் கேட்கும். மண்டி போட்டு குருவாயூரப்பனைக் கும்பிட்டுப் பிளிறச் சொன்னால் பிளிறும். தினமும் இந்தப் பயிற்சிகள் யானைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன.

பெரிய யானைகளுக்கு மூன்று பேர், சிறிய யானைகளுக்கு இரண்டு பேர் என்ற கணக்கில் மொத்தம் 41 யானைகளுக்கு 98 பாகர்கள்.

வெளிக்கோயில்களுக்கு யானைகள் வாடகைக்குக் 'கிட்டும்.' நாளொன்றுக்கு வாடகை 125 ரூபாய்.

இந்த யானைகள் எல்லாம் பெரிய பணக்காரர்கள் வேண்டுதல்களாக தேவஸ்தானத்திற்கு வழங்கியவை.

யானைகளின் தேவைகளைக் கவனித்துக் கொள்ள ஒரு சூப்பர்வைசர், புன்னத்தூர்க் கோட்டத்திலேயே 365 நாட்களும் தங்கியிருக்கும் கால்நடை மருத்துவர் ஒருவர்.

பிறந்தால் குருவாயூர் கோயில் யானையாகப் பிறக்க வேண்டும்!

கேரள மாநிலக் கட்டுரைகள்:

— சுரேஷ் பாலா

மேலட்டை மற்றும் வண்ணப்படங்கள்,
புகைப்படங்கள்: **கே. வி. ஆனந்த்**



ஸ்பெயின் நாட்டில் 'குள்ளர்கள் சங்கம்' ஒன்று இருக்கிறது. சங்கத்தின் முக்கிய நோக்கம்: "பொதுக் கூட்டம் எங்கு நடந்தாலும் அதில் குள்ளர்களுக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்க வேண்டும் என்ற உரிமையைப் பெறுவது!"

— ரமா ராமநாதன்.



"உங்க பொண்ணுக்கு நீங்க வரதட்சணை கொடுக்கலை போலிருக்கே!"

"எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

"பிழைக்கத் தெரியாத மனுஷன்னு மாப்பிள்ளையை அவ தினமும் திட்டுறதை வச்சுத்தான்!"

— தென்கனிகை ஜூலியஸ்.

"அந்த நடிகைகிட்டே ரொம்ப நாளா மேக்கப் மேனா இருந்தியே, ஏன் நின்னுட்டே?"

"'இவ்வளவு நாளா நீதானே எங்களை ஏமாத்தினது'ன்னு நடிகையோட ரசிகர் மன்றக்காரங்க என்னை அடிக்க வந்துட்டாங்க..."

— எஸ். ராகவேந்திரா.



மதுமதி வெற்றுப் பார்வையாய்ச் சந்துருவை வெறித்துக் கொண்டிருந்தாள். அவன் என்னவோ பேசிக் கொண்டிருக்கிறான் என்று புரிந்தாலும், அவன் பேசுவதைக் காதில் சரியாய் ஏற்காமல், கிரகிக்காமல் இப்படி வெறித்துக் கொண்டிருப்பது பத்து நாட்களாகச் சந்துருவிற்கு சகஜமாகிப் போயிருந்தது.

''மது நான் சொல்றதைக் கொஞ்சம் கேளேன்!'' மேஜையில் தட்டினான் சந்துரு.

''ம்ம்?''

''நாளையிலேர்ந்து நீ ஆபீஸ் போகணும்.''

''ஆபீஸா?''


''ஆமா. ஸில்வர் ஜெம்ஸ் கம்பெனியில் ரெண்டாயிரம் வாங்கறியே அந்த வேலைக்குப் போய்ப் பத்து நாளாச்சு; தெரியுமில்லே. லெட்டர் வந்தது காலைல... நீ ஆபீஸுக்கு நாளையிலேர்ந்து வரணும்னு...''

''நான் எப்படி ஆபீஸ் போக முடியும் சந்துரு... அம்மாவைப் பாத்த இல்லை? எப்படி

நீரில் மிதக்கும் நிலா

சுபா

13



இடிஞ்சி போய் உக்காந்திருக்காங்கன்னு... பூவும், பொட்டும் இல்லாம அம்மாவைப் பாக்கறப்ப என்னால தாங்க முடியலை... எப்படி இருந்தவங்க எப்படி ஆயிட்டாங்க. அவங்களை அப்படியே தவிக்க விட்டுட்டு என் காரியந்தான் முக்கியம்னு நான் வேலைக்குப் போக என் மனசு இடம் கொடுக்கலை சந்துரு...''

மதுமதியின் குரல் தழுதழுத்தது.

அன்றைக்கு அவசரம் அவசரமாய் நடராஜனே காரில் அவளைச் சென்னைக்கு அழைத்து வந்ததும், உடன் இருந்து இறுதிக் காரியங்களுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ததும், ஜகன்னாதனின் தூரத்து உறவுத் தம்பி கையால் அவருக்குக் கொள்ளி விழுகிறவரை மதுமதியின் கூடவே இருந்து அவளுக்கு ஆறுதல் சொன்னதும் மதுமதியின் நினைவில் ஃப்ரேம் ஃப்ரேமாக, நின்று நின்று சாய்ந்தன.

முதலில் சிவா. அப்புறம் அப்பா.

தனிமை திணிக்கப்படுவதில் எதற்கு இவ்வளவு தீவிரம்?

வேறு வீட்டிற்குக் குடிபோவது என்பது இப்போது அவசியமாகிப் போன மாதிரி தோன்றியது. இந்த வீட்டின் ஒவ்வொரு மூலையும் அப்பாவை நினைவூட்டிக் கொண்டிருக்கும்.

''மறுபடியும் என்ன யோசனை மது?''

''ஆமா சந்துரு... நாளையிலேர்ந்து நான் ஆபீஸ் போகணுந்தான்.''

கம்பெனி வேலை எடுத்துக் கொள்ளச் சொல்லி மித்ரா கட்டாயப்படுத்தி இருந்தான். இரண்டு பயணங்களில் ராயப்பேட்டை வீட்டிலிருந்த அத்தனையும் ஏற்கெனவே பார்த்திருந்த அடையாறு வீட்டுக்குக் குடிபெயர்ந்து விட்டன.



சற்றுத் தனிமையான பிரதான சாலையிலிருந்து பிரிந்த தெருவில் கொஞ்சம் உள்ளடங்கிய வீடு. மையமாய் ஒரு ஹால். இரண்டு பக்கங்களிலும் படுக்கை அறைகள். கொல்லைப்புறத்தில் உள்ளங்கை அகல இடம். அதில் மண்டிக் கிடந்த காட்டுச் செடிகள்.

மீராவிற்கு அந்த வீடு மிகவும் பிடித்திருந்தது. வீட்டில் நுழைந்தவுடன் ஓர் அறையைச் சுவீகாரம் எடுத்துக் கொண்டு விட்டாள்.

மதுமதி ஹாலை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த போது வாசலில் கார் சத்தம்.

மித்ரா இறங்கி, ''நான் உள்ளே வரலாமா?'' என்று கேட்டான்.

மதுமதி தயங்கி, ''ஒரே குப்பையா இருக்கு. இன்னும் அரேன்ஜ் பண்ணி முடிக்கல்லே'' என்றாள்.

''வேலையெல்லாம் ஒழுங்கா நடக்குதான்னு பார்க்க வந்தேன்.. அப்புறம் வந்து பார்க்கிறேன்.'' — வந்த உடனேயே மித்ரா கழன்று கொண்டான்.

அப்புறம் வாரத்திற்கொரு முறை நினைத்துக் கொண்டாற் போல ஞாயிறுகளில் வந்தான்.

'இந்தப் பக்கம் வேலையா வந்தேன்... அப்படியே எட்டிப் பார்த்துட்டுப் போகலாம்னு..'

''என்ன அடிக்கடி வரேனேன்னு பாக்கறீங்களா? இந்த எடத்துக்கு வந்துட்டுப் போனா நான் ரொம்ப சந்தோஷமா ஃபீல் பண்றேன்... நான் இப்படி அடிக்கடி வரதால உங்களுக்கு

ஏதாவது தொந்தரவுன்னாச் சொல்லுங்க... தலை வச்சுக் கூட படுக்க மாட்டேன் இந்தப் பக்கம்...''

'சேச்சே.. அதெல்லாம் ஒன்றுமில்லை' என்று அம்மா வாய்விட்டுச் சொல்லி விட்டாலுங்கூட, அது மனத்தில் நெருடிக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

''ஆம்பிளையில்லாத வீடு மது இது. ராத்திரி ஒன்பது, பத்துன்னு நீ அவனோட அரட்டையடிச்சிக்கிட்டிருக்க முடியுமா?'' என்றாள் அம்மா.

''எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும்மா. ஏற்கெனவே ஆபீஸ்ல என் தலை மறைஞ்சதும் கசமுசான்னு பேசிக்கறாங்க... எனக்கு ஒண்ணுமே புரியலை. பேசாம இந்த வேலையை ரிஸைன் பண்ணிட்டா என்னன்னு யோசிச்சிட்டிருக்கேன்...''

''அதெல்லாம் செய்ய வேண்டாம். நான் ஒண்ணு சொன்னாக் கோவிச்சிக்காம கேப்பியா?''

''என்ன.... சொல்லும்மா''

''நீ ஒரு கல்யாணம் பண்ணிக்கிட்டா எல்லாம் சரியாப் போய்டும் மது.''

பிருத்விராஜ் கதையை நிறுத்தினான்.

ஷில்பா இரண்டு கன்னங்களிலும் கை வைத்து விழிகளை அகல விரித்துப் பிருத்விராஜையே பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அவ்வளவுதானா?'' என்றாள், கன்னத்தில் வைத்திருந்த கையை எடுக்காமலே.

''இப்ப அவ்வளவுதான். நீங்க கதையைக் கேக்கறா மாதிரித் தெரியலையே. எங்கயோ போய்ட்ட மாதிரி இல்ல தெரியறீங்க. அன்னிக்கு அப்படித்தான். டைரக்டர் வீட்டுக்குப் போயிருந்தேன். கதை சொல்லுன்னாரு. சொல்ல ஆரம்பிச்சேன். கொஞ்ச தூரம் போறதுக்குள்ள அப்படியே சோஃபாவுல சரிஞ்சிட்டாரு. இப்ப உங்ககிட்ட உங்க வீட்டுக்கே வந்து சொல்றேன். நீங்களும் அப்படியே மயங்கிடுவீங்க போல இருக்கு.. அதான் நிறுத்திட்டேன்.''

''டைரக்டர் குடிச்சிருந்தாரா?'' என்று கேட்டாள் ஷில்பா.

''கொஞ்சம்.''

''சோஃபாவுல அப்படியே படுத்துட்டார்னு சொல்றீங்க. ஃப்ளாட் ஆயிட்டார்னு அர்த்தம். 'கொஞ்சம்'னு சொல்லி டைரக்டரை சப்போர்ட் பண்ணப் பார்க்கறீங்க... நான் மயங்கறேன்னு சொல்றீங்க...''

''அப்படி இல்ல. நான் வீடு வீடாப் போய்க் கதை சொல்றதால அப்படி ஏதாவது எஃபெக்ட் வந்துடுதோன்னு நெனைச்சேன். வீடு மாறிட்டீங்க.. கதையில மதுமதியும் வீடு மாறி இருக்கா. நெஜத்தில நீங்களும் வீடு மாறி இருக்கீங்க...''

ஷில்பா அந்த ஹாலில் சுற்றிலும் பார்த்தாள். ராணி சமையலறையில் பிருத்விராஜிற்காக எதையோ கலந்து கொண்டிருந்தாள். அப்பா பழைய பாக்கி வசூல் என்று ஏதோ ஒரு புரொட்யூசரைத் தேடிப் போயிருந்தார். இலகா எப்போது வருகிறாள், எப்போது போகிறாள் என்றே தெரியாத அளவு மாறி இருக்கிறாள்.

''பிருத்வி... நான் ஒண்ணு சொன்னாத் தப்பா எடுத்துக்க மாட்டீங்களே...''

''என்ன?''

''நான் உங்களை விட சின்னவ. புதுசா ஃபீல்டுல நொழைஞ்சி மேல வரமுடியுமான்னு பாத்துட்டிருக்கறவ. புது ஹீரோயின்னா எளக்காரமாவே மத்தப் பேர் எல்லாம் ட்ரீட் பண்றச்சே நீங்க மட்டும் என்னை 'வாங்க' 'போங்க'ன்னு சொல்றது எனக்கு ஒரு மாதிரி இருக்கு. 'வா' 'போ'ன்னே சொல்லுங்களேன்.''

''ஷில்பா.''

''நீங்க என்னை 'வா' 'போ'ன்னுதான் கூப்பிடணும். சரியா?''

''ம்'' என்றான் பிருத்விராஜ் லேசான குற்ற உணர்வுடன், நெஞ்சு நிறைய சந்தோஷத்துடன்.

''என்ன கேட்டீங்க... புது வீடு மாறிட்டியான்னு தானே? இந்த அப்பாவோட கூத்து. கௌரவமா இருக்கணுமாம். வாடகை விஷயமெல்லாம் அவரே பாத்துக்குவாராம். எங்களுக்கு இவ்வளவு பெரிய வீடு தேவையே இல்லை. வீடா இது பங்களா மாதிரி இருக்குது. இன்னும் வீட்டுக்குப் பின்னால பாக்கலியே நீங்க. தோட்டம். தோட்டத்திலே ஊஞ்சல். நான் நெனைக்கறேன், அப்பா என்னை அடகா வெச்சி இந்த வீட்டைச் சம்பாதிச்சிருப்பாருன்னு.''

''என்ன ஷில்பா இது?''

''அப்படித்தான் இருக்கும் பிருத்வி. எங்க அப்பா மூஞ்சைப் பாத்து யார் அவருக்கு இவ்வளவு பெரிய வீட்டை எடுத்துக்கோன்னு கொடுக்கப் போறாங்க. வாடகை வேற நான் பாத்துக்கறேன்னு சொல்றாரு. எங்கேயிருந்து கிடைக்கும் அவருக்கு வாடகை?''

ராணி சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள். கையில் ட்ரே வைத்திருந்தாள். ட்ரேயில் ஒரு எவர்சில்வர் தட்டில் அவசரமாகக் கிளறப்பட்ட உப்புமா. எவர்சில்வர் தம்ளரில் தண்ணீர், காப்பி.

ட்ரேயை டீப்பாய் மீது வைத்தாள்.


''எடுத்துக்குங்க பிருத்விராஜ்'' என்

''என் மனைவியை, 'நீ ரொம்ப அழகா இருக்கே சுஜாதா'ன்னு சொன்னது தப்பாப் போச்சு...''

''ஏன்?''

''இப்பத்தான் உங்க மண்டைல உதிச்சுதான்னு, சண்டைக்கு வந்துட்டா!''

— ஆர். வசந்தகுமார்.



றான்.

"ஒங்களுக்குச் சிரமம்."

"இப்படி சொல்றதுதான் சிரமம். என் ஷில்பா ஒருத்தரை வீட்டுக்கு வரச் சொல்லி இருக்குன்னா, அவரு சாதாரணப்பட்ட ஆளு இல்லேன்னு எனக்குத் தெரியும். உங்களைப் பத்திக் கதை கதையாச் சொல்லும். உங்க மதுமதியைப் பத்திச் சொல்லும். நான் ஒண்ணு கேக்கட்டுமா?"

"என்னங்க?"

"என்ன ராணின்னு கேளுங்க. நெஜமாவே ஒரு மதுமதி இருக்காளா!"

"இருந்தா."

"இருந்தான்னா... இப்ப இல்லையா?"

பிருத்விராஜ் என்ன பதில் சொல்லப் போகிறான் என்று ராணியுடன் சேர்ந்து ஷில்பாவும் ஆவலுடன் பார்த்தாள்.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு பிருத்விராஜ் திரும்பிப் பார்த்தான். திலகா இறங்கினாள். ஷில்பாவின் இன்னொரு சினிமா உடை அணிந்திருந்தாள். காரில் டிரைவிங் சீட்டில் உட்கார்ந்திருந்தவனுக்குக் கையசைத்துக் காண்பித்தாள்.

"அதான் திலகா. என் தங்கச்சி."

திலகா ஏறக்குறைய ஷில்பா போலத்தான் இருந்தாள். ஷில்பாவைவிட கொஞ்சம் பருமனாக.

வாசல் படியில் காலை வைக்கும் போது 'லாலல்லா' என்று ஒரு ஹம்மிங்கை உதட்டில் பொருத்திக் கொண்டு வந்த திலகா, பிருத்விராஜனைப் பார்த்ததும் ப்ரேக் போட்ட மாதிரி நின்றாள்.

"நான் அடிக்கடி சொல்லுவேனே திலகா. நீரில் மிதக்கும் நிலா கதையை எழுதற ரைட்டர்னு. இவர்தான்."

"ஹலோ" என்று ஒற்றைக் கையை உயர்த்தி ஆட்டினாள். "எனக்கு டயர்டா இருக்கு ராணிக்கா. காப்பியை மேல கொண்டு வரியா? ஸாரி...."

அந்த 'ஸாரி' பிருத்விராஜைப் பார்த்து.

"பரவாயில்லைங்க" என்றான் பிருத்விராஜ்.

திலகா அவன் பரவாயில்லையை உதாசீனப்படுத்தி விட்டு மாடியேறினாள்.

பிருத்விராஜ் சங்கடமாக உணர்ந்தான்.

"உன் தங்கை ஒன்னை மாதிரி வெட்கப்படற டைப் இல்ல ஷில்பா. கொஞ்சம் கலகலப்பான டைப்..." என்றான் ஏதாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக.

"அடக்கம் இல்லாதவள்னு சொல்றீங்க, அப்படித்தானே?" என்றாள் ராணி.


"சேச்சே" என்றான் பிருத்விராஜ்.

சத்யா ஸ்டூடியோவின் இரும்பு கேட் சுத்தமாகச் சாத்தப்பட்டு, வாசல் கூர்க்கா நுழைய வந்த ஒவ்வொரு காரின் உள்ளேயும் குனிந்து குனிந்து பார்த்து ஸ்டூடியோவிற்குள் அனுமதித்துக் கொண்டிருந்தான்.

ஸ்டூடியோவில் நுழைந்ததும் வலது பக்கம் திரும்பும் தார்ச் சாலையில் நாமும் திரும்ப வேண்டி இருக்கும். திரும்பலாம். மறுபடி ஒரு இடது. மறுபடி ஒரு இடது. அந்த இடத்தின் கடைசியில் ஃப்ளோர் இருந்தது. ஃப்ளோரையும் ஒரு பிரும்மாண்டமான கதவு மூடிப் பாதுகாக்க, திட்டி வாசல் ஒன்று அந்தக் கதவில் திறந்திருந்தது.

உள்ளே ஃப்ளோரில் செயற்கை வெளிச்சம். ஏராளமான ஒயர்கள் பின்னிக் கொண்டு தரையில் இருந்த செவ்வகமான ஸ்விட்ச் போர்டை நோக்கி ஓடின. ஸ்விட்ச் போர்ட் அருகில் ஒரு காக்கிச் சட்டை முகத்தில் கவலையுடன். செட்டில் ஒரு தண்டவாளத்தில் காமிரா நின்றது. காமிராவிற்குப் பக்கத்தில் ஸ்ரீநாத் நின்று கொண்டிருந்தான்.

செட்டில் ஒரு ஹால் உருவாகி இருந்தது. சோஃபாசெட். கீழே பளிங்குத் தரைக்குப் பதிலாகப் பூசப்பட்ட பெயின்ட். மேலே தொங்கிய விளக்கு. அங்கங்கே அந்தரத்தில் விளக்குகள் பொருத்தப்பட்டு ஹாலையே குறிபார்த்தன. ஹாலில் இருந்து புறப்பட்ட மர மாடிப்படிகள் நிஜம் போலத் தோற்றமளித்து அந்தரத்தில் தடாலென்று முடிவடைந்தன.



"கட்சித் தொண்டரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது ரொம்ப பேஜாராப் போச்சுங்கிறியே! எப்படி?"

"தட்டுலே சோறு போட்டுக் குழம்பு ஊத்துறதுக்குள்ளே, 'சோறு இங்கே! குழம்பு எங்கே?'ன்னு கோஷம் போட ஆரம்பிச்சிடுறார்!"

— செவல்குளம் 'ஆச்சா'

ஸ்ரீநாத் ஒரு சிகரெட்டை உருவிப் பற்ற வைத்துக் கொண்டான். சலித்துக் கொண்டான். ஓர் இழுப்பு இழுத்தான். காமிராவைப் பார்த்து, ஹாலைப் பார்த்து காமிராவை எப்படி இயக்கலாம் என்று தீவிரமாக யோசித்த வேளையில், இளங்குமரன் உள்ளே நுழைந்தான். கண்கள் சிவந்திருந்தன. கோபத்தால், ஸ்காட்லாண்ட் தேசத்தின் ஸ்ட்ராங்கான மால்ட் விஸ்கியால்.

பாண்ட், ஷர்ட்தான் அணிந்திருந்தான். நேரே கடகடவென்று வந்து ஸ்ரீநாத்தை அணுகினான்.

ஸ்ரீநாத் அருகில் சலனம் கேட்டுத் திரும்பிப் பார்ப்பதற்குள், இளங்குமரன் "ராஸ்கல்" என்றான் கோபமாக. பளாரென்று அறைந்தான்.

ஸ்ரீநாத் கன்னத்தைப் பிடித்துக் கொண்டான். வாயில் இருந்த சிகரெட் எகிறியது.

செட்டில் இருந்த அத்தனை பேரும் ஸ்தம்பித்துப் போய்ப் பார்த்தார்கள்.

(தொடரும்)



பாண்ட்ஸ் ஸாண்டல் டால்க் வாங்குவதற்கு,
இப்போது இன்னும் இரண்டு அருமையான காரணங்கள்!
இலவசம்!
இலவசம்: இத்துடன்
பாண்ட்ஸ் ஸாண்டல் சோப் (50 கிராம்)
இலவசம்: இத்துடன்
பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் சோப் (50 கிராம்)
POND'S Sandal Talc
FREE
POND'S Sandal Talc
FREE
POND'S Sandal Soap
FREE
Pond's Dreamflower Soap
மதிப்பில் பொன்னைப் போன்ற அரிய நறுமணம், இப்போது மேலும் மதிப்பு பெறுகிறது! ஒவ்வொரு 140 கிராம் பாண்ட்ஸ் ஸாண்டல் டால்க் வாங்கும்போதும் ஒரு பாண்ட்ஸ் ஸாண்டல் சோப் இலவசம். ஒவ்வொரு 60 கிராம் ஸாண்டல் டால்க் வாங்கும்போதும், ஒரு பாண்ட்ஸ் ட்ரீம் ஃப்ளவர் சோப் இலவசம்.
* இந்த சலுகைகள் சரக்கு உள்ள வரை தமிழ் நாட்டில் மட்டுமே.
* இச்சலுகை இல்லாமலும் பாண்ட்ஸ் ஸாண்டல் டால்க் கிடைக்கும்.
HTA 7053
பாண்ட்ஸ் ஸாண்டல் டால்க்.
அரிய நறுமணம். மதிப்பில் பொன்னைப் போல் உயர்ந்தது.

வட்ட மேஜை

அமெரிக்கா போல் இங்கும் நடந்தால்...

° இந்திய நாட்டுக் குடிமகன்களின் ஒருமித்த குரலாக இடம் பெற்றுள்ள இந்த வாரத் தலையங்கத்திற்குப் பிரதமரின் பதில் கிடைக்குமா? அல்லது அதையும் ஒரு சாதனைப் பட்டியலில் சேர்த்து விட்டார்களே என்று காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு 'ராஜ நடை' நடப்பாரா?

மயிலாடுதுறை.
கிருட்டிணா. எழில்.

° 'அதர்மப் போக்கில் மேலும் ஒரு சாதனை!' கண்டேன் அத்துடன் இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். கலைஞர் முதல்வராக இருந்த போதே, மணியாச்சிக்கு வீரவாஞ்சி என்று பெயரிட மத்திய அரசை வலியுறுத்தினார்; குமரி அனந்தன் ரயிலை நிறுத்திப் போராட்டமே நடத்தினார்; உண்ணாவிரதம் இருந்தார். அப்போதெல்லாம் அசைந்து கொடுக்காதவர்கள், இப்போது அவசர அவசரமாக வாஞ்சிநாதன் பெயரை வைக்க முனைவது தேர்தலை மனத்தில் கொண்டுதானே!

கும்பகோணம்,
டி. எஸ். சீதாராமன்.

° மணிப்பால் பற்றிய கட்டுரை மிக அருமை. வக்கிர உணர்வுகளுக்கு இடம் கொடாது மாணவ மாணவிகள் ஒன்றாகத் தங்கிப் படிக்கும் செய்தி நிச்சயம் 21—ஆம் நூற்றாண்டில்தான் நடக்கும். எனவே மணிப்பாலை 21 — ஆம் நூற்றாண்டு நகரம் என்று கூறுவதில் வியப்பேதுமில்லை.

தலைஞாயிறு. ந. இளங்கோவன்.

° மணிப்பால் மாணவர் குரூப் போட்டோவில் இப்படி ஆணும் பெண்ணும் இணைந்து கைகோத்துப் போஸ் கொடுத்துள்ளதை வெளியிட்டிருக்க வேண்டுமா? அதுவும் அட்டைப்படத்தில்!... ஏற்கெனவே வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கும் பெற்றோர்கள் எவ்வளவு பேர் இந்த அட்டைப்படத்தைப் பார்த்து இனி பெண்களை வெளியில் தைரியமாகப் படிக்க அனுப்ப முடியும்?

திருநெல்வேலி, — 11.
டாக்டர் எஸ். ராமநாதன்.

° சிற்றுக் கொட்டகைகளிலும், மாட்டுத் தொழுவத்திலும் நடக்கும் கல்லூரிகளைப் பற்றிப் படித்துச் சலித்துப் போன எங்களுக்கு மணிப்பாலில் செயல்படும் கல்லூரிகள் பெரும் ஆறுதலளித்தன.

கோவை, — 43, உமார்த்தி.

° 'நல்ல ஆலோசகர் இல்லாததால்தான் இன்று குழப்பங்களின் சிகரத்தில் கலைஞர் இருக்கிறார். இந்நிலை மாற அவருக்கு நல்ல ஆலோசகர் தேவை' என்று கூறும் அப்துல் சமதுவின் கருத்து மறுக்க முடியாத உண்மை.

சீர்காழி, சண்பை. சிவ. சண்முகம்.

° கலைஞரின் தியாகம் — நுண்ணறிவு — நிர்வாகத்திறமை ஆகிய அனைத்தும் தமிழகத்துக்கு முழுமையாகப் பயன்படும் விதத்தில் அவர் மீண்டும் முதல் அமைச்சராக ஆகும் நாளை ஆவலோடு எதிர்பார்க்கிறேன் என்று, கலைஞரின் பொதுவாழ்வுப் பொன் விழாவின் போது முரசொலியில் அப்துல் சமது எழுதினார். ஆனால் இன்றோ உறவு முறிந்தவுடன் குழப்பங்களின் சிகரத்தில் கலைஞர் இருக்கிறார், என்கிறார். இதுதான் அரசியலா?

மயிலாடுதுறை.
டி. சோமசுந்தரம்.

° டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி அவர்கள் அளித்த பேட்டியினைப் படித்தேன். அமெரிக்கத் தேர்தலில் போட்டியிட அவ்வளவு நல்லொழுக்கங்கள் தேவையா...! அமெரிக்காவைப் போல் இந்தியாவிலும் தேர்தல் வைத்தால் நிச்சயம் இப்பொழுதுள்ள அரசியல்வாதிகளில் பலருக்குத் தேர்தலில் போட்டியிடும் தகுதிகள் இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்லி உணர வைத்து விட்டார்; பாராட்டுக்கள்!

திருக்கடையூர். இரா. சாந்தி.

° 'தராசு பதில்கள்' மீண்டும் தொடங்குவது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இனிமேல் தராசுக்கு விடுமுறை அளிக்கும் முன்பு வாசகர்களாகிய எங்களையும் கலந்து கொண்டு விடுமுறை அளிக்கவும்.

ஹோசூர். ஆர். முரளி.

° 'காரணம் கேட்காதீர்கள்' என்னும் போட்டிக் கதைக்குரிய மையக்கரு என்னைக் கவர்ந்தது. பெண் பார்க்கும் படலத்தில் ஒரே சமயத்தில் இரண்டு வித்தியாசமான குணநலன்கள் கொண்ட மணமகன்களை ஒரு மணப்பெண் சந்திக்க நேர்ந்தால், அச்சம்பவத்தின் மூலம் எத்தனை சிக்கல்கள் ஏற்படுமென்பதை மிக அழகாகச் சித்திரித்த கதாசிரியர் 'ஸரோஜி'யின் கற்பனை வளத்திற்குப் பாராட்டுக்கள்!

திருச்சி — 5, தமிழ்தாசன்.

° 'பொங்குமாங்கடல்' கதை அல்ல; நிஜம்! விடுதலைக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சியை இவ்வளவு உணர்ச்சி பூர்வமாகச் சொல்லிய 'கல்கி'யாரே, நீங்கள் சத்தியமாக அமரராகவில்லை! எழுத்துக்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

குத்தாலம், எஸ். ராஜா.

° ''சார், மை வச்ச வெரலைக் காட்டுனா அந்த ரூவா தருவாங்க சார். எங்கம்மாவுக்கு அனுப்புவேன். அது ரவிக்கை எடுத்துக்கிடும் சார்... எனக்கு ஓட்டு வேணாம்...மைமட்டும்...'' நமது நாட்டு ஜனநாயகம், தேர்தல் முறை, ஆட்சியுரிமை, வறுமை போன்ற அனைத்துப் பிரச்னைகளையுமே தெளிவாக்கி விட்டது. பெரிய மருதுவின் அந்தப் பதில். அற்புதமான கதை. 'கறுப்பு மை' புருஷோத்தமனுக்குப் பாராட்டுக்கள்.

சிறுமுகை, ஜீ. கதிரேசன்.

° 16.10.88—ந்தேதி கல்கி இதழில் 'ராஜாஜி வாழ்க்கை வரலாறு பகுதியில் 'திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து வந்திருந்த ஸி. என். அண்ணாதுரை...' என்றிருக்கிறது. 'திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்திருந்த ஸி. என். அண்ணாதுரை...' என்றிருக்க வேண்டும் என்பதைத் தங்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேட்டூர் அணை,
சேலம் செங்கடர்.

° நங்கை நல்லூர் நாயகியின் திருவருளைப் பற்றிய பேட்டியைப் படித்தபோது நாங்களே பக்தியோடு அம்மனின் முன் கை கூப்பி வணங்குவது போல் ஓர் உணர்வு ஏற்பட்டது.

சீர்காழி. ஜெயப்ரியா.

மாற்றம்



வளர்த்தியான ஒரு வாலிபனுக்குத் திருமண மோகம், காதல் பாதிப்பு, எதிர் பார்ப்பு — இப்படி ஏதாவது ஏற்படாமல் இருக்க முடியுமா? தன் வருங்கால இல்லாள் பற்றிய இனிய கனவுகள் கற்பனைச் சிறகு கள் கொண்டு வட்டமடிக்காமலா போகும்?

இல்லை. கௌதமனுக்கு இத்தகைய இயற்கை உந்துதல் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தனக்கு வரவேண்டிய மனைவி குறித்து இவன் ஆலோசித்ததாகவே தெரியவில்லை. கல்யாணமே விரும்பாத பிரும்மச்சாரியோ? அப்படியும் இல்லை. இது ஒரு தனி பிரகிருதி.

சந்தடியற்ற புறநகர்ப் பகுதிகளில் குடியிருக்கிறான் - அலுவலகம் அருகிலேயே இடம் கிடைத்தும் வசிக்க விரும்பவில்லை. சக ஊழியர்கள் தம்முடன் வந்து தங்குமாறு கேட்டுக்கொண்டும் இவன் ஒப்புக்கொள்ள வில்லை. கும்பலும் கூச்சலும் இவனுக்குப்

பிடிக்காது.

கூடிக் கலந்து பழகுவதிலும் ஆர்வம் கிடையாது. ஆபீஸ் நண்பர்களைத் தன் ஜாகைக்கு வரவேற்பது, அவர்கள் வீடுகளுக்கு இவன் போவது, கிளப், கேண்டீன், மீட்டிங்... என்று அரட்டை வம்பளப்பு — எதற்கும் இடம் கொடுப்பதில்லை.,

பிறரை மதிக்காத கர்வி, முசுடு என்றும் சொல்லிவிட முடியாது. உடன் இருப்பவர்களை உதாசீனப்படுத்தும் குணக்கேடும் இல்லை.

''கௌதமன், நாளைக்கு உன் வீட்டுக்கு வரப்போகிறேன்'' என்று யாராவது சொன்னால் புன்சிரிப்புத்தான் பதில். சம்மதிக்கிறானா, இல்லையா என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும் என்கிற நினைப்போ?

''கௌதமா, இன்னிக்கு ஆபீஸ் விட்டதும் நீ என்னோடு என் வீட்டுக்கு வந்தாகணும். டின்னர் அங்கேதான்.'' — இப்படி அழைக்கும் நண்பர்களுக்கும் புன்சிரிப்புதான் கௌதமனின் பதில். வற்புறுத்தினால் தட்டிக் கழிப்பது நிச்சயம். அவனை அழைத்துவிட்டு, காத்திருந்து ஏமாந்தவர்கள் மறுநாள் கோபிக்கும்போது, அதே புன்முறுவலால் சமாதானப்படுத்துவான்.

இவனுடைய வாழ்க்கை லட்சியம்தான் என்ன? விருப்பு — வெறுப்புகள் எவை? நடப்பு வாழ்வு பற்றிய கணிப்பும் எதிர்பார்ப்பும் இவனுக்கு உண்டா? எதற்கும் கவலைப்படுவதாகவும் தெரியவில்லை. ஆசாபாசங்களோ, அலுப்பு சலிப்புகளோ பாதிப்பதில்லை.

''மகாமூடகமான ஆசாமி. மனப்போக்கை மூடி மறைக்கிற அழுத்தக்காரன்'' என்றெல்லாம் சகாக்கள் சொல்வதுண்டு.

இப்படிப் பல நண்பர்கள் நேரில் விமர்சிக்கும்போது கூட மந்தஹாஸத்தையே பதிலாக வெளிப்படுத்துவது கௌதமனின் வழக்கம். அந்த விமர்சனத்தை அங்கீகரிக்கிறானா, மறுக்கிறானா — கண்டுபிடிக்க முடியாது.

''எதிர்ப்புணர்வு இல்லாத, பொறுப்புணர்வு இல்லாத இன்றைய மத்தியதர வர்க்கத்தின் பிரதிநிதி கௌதமன். சகிப்புத் தன்மையைப் பலவீனமாகக் கொண்ட ஏழை — எளிய பாட்டாளி வர்க்கத்தின் பரிணாமம் இவன்'' — அலுவலக நண்பன் புரட்சிச் சிந்தனையாளன் விசுவநாதனின் விமர்சனம்.

கௌதமன் ஒழுங்கு முறைக்கு எடுத்துக்காட்டு. மணி ஒன்பது அடிக்கும்போது அலுவலகத்தில் நுழைவான். இதில் மற்றவர்களுக்கு எரிச்சல், ''ரிஸ்ட் வாட்சு கூடக் கட்டாதவன். கரெக்ட் டயத்திற்கு வருகிறான். உங்களுக்கு என்ன கேடு? தினமும் லேட்தான். கௌதமனைப் பார்த்தாவது கற்றுக் கொள்ளக் கூடாதா?'' — மானேஜர் தினமும் எடுத்துக் காட்டுவார்.

இவ்வளவுக்கும் தாமதமாக வருகிறவர்கள் ''எக்ஸ்க்யூஸ் மீ!'' சொல்லி, அசட்டுச் சிரிப்பு உதிர்க்காமல் போவதில்லை.

உள்ளே நுழைந்ததும் நேரே தன் இடத்தில் போய் அமர்வான். வேலையில் மூழ்கி விடுவான். அநாவசியப் பேச்சு கிடையாது. இடைவேளை ஓய்வு நேரத்தில்தான் இருக்கையை விட்டு எழுந்திருப்பான். எவரிடமும் பேச்சுக் கொடுக்காமல், பார்வையை அக்கம் பக்கம் செலுத்தாமல் சாப்பாட்டுக்குப் போய்ச் சேருவான். இதே போலத்தான் வேலை நேரம் முடிந்ததும் குனிந்த தலை நிமிராமல் வெளியே வந்து விடுவான். ஒரு நிமிடம் கூடத் தாமதிக்க மாட்டான். நேரக் கணக்கில் கண்டிப்பான ஒழுங்கு முறை.

மானேஜர் ஏதாவது அவசர வேலை என்று சில நிமிடங்கள் இருக்கச் சொன்னால், வழக்கம் போல் முறுவலித்துவிட்டு வெளியேறி விடுவான். நின்று பேசினால் தானே?

''என்ன கௌதமா, சாப்பிட்டாச்சா?''

பதில் புன்சிரிப்பு.

''எங்கே நீ சாப்பிடுகிறாய்?''

புன்சிரிப்பு.

''இந்த ஹோட்டல் சாப்பாட்டுக்குத் தலை முழுக ஒரு வழி, நல்ல பெண்ணாய்ப் பார்த்துக் கல்யாணம் செய்துக்க. தினமும் நல்ல சாப்பாடு கிடைக்கும். கூடவே...''

இதற்கும் பதில் புன்முறுவல்.

''இது ஒரு விசித்திரப் பிராணி.''

''அவன் சிரிக்கிற போது எனக்கு ஆத்திரம்தான் வருது.''

''சனியன் பிடிச்சவன், வாய் விட்டாவது உரக்கச் சிரிக்கிறானா? உரக்கப் பேசினால் தானே, சிரிக்க!''

''இது உருப்படாத கேசப்பா!''

''இவன் எவளையாவது காதலிச்சு, தோல்வி கண்டிருப்பானோ?''

''கௌதமன் ஒரு புதிரப்பா. கேட்ட கேள்விக்குச் சுருக்கமான பதில். வீண் பேச்சு கிடையாது. இவ்வளவு நல்லவன் முகமூடிக்காரன் இந்தக் காலத்துக்குத் தாங்குமா?''

''தாங்காது. தாங்காது.''

ஆபீஸ் நண்பர்களிடையே இதே பேச்சு. போகப் போக அவர்கள் கௌதமை மறக்கத் தொடங்கினார்கள்.

ஒரு நாள்......

ஆபீஸ் கடிகாரம் ஒன்பதைத் தாண்டிப் பதினைந்து நிமிடங்கள் கடந்து விட்டன. மாதவும், ராமச்சந்திரனும், விசுவநாதனும், ஓமனக்குட்டியும், ராதையும் வழக்கம் போல தாமதமாக வந்து சேர்ந்து விட்டார்கள். இன்னும் கௌதம் வந்து சேரவில்லை.

மானேஜருக்கு வியப்பு. கலங்கிப் போனார். ''ஏன் இன்னும் நம்ம கௌதமைக் காணோம்? உங்களுக்கு ஏதாவது தெரியுமா?''

பியூன் குட்டப்பன் பிள்ளை வாய் நிறையத் தாம்பூலக் குதப்பலுடன் சிரிப்பும் பேச்சுமாக இந்தச் செய்தியை ஒலிபரப்பினான்.

''கௌதமன் இன்னுமா வரலை?''

''என்ன இது, அதிசயமாயிருக்குதே?''

''லீவு லெட்டர் கூடக் கொடுக்கலை. பர்மிஷன் போடலை.''

''சனிக்கிழமை ஆபீசுக்கு வழக்கம் போல வந்தவனுக்கு, திங்கட்கிழமைக்குள்ளே

ஜோஸப் வென்னூர்

என்ன ஆகியிருக்கும்?''

''தெரியல்லியே.''

''எடுத்த லீவைக் கான்ஸல் செய்திட்டு வேலைக்குத் திரும்பறவன், இன்றைக்கு திடுதிப்புன்னு லீவு எடுத்திருக்கிறான். என்ன காரணமாக இருக்கும்?''

''யாருக்குத் தெரியும்?''

ஆபீஸில் ஆளுக்கு ஆள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''உடம்பு சுகமில்லையா?'' ஓமனக்குட்டி.

''ஓர் ஆளை கௌதமன் வீட்டுக்கு அனுப்பிப் பாருங்களேன்,'' — ராதை.

''இந்தப் பெண் பிள்ளைங்களுக்கு எப்போதும் ஆபத்தும் விபத்தும்தான் தோணும். வேறே காரணம் தோணுதோ?''

''எதுக்கும் குட்டன் பிள்ளையை அனுப்பிப் பார்க்கலாம்.''

சர்வ சம்மதமாக இந்த யோசனை ஏற்கப் பட்டது.

இந்தச் சமயத்தில் கௌதமன் வந்து சேர்ந்தான்.

அட, ஆளே மாறியிருக்கிறானே!

மடிப்புக் கலையாத டிரஸ். ஒழுங்காய் வாரிப் படிந்த முடி. கொஞ்சம் சென்ட் வாசனை. நிமிர்ந்த பார்வை. கச்சிதமாய்க் கத்தரித்த மீசை. வழக்கத்திற்கும் அதிகமாக மலர்ந்த சிரிப்பு.

இவன் கௌதமன்தானா...?

அலுவலக சகாக்கள் அதிசயப் பிறவியைக் காண்பது போல கௌதமனை விழி அகலப் பார்த்தார்கள்.

''ஏன் என்னை எல்லாரும் இப்படிப் பார்க்கிறீங்க?'' —சிரிப்பொலியுடன் கௌதமன் கேட்டதும் அவர்களுடைய ஆச்சரியம் அதிகரித்தது. பக்கத்தில் வந்து அவன் கைகுலுக்கிய போது விசுவநாதனுக்குத் தன் நிலையிலேயே சந்தேகம் வந்துவிட்டது.

எவரும் பேசவில்லை. ஒருவரை ஒருவர் வியப்பும் பிரமிப்புமாகப் பார்த்துக் கொண்டு பார்வையாலேயே வினா — விடைகளைப் பரிமாறிக் கொண்டிருந்த போது, கௌதமன் உரக்க அறிவித்தான்.

''இன்றைக்கு உங்கள் எல்லோருக்கும் என் சார்பில் இரவு விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அவசியம் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.''

ஏன்? எதற்கு? இந்த மாற்றமெல்லாம் எப்படி ஏற்பட்டது?

வாய் திறந்து கேட்கக்கூட நா எழவில்லை.

கௌதமன் உரக்கப்பேசுகிறான். உரத்துச் சிரிக்கிறான். டீக்காய் டிரஸ் செய்திருக்கிறான். தாமதமாக ஆபீஸ் வந்திருக்கிறான். விருந்துக்கு அழைக்கிறான்... இந்தத் திடீர் மாறுதல்களுக்கு என்ன அர்த்தம்?

''நான் திருமணம் செய்து கொண்டேன், என் வழக்கப்படியே அடக்கமாக, அமைதியாக.''

காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை.

கௌதமன் தினமும் அலுவலகத்திற்கு நேரம் கழித்து வருவது. சிகரெட்டைத் தொடாதவன் நடுநடுவே தம் அடிக்க எழுந்து போய், விச்ராந்தியாகத் திரும்புவது. 'மூட்' வராமல் வேலையைத் தட்டிக் கழிப்பது, மானேஜரின் ஏசல்களுக்கு ஈடு கொடுக்க அசட்டுச் சிரிப்பும் சால்ஜாப்பும் கைவசம் வைத்திருப்பது, வம்பு — அரட்டை என்றால் புகுந்து கொள்வது...

கௌதமன் மாறியிருப்பதைக் காட்டிக் கொண்டிருந்த அவனது உரத்த சிரிப்பும் பேச்சும் இப்போது இயல்பாகி விட்டன.


திருமணத்தைப் பற்றிச் சிந்தித்தோ, கற்பனை செய்தோ பழக்கப்படாதவன், வரப் போகும் மனைவி குறித்து எந்தக் கணிப்பும் எதிர்பார்ப்பும் இல்லாதிருந்தவன், எப்படி திடுதிப்பென்று கல்யாணம் செய்து கொண்டான்?

இதற்கு மட்டும் அவனிடமிருந்து பதில் கிடைக்கவில்லை.

வழக்கம் போல் பியூன் குட்டன்பிள்ளை டீக்கடையிலிருந்து வாங்கி வந்த தினசரி இதழைப் பிரித்துப் படித்த முதல் நபர் விக்கித்துப் போனார். மற்றவர்களிடம் அச்செய்தியைக் காட்டினார். அவர்களும் அதிர்ந்துபோனார்கள். பேசக்கூடச் செயலற்றுப் போனார்கள். இது உண்மையா? ஏன் இப்படி நிகழணும்? அப்படி என்ன கட்டாயம் ஏற்பட்டிருக்கும்?

கௌதமன் தற்கொலை செய்து கொண்டு விட்ட செய்தி பளிச்சென்று பிரசுரமாகியிருந்தது மேஜையில் கிடந்த நாளிதழில்.

தமிழாக்கம்: **சௌரி**




அரசியல்வாதி (பள்ளி ஆசிரியையிடம்): இதோ பாரும்மா... என் பையனுக்கு நீ மூணு மார்க் போட்டதுக்குக் கூட நான் வருத்தப்படலே. ஆனா பேப்பர்லே 'வெரிபுவர்'னு எழுத நீ யாரு? என் சொத்து மதிப்பு என்ன, எனக்கு பினாமி பெயரிலே எவ்வளவு சொத்து இருக்கு, கட்சிப் பணம் மட்டும் ஏங்கிட்டே எவ்வளவு இருக்குங்கற விவரம் உனக்குத் தெரியுமா?

— எஸ். ராகவேந்திரா.



"STANDARD"
FIREWORKS
ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ்
விழாக்கால கொண்டாட்டம்
டாண்டர்டு-பண்டிகை தீப ஒளியின் மகிழ்ச்சியையும் எழிலையும்
ட்டுகிறது. உயர்ந்த தரத்திற்கு உறுதிசெய்யும் ஃபயர் ஒர்க்ஸ்-
ாதுகாப்பானது & உன்னதமானது. உங்கள் உள்ளத்திலே
கிழ்ச்சி பொங்கிடச் செய்யும்-குழந்தைகளின் சிரிப்பொலியும்,
னுமினுக்கும் வண்ண வேடிக்கைகளும். பூத்திரிகளும்,
வடிகளும், சரங்களும் ஊரையே ஆனந்தத்தில் ஆழ்த்தும்
கிமை! ஆஹா... இரவே தங்கமென மின்னித்திகழும்!
டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ்-தீபாவளியின் மகிழ்ச்சியை
ருக்கவொண்ணு ஒன்றுக்கிவிடுகிறது.
JAYA

திருமதி S.V. சேகர் என்ன சொல்லுகிறார்?



Bisleri CLUB SODA

திருமதி S.V. சேகர்

இதோ பாருங்க, படபிடிப்புக்கு போற இடத்திலே கண்ட தண்ணீரை குடித்து உடம்பை கெடுத்துக்காதீங்க. எங்க பார்த்தாலும் காலரா நோய் பரவலா இருக்காம்.

S.V. சேகர்

ஆமா, டெல்லியில் நடந்ததுதான் தெரியுமே!

திருமதி S.V. சேகர்

தண்ணீரை நல்லா காய்ச்சி வடிகட்டி குடித்தால் மட்டும் போதாது. அப்படியும்கூட அதிலே அழிக்கமுடியாத சில கிருமிகள் இருக்கு. சென்னை பாட்லிங் கம்பெனியில் குடிதண்ணீரை "ரிவர்ஸ் ஆஸ்மாஸிஸ்" முறையில் சுத்தப்படுத்தி, சுகாதார முறையில் "பிஸ்லேரி கிளப் சோடா"வை தயாரிக்கிறார்கள். அதை நானே நேரில் பார்த்தேன் அதனாலே, நீங்களும் மறக்காம பிஸ்லேரி கிளப் சோடாவை தாகம் எடுக்கும்போது குடிக்கணும்.

S.V. சேகர்

எனக்கு மாத்திரம் காலரா, மஞ்சகாமாலைன்னு பயம் இல்லையா என்ன!

தயாரிப்பாளர்: சென்னை பாட்லிங் கம்பெனி லிட்.

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — V

ராஜ்மோகன் காந்தி

13



முதல்வர்களுள் முதல்வர்!

புதிய கல்வித் திட்டத்துக்கு எதிர்ப்பு ஓயவேயில்லை. அது ஸி.ஆரை ஆட்டம் காணச் செய்ததெனில் அதை அவர் காண்பித்துக் கொள்ளவில்லை. சுற்றுப் பயணங்களைத் தொடர்ந்து மேற்கொண்டார். போகுமிடங்களிலெல்லாம் மக்கள் திரளாகக் கூடி வரவேற்றனர்.

பிப்ரவரியில்தான் முதன் முதலாக முதல்வர் பதவியில் மாற்றம் ஏற்படலாம் என்பதற்கான சூசகம் கிடைத்தது. ஸி.ஆருக்கு அடுத்தபடியாக, இரண்டாவது இடத்தை அமைச்சரவையில் வகிப்பவராகக் கருதப்பட்ட ஸி. சுப்பிரமணியம், 'ஸி.ஆர். அனைத்திந்திய காங்கிரஸ் தலைவராவார் என்றும் நேருவின் மந்திரி சபையில் மீண்டும் சேர்வார் என்றும் ஓய்வு பெறுவார் என்றும் பரப்பப்பட்டு வரும் வதந்திகளில் உண்மையில்லை' என்று அறிக்கை விட்டார். எதிர்க் கட்சி எம்.எல்.ஏ. அந்தோணிப் பிள்ளை, ''இரண்டு வருஷங்களுக்கு முன் ராஜாஜியின் தலைமையைக் கடவுள் தந்த வரமாகக் கருதியவர்களே, இப்போது அவர் பதவியிலிருந்து விலக வேண்டும் ஏன்று நினைக்கிறார்கள்'' என்று சட்டசபையில் பேசினார். அந்தோணிப் பிள்ளையின் சகா ஜீவானந்தமோ, ''ராஜாஜி மிகவும் களைப்படைந்தவர் போல் பேசுகிறார்'' என்று குறிப்பிட்டார். ஆனால் இவற்றையெல்லாம் விடக் கெட்ட குறி சொல்வது போன்ற வார்த்தைகள் முந்நாள் முதல் அமைச்சரான ஓ. பி. ராமசாமி ரெட்டியாரிடமிருந்து வந்தன. மார்ச் மாதம் ஒன்பதாம் தேதி மேல் சபையில் பேசும் போது அவர் சொன்னார்: ''பிடிவாதத்தைத் தளர்த்தி, திட்டத்தைத் தயவு செய்து கைவிடுங்கள். இது கறுப்புச் சட்டைக்காரர்களுக்கு வழங்கப்பட்ட சக்தி வாய்ந்த ஆயுதமாகி விட்டது. திட்டத்தைத் தொடர்ந்து அமுல்படுத்துவது நமது கட்சிக்குச் சாவு மணி அடிப்பது போலாகும்.''

ரெட்டியாருக்கு பதில் கூறும் விதமாக ஸி.ஆர். தமது வாதங்களைச் சமர்ப்பித்தார். அதுவே கல்வித் திட்டம் சார்பில் அவருடைய இறுதிச் சுற்று வாதங்களாக அமைந்தன. ''திட்டத்தைக் கைவிடுவது தவறு. நான் ஒரு பழங்காலப் போர் வீரன். பின்வாங்க மாட்டேன். விலங்கினங்களைப் பாருங்கள். முகம் காட்டி எதிர்க்கும் எந்த மிருகமும் வெற்றி பெறும். முதுகைக் காட்டும் விலங்கினம் தோல்வியையே சந்திக்கும்.''

புதிய கல்வித் திட்டம் காரணமாகப் பள்ளிக் கூடங்களில் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருப்பதை ஸி. சுப்பிரமணியம் எடுத்துக் காட்டினார். மேலும் ஜூன் மாதத்தில் திட்டம் நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றார். அவ்வளவுதான். ஒரே ஆர்ப்பாட்டமாகி விட்டது. சட்டசபை காங்கிரஸ் கட்சியின் கூட்டம் நடைபெற வேண்டும் என்று எம்.எல்.ஏக்கள் வலியுறுத்தினர். மார்ச் 24 என்று அதற்குத் தேதியும் நிர்ணயிக்கப்பட்டது. உச்ச கட்டம் நெருங்கி விட்டது.

இதற்கிடையில் ஸி.ஆரை நுரையீரல் நோய் தாக்கியது. 'நிமோனியா' என்றனர் டாக்டர்கள். தாம் விலக வேண்டிய தருணம் வந்து விட்டதை அவர் உணர்ந்தார். ஆனால் அப்போதும் புதிய கல்வித் திட்டம் தொடர வேண்டும் என்றே ஏங்கினார். இதையே பிரச்னைக்கு ஒரு தீர்வாகவும் அவர் சமர்ப்பித்தார். ''நான் என் தலையைக் கொடுத்து விடுகிறேன். அதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். இதற்கு நான் சம்மதித்தால் அவர்கள் கல்விச் சீர்திருத்தத்தைக் கைவிடாமலிருக்கலாம். ஸி. சுப்பிரமணியத்தைத் தலைவராக ஏற்கலாம்.''

ஆனால் காமராஜர் தமக்கும் சாணக்கியம் தெரியும் என்று நிரூபித்தார். மார்ச் 23—ல் ராஜாஜியை அவருடைய பஸ்லுல்லா சாலை வீட்டில் சந்தித்து, ''நீங்களே தொடர்ந்து முதலமைச்சராயிருங்கள், ஆனால் திட்டத்தை நிறுத்தி வையுங்கள்'' என்றார். ''நான் தொடர்ந்து இருப்பது என்பது இனி சாத்தியமேயில்லை'' என்றார்

ஸி.ஆர். அவர் ராஜினாமா செய்வது உறுதியாகி விட்ட நிலையில், காமராஜ் ஒரு சலுகையை வழங்கினார். அது, புதிய கல்வித் திட்டத்தை உடனடியாக ரத்து செய்வதில்லை என்பதுதான். இருவருமாகச் சேர்ந்து சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தை ஒத்திப் போடத் தீர்மானித்தனர்.

மார்ச் மாதம் இருபத்தைந்தாம் தேதி, காலை நாளிதழ்கள், 'ராஜாஜி ராஜினாமா செய்ய விரும்புவதாகப் பரவலாகப் பேச்சு' என்று செய்தி வெளியிட்டன. அதே தினம் சட்டசபைக்குள் ராஜாஜி மெதுவாக நடந்து சென்றார். உடல்நிலை காரணமாகப் பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு இன்று தான் அவர் அவைக்கு வர முடிந்தது. அவர் பலவீனமாகவும் முகம் வெளிறியும் காணப்பட்டார். ஐந்து நிமிஷங்கள் தமக்கு அளிக்குமாறும் ஓர் அறிவிப்புச் செய்ய விரும்புவதாகவும் தெரிவித்தார். அமைதியான, தெளிவான குரலில் பேசினார். ஊசி விழுந்தால் கூடக் கேட்கும் அளவுக்கு அவையில் அமைதி நிலவியது.

இம்முறை நான் நோய் வாய்ப்பட்டதிலிருந்தே பொறுப்புக்களிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணி வந்தேன். விடுவிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். மாற்று ஏற்பாடுகளை இயன்ற அளவில் சிறந்த முறையில் நான் செய்தாக வேண்டும்.''

கல்வித் திட்டம் பற்றி அவர் பேசவில்லை. தமது களைத்துப் போன உடல்நிலை தவிர வேறு எது பற்றியும் குறிப்பிடவில்லை.

புதிய தலைவர் பதவிக்கு காமராஜரை வரதராஜுலு நாயுடு முன்மொழிந்தார். தேர்தல் நடந்தது. அதற்கு ஸி.ஆர். தாமே பொறுப்பேற்று, தலைமை வகித்து, நடத்தித் தந்தார். ராஜாஜி கேட்டுக் கொண்டதன் பேரில் மற்றொரு வேட்பாளராக ஸி. சுப்பிரமணியம் நின்றார். காமராஜுக்கு 93 வோட்டுக்களும் ஸி. சுப்பிரமணியத்துக்கு 41 வோட்டுக்களும் கிடைத்தன. ஸி. ஆர். தேர்தல் முடிவை அறிவித்தார். பெருத்த ஆரவாரத்துக்கிடையில் காமராஜுக்கு மலர் மாலைகள் குவிந்தன. தமது மந்திரி சபையை அமைக்க அவர் இரு வாரங்கள் எடுத்துக் கொண்டார். புத்திசாலித்தனமாக ராஜாஜி அமைச்சரவையில் இருந்த பெரும்பாலானோரை அப்படியே இருத்திக் கொண்டார். ஸி. சுப்பிரமணியத்தையும் விட்டுவிடவில்லை. சேர்த்துக் கொண்டார். ஏப்ரல் 13—ம் தேதி ஸி. ஆர். முதல்வர் பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

ராஜினாமா பற்றி ஸி. ஆர். நேருவைக் கலந்தாலோசிக்கவில்லை. ஸி. ஆரின் இந்த எண்ணம் பற்றி முன்கூட்டியே அறிந்திருந்த நேருவும் அவரைத் தடுக்க முற்படவில்லை. ஆக மொத்தம், ஸி.ஆர்., நேருவை இழுக்காமலும் அவரை மாட்டி விட்டுச் சங்கடத்தில் ஆழ்த்தாமலும் தமது பணியை ஆரம்பித்து, நடத்தி, முடித்துக் கொள்ளவும் செய்தார்.

ராஜினாமாவுக்குச் சில நாட்களுக்கு முன் நண்பர் ராமராவுக்குப் பின்வருமாறு எழுதினார் ஸி. ஆர்: ''என் பங்குக்கு இப்போது சோதனைகளை அனுபவித்து வருகிறேன். எனக்காக யாரும் பச்சாத்தாபப்பட அவசியமில்லை. எல்லாம் நானே உருவாக்கிக் கொண்டவையே.''

கல்வித் திட்டமும் அதன் பின்விளைவான ஸி.ஆரின் ராஜினாமாவும் ஒரு பக்கமிருந்தாலும் மற்றொரு புறத்தில் ஸி.ஆர். மாகாணத்துக்குப் பொருளாதார ஸ்திரத்தன்மை அளித்திருந்தார். ஸி. ஆர். பதவி ஏற்பதற்கு முன் அன்றைய மத்திய நிதி அமைச்சர் தேஷ்முக், ''சென்னை மாகாணத்தின் நிதி நிலைமையில் அபிவிருத்தி ஏற்படவில்லையென்றால் அந்த அரசு அளிக்கும் காசோலைகள் செல்லாக் காசாகி விடும்'' என்று கவர்னர் ஸ்ரீ பிரகாசாவிடம் எச்சரித்திருந்தார். இப்போதோ, 'மாகாணத்தின் நிதி நிலைமை ரொம்பத் திருப்திகரம்' என்று கவர்னர் தெரிவித்தார். ஸி.ஆரின் ராஜினாமாவுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் மேலவை உறுப்பினர் வி. கே. ஜான் முதல்வருக்கு எழுதிய கடிதத்தில், ,அரசுத் திட்டங்கள் பலவற்றை நான் கடுமையாக எதிர்த்தாலும், உங்கள் ஆட்சியில்தான் லஞ்ச ஊழலுக்கு இடமேயில்லை என்பதை உணர்ந்திருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார். சென்னை உயர்நீதிமன்ற பிரதம நீதிபதி பி. வி. ராஜமன்னார், ''நீதிபதிகள் நியமனம் பற்றிய பிரச்னைகள் ஒரு சில நிமிஷங்களில் ஒரு கப் காப்பி அருந்தியபடியே தீர்க்கப்பட்டு விடும்'' என்று நினைவு கூர்ந்தார். ''நீதித் துறையின் பணிகளில் ராஜாஜி அரசு குறுக்கிட்டதேயில்லை'' என்றார் மற்றொரு நீதிபதி சந்திரா ரெட்டி. ''ஸி.ஆரின் ஆட்சிக் காலத்தில் நிர்வாக யந்திரம் மிகச் சிறப்பாக இயங்கியது'' என்று எக்ஸ்பிரஸ் குறிப்பிட்டது. இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல் இருந்தது மேலவையில் எதிர்க் கட்சிகளின் தலைவர் லக்ஷ்மணசாமி முதலியாரின் பாராட்டு:

''சட்டமன்றத்துக்குத் தேவைப்படும் ஆற்றல்களை அவரை விட அதிகமாகப் பெற்றிருப்பவர் கிடையாது. சட்டமன்றத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை அவரை விட நன்றாக அறிந்தவர் இல்லை. சட்ட மன்றங்களின் பாரம்பரியப் பெருமைகளை அவரை விடச் சிறப்பாகக் காத்துத் தந்தவர் இல்லை. அவரை விட அதிகமாகச் சட்டமன்றத்துக்குக் கௌரவம் அளித்து அதன் மதிப்பை உயர்த்தியவர் வேறு யாரும் இல்லை.''

தமிழாக்கம்: **கி. ராஜேந்திரன்.**

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — VI பொங்கல் சிறப்பிதழில் தொடங்கும்.

கல்கி

தீபாவளி மலர்

1988



விமரிசையான வண்ணப்படங்களின் வரிசை

அட்டைப்படம்:

* இடது பாதம் தூக்கி ஆடும் நடராஜப் பெருமானின் நடனத்தில்மனம்குவியமேலட்டையைப் புரட்டவே மனம் வராது!

அருள்வாக்கு:

* காஞ்சி முனிவரின் வண்ணப்படம்; அருளுரை.
* ஜெயேந்திரர், சங்கரானந்தேந்திரர் வண்ணப் படங்கள்.

ஆன்மிகம்:

* ஷிர்டி பாபா — வண்ணப்படம்: லதா.
* அண்மையில் கும்பாபிஷேகம் கண்ட திருவாரூர் தியாகராஜர் வண்ணப்படம் மற்றும் திருத்தலக் காட்சிகள்: தனுசு.

புராணம்:

* உத்தர ராமாயணம் தெரியும்; இது வேறு ஓர் அபூர்வமான அற்புத ராமாயணம்! வண்ணப் படங்கள்: விஜு.

தல யாத்திரை:

* உடுப்பி மத்து கிருஷ்ணரை நேரில் தரிசிப்பது போல் வண்ணப்படம். மோகினி அலங்காரத்திலும் காணலாம்!

அழகிய இந்தியா:

* காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை பாரதத்தின் எழில்களை வண்ணங்களில் வடித்துத் தருபவர்: கே. வி. ஆனந்த்.

நகைச் சுவை:

* ஓவியர் உமாபதியின் வண்ணச் சிரிப்பு மற்றும் அரசியல் கார்ட்டூன்.
* ஏராள நகைச்சுவை வெடிகள்.

கலைகள்:

* யக்ஷகானம் என்ற புத்துயிர் பெற்ற அபூர்வக் கலை இதயத்தை மட்டுமல்ல, அதன் வண்ணங்களால் கண்ணையும் பறிக்கும்! வண்ணப் படங்கள்: யோகா.
* தமிழகத்தின் கைவினைஞர்கள்; அவர்களுடைய கலை, மற்றும் வாழ்க்கை.

இலக்கியம்:

* மீ. ப. சோமு தேர்ந்தெடுத்த பொறுக்கு மணியான கவிதைகளுக்கு எடுப்பான வண்ணச் சித்திரங்கள் தீட்டியிருப்பவர் கோபுலு.

அமரர் கல்கி:

* தவுல் கந்தப்பப்பிள்ளை கூறிய கதைகள் வரிசையில் மூன்றாவதான ''நாடகக்காரி'' — அமரர் கல்கியின் குறுநாவல், ம. செ. தீட்டிய வண்ணச் சித்திரங்களுடன் ஜொலிக்கிறது.

மற்றும்: —

* கவிமலர்; கோகுலம் பக்கங்கள்; மங்கையர் மலர்; ஏராளச் சிறுகதைகள்; கட்டுரைகள்; புகைப் படங்கள்; பிரபஞ்சன் எழுதிய குறுநாவல்.

இப்போதே உன்னூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள். விலை ரூ. 30/—. ரிஜிஸ்தர் தபாலில் பெற ரூ. 37/— அனுப்பவும்.

மானேஜர், கல்கி, சென்னை — 600 032.

மஹாலயம் (அல்லது மஹாளயம்)




பெரிய இருப்பிடம், கல்யாணாதி சுபங்களுக்கு இருப்பிடம் மஹான்களுக்கு இருப்பிடம் என பல பொருள்கள் உண்டு. அதாவது. மஹான்களான பித்ருக்கள் பூமியில் வந்து 16 நாட்கள் தங்கி, புத்ரன் முதலியவர்களுக்கு சுபத்தைச் செய்யும் காலம் என்று பொருள். ஸூர்யன் கன்யா ராசியில் புகுந்தபோது, ஆஷாடம் முதலான 5 ஆவது அபர பக்ஷத்தில் பித்ருக்கள் பூமிக்குச் செல்ல ஏவப்படுகின்றார்கள். அச்சமயம் நமது பெற்றோர், அவர்களது பெற்றோர்களுடன் கூடி நம்மை நாடி வருகின்றனர். அச்சமயம் மஹாளய அன்னச்ராத்தமாகச் செய்வது உத்தமம். இந்த 16 நாட்களில் செய்ய முடியாதவர் அன்ன ச்ராத்தமானால் அடுத்த பக்ஷத்திலும் செய்யலாம்.

தீபாவளி அமாவாஸ்யைவரை பித்ருக்கள் அன்ன ச்ராத்தத்தை எதிர்பார்க்கிறார்களாம். விதிப்படி ஹோமம் செய்து அன்னம் போட முடியாவிடில் அன்னத்திற்கு ப்ரதிநிதியாக வெள்ளி நாணயத்தை அளித்து (அதாவது ப்ராம்மணர்களை வரித்து, ஆஸனாதிகளையும் தக்ஷிணையும் அளித்து) தர்ப்பணம் செய்வதாம். அதே ஹிரண்ய ச்ராத்தம் எனப்படும். அங்ஙனம் பிரதி தினம் செய்ய முடியாதவர் பித்ரு, மாத்ரு திதி அல்லது மஹாபரணீ, வ்யதீபாதம், மத்யாஷ்டமீ முதலிய புண்யகாலத்தில் ஹிரண்யம் செய்வது பழக்கம். ச்ராத்த ப்ராம்மணர்களைப் போல் அல்லாமல், ஸாதாரண ஸமாராதனை போல் அன்று அன்னமிடுவது வழக்கம். அதுவும் தற்சமயம் பலவிடங்களில் நடப்பதில்லை. தக்ஷிணை அளித்து அனுப்புவதுடன் நிற்கின்றது. வீணான செலவுகளைக் குறைத்துக் கொண்டு மஹாளயத்தை அன்ன ச்ராத்தமாகச் செய்வதே உத்தமம். ஹிரண்யமாகவாவது செய்து அன்னமிட வேண்டும். 16 நாட்களிலும் தர்ப்பணத்தையேனும் விடாமல் செய்து ஒரு நாளாவது ஹிரண்ய ச்ராத்தம் செய்ய வேண்டும். அதனால் ஸகலவிதமான நன்மையும் பெறவேண்டும்.



மஹாளயம் செய்வதால் உண்டாகும் பலன்



1. ப்ரதமையில் ச்ராத்தம் செய்தால் தனலாபமுண்டாகும்.
2. த்விதீயை ச்ராத்தம் ஸந்ததியைத் தரும்.
3. த்ரீதீயா ச்ரார்த்தம் நல்ல வரன் அல்லது நல்ல மருமகளைத் தரும். அல்லது கோரிய வரத்தைத் தரும்.
4. சதுர்த்தி ச்ராத்தம் நமது பகைவர்களை அகற்றும்.
5. பஞ்சமீ ஸம்பத்தை உண்டாக்கும்.
6. ஷஷ்டி கர்த்தாவைப் பிறர் பூஜிக்கும்படிச் செய்யும்.
7. ஸப்தமீ பரலோகத்தில் ஒரு தேவ கோஷ்டிக்குத் தலைவனாகச் செய்யும்..
8. அஷ்டமீ உயர்ந்த புத்தியை அளிக்கும்.
9. நவமீ நல்ல மனைவியைத் தரும். துஷ்ட மனைவியை நல்லவளாகச் செய்யும். அடுத்த பிறவியிலும் நல்ல மனைவியைத் தரும்.
10. தசமீ நம் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்.
11. ஏகாதசீ ஸகல வேத வித்யைகளையும் தரும்.
12. த்வாதசீ ஸ்வர்ணத்தைத் தரும்.
13. த்ரயோதசீ ஸந்ததி, மேதை, பசு, புஷ்டி, ஸம்ருத்தி நீண்ட ஆயுள் முதலியவைகளைத் தரும்.
14. வஸ்த்ரம் அல்லது அக்னி (தற்காலத்தில் தோன்றிய ரயில், மோட்டார் போன்ற விபத்து) இவைகளால் இறந்தவர்களுக்குச் சதுர்த்தசியில்தான் மஹாளய ச்ராத்தம்செய்ய வேண்டும். அதே அவர்களுக்கு இன்பத்தைத் தரும்.
15. அமாவாஸ்யை ச்ராத்தம் ஸகல இஷ்டங்களையுமளிக்கும்.
16. அடுத்த ப்ரதமை தர்ப்பணம் முன் செய்தவைகளில் உள்ள குறைகளை நீக்கிப் பூர்ணமாகச் செய்யும்.

ஆபஸ்தம்ப ஸூத்ர தர்ப்பண விளக்கம்.

தொடர்நாவல்

மனிதர்கள் 6

எல்லாம் முடிந்து போயிற்று. ராம்குமார் என்ற அன்பான, அழகான முப்பது வயது இளைஞனின் வாழ்க்கைக்குச் சட்டென்று முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டது. இனிமையாய்த் தொடர்ந்த காதல் காவியம் ஒன்று இடையில் நிறுத்தப்பட்டு விட்டது. அவனது உயிர் அடங்கிப் பன்னிரெண்டு மணி நேரமான பின்னர் மறுநாள் காலையில்தான் அவனுடல் ஆஸ்பத்திரியிலிருந்து கொண்டு வரப்பட்டது.

கார்த்திக், தானே கூட இருந்து உடலைக் கொண்டு வந்து ராதிகாவின் வீட்டுக் கூடத்தில் கிடத்தின போது வீடே குலுங்கிற்று. ஆபீசிலிருந்து வந்திருந்த அத்தனை பேரும் கதறினார்கள். எது எதுவோ சொல்லி அழுதார்கள். அவன் வேலையில் சேர்ந்த முதல் நாளிலிருந்து இதுவரை அலசப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்கு அவனோடு இருந்த சம்பந்தத்தை, நட்பை, அன்பை, பரிவை, பாசத்தையெல்லாம் சொல்லிச் சொல்லிப் பரிமாறிக் கொண்டார்கள்.

அன்றொரு நாள் — சாமிநாதனின் கால் உடைந்து கட்டுப் போட்டுக் கொண்டு வந்த அன்று சாமியும், பாட்டியும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எந்த இடத்தில் படுத்துத் தூங்கினானோ... அதே இடத்தில் இன்று அவனுடல் கிடத்தப்பட்டிருந்தது.

சாமிநாதனும் — சிவாவும் அவனது முகத்தையும், உடம்பையும் தொட்டுத் தொட்டுப் பார்த்து விசும்பினார்கள். மாமா, மாமா என்று விம்மினார்கள். 'இனிமேல எனக்கு யாரு மாமா இந்தி சொல்லித் தருவா...? யாரு மாமா வெளில அழைச்சுண்டு போவா....?' என்று கேள்வி மேல் கேள்வியாகத் தங்களுக்கு அவன் செய்ததையெல்லாம் வெளிப்படுத்தின போது, ஆபீஸிலிருந்து வந்திருந்த அத்தனை நெஞ்சங்களும் உருகிப் போயின. கண்ணோரங்கள் நனைந்தன. கோடி வீட்டு மாமா அவர்கள் இருவரின் கைகளையும் பற்றி வெளியில் அழைத்துக் கொண்டு போனார்.

இவை எல்லாவற்றையும் பார்த்தும் பார்க்காதவளாய் — கேட்டும் கேட்காதவளாய் ராம்குமாரின் முகத்தருகில் உறைந்து போய் உட்கார்ந்திருந்தாள் ராதிகா. அழுகை வரவில்லை. எல்லாம் உள்ளுக்குள்ளேயே அடைத்துக் கொண்டதில் நெஞ்சு கனத்தது. பாரமாக வந்து அழுத்திற்று. அதிக துக்கத்தில் இறுகிக் கிடந்தது. சுய நினைவே அற்றவளாக — ராம்குமார் செத்துப் போனதை இன்னும் கூட தான் நம்பவில்லை என்கிற மாதிரி அவன் தூங்கிக் கொண்டிருக்கிறான், இதோ எழுந்து விடப் போகிறான் என்பதற்காகக் காத்துக் கொண்டிருப்பவளைப் போல்....

பார்க்கப் பார்க்கப் பாட்டிக்கு அடி வயிறு குமுறிற்று. நெஞ்சு நெருப்பாகத் தகித்தது. பழுத்த மரம் மாதிரி தான் இருக்க இந்தப் பிஞ்சைப் பறித்துப் போனவனின் மீது கோபமும், வெறுப்பும் ஏற்பட்டது. தன் துரதிருஷ்டமோ என்னவோ... தன் வயிற்றில் பிறந்த பெண், அவளது வயிற்றில் பிறந்தவள் என இவ்வாறு துக்ககரமாக நடப்பது தாங்க முடியாததாக இருந்தது. இதையெல்லாம் விட —

ராதிகா உட்கார்ந்திருந்த தோற்றம், அந்த பிரமை பிடித்த நிலை, கொஞ்சம் கூட அழ முடியாத அளவிற்கு உறைந்து போயிருந்த உணர்வுகள்....

'கடவுளே... இந்தப் பெண் வாய் விட்டாவது அழுது தீர்த்து விடக் கூடாதா...? இப்படி உள்ளுக்குள் இறுத்தி இறுத்தி இவளும் இவளது அம்மா மாதிரி மூலையில் ஒடுங்கிப் போய் விடப் போகிறாளே... ஒன்றுமில்லாமல் உடைந்து விடப் போகிறாளே.... இவளை இவ்வாறு இறுக விடக் கூடாது. அழ வைக்க வேண்டும். உள் துக்கமெல்லாம் வெளியில் அடித்துக் கொண்டு வரும்படி கதறச் செய்து விட வேண்டும்...!

பாட்டி அருகில் போய் அவளது தோளைத் தொட்டுத் திருப்பினாள்.

ராதிகா உணர்ச்சிகளெல்லாம் வற்றிப் போன பார்வையில் பாட்டியை ஏறிட்டாள். முகம் கல் மாதிரி இறுகிக் கிடந்தது. அந்த இறுக்கத்தைத் தளர்த்துவதற்கென்றே பாட்டி அவளைக் கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அப்போதும் ராதிகா அப்படியேதான் இருந்தாள். அதே உணர்வற்ற நிலை. உறைந்து போன பாவம். அதன் பின் சில மணி நேரங்களில் சடலத்தை ஏற்றிக் கொண்டு போகிற கறுப்பு நிற வண்டி

— இந்துமதி —

வந்தது.

கார்த்திக் குளித்து, ஈரவேஷ்டியுடன் தானே நெருப்புச் சட்டியைத் தூக்கிக் கொண்டு வண்டியில் ராம்குமார் சடலத்தின் தலைமாட்டில் உட்கார்ந்ததும் அப்போது தான் தன் உணர்வு பெற்றவளாகக் கார்த்திக் கிடம் கேட்டாள் ராதிகா. முதல் முறையாக வாய் திறந்து பேசினாள்.

''நானும் கூட வர்றேன்...''

''நம்பள்ல பொம்மனாட்டிகள் மயானம் வரை கூடப் போற பழக்கமில்லே...'' அந்திமக்கிரியை பண்ண வந்தவரும், இன்னும் சிலரும் ஆட்சேபிக்க —

கார்த்திக் அழுத்தமான குரலில் சொன்னான்.


''இல்லே... ராதிகா வரட்டும். பாட்டி, நீங்க அவளுக்குத் துணையா கூட வாங்க...''

'துணை...!' அந்த வார்த்தையில் ராதிகாவின் உள்ளுணர்வு சட்டென்று விழித்துக் கொண்டது. அவளுக்குப் புரியவில்லை, எல்லாம் ஒரே இருட்டாக இருந்தது. வாழ்க்கையில் நடைபெறுகிற இதுபோன்ற நிகழ்ச்சிகளின் அர்த்தம் பிடிபடவில்லை. திடீரென்று ஏற்படுகிற திருப்பங்களின் காரணம் தெரியவில்லை. ஆனால் வலுவான ஏதோ ஒரு சக்தி இழுத்துக்கொண்டுபோவதுமட்டும்புரிந்தது— பொம்மலாட்டக்காரனாக அது இழுக்க, கண்ணுக்குத் தெரியாத கயிற்றில் கட்டுப்பட்ட மனிதர்கள் பொம்மைகளாக அந்த இழுப்பிற்கெல்லாம் ஆட்படுவது தெரிந்தது...

மயானத்திற்குப் போகிற வரை மௌனமாய், பிரமை பிடித்த நிலையில் இருந்தவள் ராம்குமாரின் உடலில் வரட்டிகளை அடுக்கி கார்த்திக் சிதைக்குத் தீவைத்த நிமிடத்தில் உள்ளுக்குள் குமுறி அடைத்துக் கொண்டிருந்த அத்தனை துக்கமும் பீறிட்டு வெளி வரக் கதறத் தொடங்கினாள். தன்நிலை மறந்து 'நானும் உங்க கூட வந்துடறேன் ராம். என்னையும் அழைச்சுண்டு போங்க ராம்...' என்று வெறி பிடித்தவளாகக் கத்தினவளை கார்த்திக்கும், பாட்டியும் சேர்ந்து இறுக்கிப் பிடித்துக் காரில் ஏற்றி வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள். டாக்டரைக் கூப்பிட்ட கார்த்திக் வலுக்கட்டாயமாக அவளுக்கு இன்ஜெக்ஷன் போட வைத்து அவள் தூங்க ஆரம்பித்த பின்னரே வீட்டிற்குக் கிளம்பினான்.

''உங்களுக்குத் துணையாக ஆபீஸ் பியூனை வரச் சொல்லியிருக்கேன் பாட்டி. நான் நாளைக் காலைல வந்து பார்க்கிறேன். அதுக்குள்ள ஏதாவது தேவைப்பட்டால் வீட்டுக்கு போன் பண்ணுங்க...'' என்று தன் தொலைபேசி எண்களைத் தனியாகக் குறித்துக் கொடுத்தான்.

மறு நாள் அதற்கும் மறுநாள் என்று வீட்டிற்கு வந்து ராதிகாவைப் பார்த்துப் பேசி விட்டுப் போனவனால் மூன்றாம் நாள் வர



முடியவில்லை. அவசரமாக தில்லி கிளம்ப வேண்டியதாயிற்று. அங்கிருந்து வியன்னா போய்த்தன் வேலையை முடித்துக் கொண்டு பத்து நாட்களில் சென்னை திரும்பினான். ஆபீஸுக்குப் போன முதல் காரியமாக ராதிகாவை இண்டர்காமில் கூப்பிட்டான். பதில் வரவில்லை. அதனால் எழுந்து அவளது அறைக்குள் நுழைந்தவனுக்கு அறையின் வெறுமையும், மேஜை மீது தாறுமாறாகக் கிடந்த ஃபைல்களும், அவற்றில் படிந்து கிடந்த தூசியும், ராதிகா வெகு நாட்களாக ஆபீசுக்கு வராததை உணர்த்திற்று. ஒரு வேளை வேலையிலிருந்தே நின்று விட்டாளோ என்ற சந்தேகத்தில் மானேஜர் ராகவனைக் கூப்பிட்டு விசாரித்தான்.

''இல்லே சார்... வேலையை ரிசைன் பண்ணலை. ஆனா அன்னிலேருந்தே ஆபீசுக்கு வரலை சார்...''

ராகவன் போனதும் அவன் யோசித்தான். ராம்குமாரின் மறைவு நிச்சயம் அவளை வெகுவாக, மிக ஆழமாகப் பாதித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்காக வீட்டிற்குள் முடங்கிக் கிடந்தால் அந்த இழப்பும், துக்கமும் மறையப் போவதில்லை என்பதை அவளுக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும். மீண்டும் ஆபீஸுக்கு வரவழைத்து வேலையில் ஈடுபடச் செய்ய வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக அவளது மனநிலையை மாற்ற வேண்டும். அதை எப்படி, எந்த வார்த்தைகளில் பேச வேண்டுமென்பதை முடிவு செய்து கொண்டு அன்று சாயந்திரம் அவளது வீட்டிற்குப் போனான்.

''வாங்க சார்...'' என்று வரவேற்றவளைப் பார்த்து ஒரு வினாடி அவனுக்குள் சொல்ல முடியாத வருத்தமும் சங்கடமும் ஏற்பட்டது. உலகத்துத் துக்கம் முழுவதையும் அந்த முகம் உள்வாங்கிக் கொண்டிருப்பதாகப் பட, சில வினாடிகள் மௌனமாக இருந்தான். அதற்குள் பாட்டி காப்பி கொண்டு வந்துதர மறுக்காமல் வாங்கிக் குடித்தான். பாட்டியிடமே ராதிகாவின் அம்மாவைப் பற்றி விசாரித்தான். பாட்டியின் குரல் முன்பு மாதிரி கணீரென்று வராவிட்டாலும் தெளிவும், தீர்க்கமும் அப்படியே இருந்தது.

அவளுக்கு இப்பத்தான் ஏதோ உறைச்சிருக்கு. முன்ன மாதிரி மூலைல முடங்கி அழுதுண்டிருக்காம, எழுந்து வெளியிலே வர்றா... கொஞ்சம், கொஞ்சமா வீட்டுக் காரியத்தையெல்லாம் கவனிச்சுக்கறா... இப்பக் கூட பசங்களை அழைச்சுண்டு மளிகைக் கடைக்குப் போயிருக்கா... இந்தப் பொண்ணோட இழப்பு அவ அறிவைக் கொஞ்சம் சமப்படுத்தியிருக்குன்னு நினைக்கிறேன்... ஆனா... அதுக்குப் பதிலா அம்மா விட்ட இடத்தை இவ பிடிச்சுப்பாளோன்னு பயமா இருக்கு... இவ இப்படி மூலைல அடைஞ்சு முடங்கிப் போறதைப் பார்க்கக் கஷ்டமா இருக்கு...''

அதைக் கேட்ட கார்த்திகேயன் ஒரு முறை ராதிகாவை ஏறிட்டு விட்டுப் பின்னர் பாட்டியைப் பார்த்தான்.

''இவளை அப்படி விட்டுடக் கூடாதுன்னுதான் நான் இப்போ இங்கே வந்திருக்கேன் பாட்டி... பத்து நாளா ஊர்ல இல்லை. இன்னிக்குத் திரும்பி வந்து பார்க்கிறேன். இவ மேஜை மேலே ஒரு வண்டிக் குப்பை. என்னன்னு கேட்டால் இவள் ஆபீசுக்கே வரலைன்னு சொன்னாங்க. எப்படியாவது இவளை நாளைக்கு ஆபீஸுக்கு வரவழைச் சுடணும்ங்கற நோக்கத்தோடதான் நான் இங்கே வந்தது...''

''ரெண்டு நாளா நானும் சொல்லிண்டுதான் இருக்கேன்... பதிலே வரலை. நீங்களாவது எடுத்துச் சொல்லுங்க... எனக்கு உள்ள கொஞ்சம் வேலை இருக்கு. இதோ வந்துடறேன்...''

பாட்டி போனதும் அவன் பார்வை ராதிகாவின் முகத்திற்குப் போயிற்று. முதல் முதலாகத் தன் அறைக்குள் நுழைந்த பயமும், சோகமும் நிரம்பிய அந்த முகம் தெரிய அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. ஒரு வினாடி அமைதியாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன் பின்னர் சட்டென்று பேச்சை ஆரம்பித்தான்.

''...நீ இப்படி இருக்கக் கூடாது ராதிகா. உன்னை இப்படிப் பார்க்கக் கஷ்டமா இருக்கு. ராம்குமாரின் இழப்பு உன்னை ரொம்ப ஆழமா பாதிச்சிருக்கிறது வாஸ்தவம்தான். அதை யாராலயும் மறுக்க முடியாது. அதே மாதிரி நீயும் ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்கணும். ராம்குமாரோடேயே உன் வாழ்க்கை முடிந்து விட முடியாதுன்றதைத் தெரிஞ்சுக்கணும்...''

சொல்லி விட்டுச் சற்று நிறுத்தி அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தபின் மெதுவாகக் கேட்டான்.

''ஏன் ராதிகா... நான் இப்படிப் பேசறது மனசுக்குக் கஷ்டமாக இருக்கா...?''

''இல்லை'' என்று தலையாட்டினாள் அவள்.

''நீ இல்லைன்னாலும் கஷ்டமாகத்தான் இருக்கும்னு எனக்குத் தெரியும். ஆனாலும் சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லி உன்னைச் சரிப்படுத்தி நாளையிலிருந்து திரும்ப ஆபீஸுக்கு வரவழைக்கணும் என்கிற உத்தேசத்தோடதான் வந்திருக்கேன்... பீ பிராக்டிகல் ராதிகா... எத்தனை நாளைக்கு இப்படி வீட்ல அடைஞ்சு கிடக்க முடியும்னு நினைக்கறே...? அவரவர்களுக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்கு. அதை சுயபலத்துல வாழ்ந்துதான் ஆகணும். இந்தத் துக்கத்துலேருந்து நீ வெளில வந்தே ஆகணும். உன் வேலைகளைக் கவனிச்சாகணும். இந்த உண்மை உனக்கு ஏன் புரியலை...?''

அதுவரை அவன் சொன்னதையெல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த ராதிகா மெல்ல அவனை நிமிர்ந்து பார்த்துச் சொன்னாள், ''இல்ல... இப்படி அடைஞ்சு கிடக்க முடியாதுன்றது எனக்கும் புரியறது. என் வீட்டு நிலைமைல என்னால் இப்படி இருக்க முடியாது... வேலை பண்ணித்தான் ஆகணும்கிறது தெரியறது... ஆனாலும்... ஆனாலும்... அங்கே வந்தா



மற்றவர்: டூட்டியில் இல்லாதப்போ கூட நீங்க ஏன் யூனிஃபார்மில் இருக்கீங்க?

போலீஸ்: இல்லேன்னா பிக்பாக்கெட்காரனுங்க நம்ம பையிலேயே கைவெச்சுடறானுங்க!

— கீழை. அ. கதிர்வேல்.

ராம்குமாரோட நினைவு அதிகமாகுமோன்ற பயத்துல'' —

''இங்கே இருந்தா மட்டும் அவன் நினைவு வராம இருந்துடப் போறதா...? நினைவுன்றது இடத்தைப் பொறுத்ததில்ல ராதிகா... மனுஷாளைப் பொறுத்தது... ஆபீஸுக்கு வந்து வேலைல ஈடுபட்டாலாவது கொஞ்சம் ரிலீஃப் கிடைக்கும்... ஓ... கமான் கெட் அப். சுயதுக்கங்கள் நம்மை விழுங்க அனுமதிக்கக் கூடாது... நாளைக் காலைலேருந்து ஆபீசுக்கு வா. முன்ன மாதிரி சரியா ஒன்பதரை மணிக்குக் கார் வந்து பிக் அப் பண்ணிக்கும். என்ன...?''

மறுநாளிலிருந்து ஆபீஸுக்கு வர ஆரம்பித்த ராதிகாவை அடிக்கடி உள்ளே கூப்பிட்டுப் பேசினான். ஆபீஸ் சம்பந்த மற்ற விஷயங்களையும் சொன்னான். அவளிடம் ஸ்னேக பாவத்துடன் பழகி அந்த சோகச் சுமையைக் குறைக்க முயன்றான். கொஞ்சம் கொஞ்சமாக வாழ்க்கை என்பதைப் புரிய வைக்க முயன்றான். எந்தக் கஷ்டத்தையும், துக்கத்தையும் பூதக் கண்ணாடியால் பார்த்துப் பெரிதுபடுத்தி அழுது கொண்டிருப்பதில் யாருக்கும் எந்தவித லாபமுமில்லை என்பதோடு தன் துக்கத்தை மற்றவர்கள் மீது பரவவிட்டு அவர்களையும் சோகப் படுத்தக் கூடாது என்றான். உதாரணமாக அவளது கஷ்டம் அவளது தம்பிகள் இருவரையும் எந்த அளவு பாதித்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டினான்.

சொல்லிச்சொல்லிக் கொஞ்சம் கொஞ்சமாக அவளை மாற்றிக் கொண்டு வர ஆரம்பித்து நாலைந்து மாதங்களுக்கு அப்புறம் — அவள் ஓரளவு அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு மெல்லச் சிரிக்கத் தொடங்கியபின் அதற்குமேல் தாங்க இயலாதவனாக ஒரு நாள் மெதுவாகத் தன் மனத்தைத் திறந்து பக்குவமாக வெளிப்படுத்தினான். ஆரம்பத்திலிருந்தே தான் அவளை நேசித்ததைச் சொன்னான். அமெரிக்கா போய் விட்டுத் திரும்பிய அன்று தன் காதலைச் சொல்ல அவளைக் கூப்பிட்ட போது ராம்குமாருடன் வந்து இரண்டு பேருமாகத் தங்கள் கல்யாணத்தை நடத்தி வைக்கும்படி கேட்டுக் கொண்டதில் ஏற்பட்ட ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் விளக்கினான்.

''யு... நோ... அது எனக்கு ஒரு பெரிய ஏமாற்றமாகத்தான் இருந்தது. முயல், ஆமை கதையில் ஆமை வெற்றி பெற்ற மாதிரி தோன்றியது. ஆனாலும் நீயும் அவனும் ஒருத்தரை ஒருத்தர் பரிபூரணமா நேசிக்கறது தெரிஞ்சப்புறம் என் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் அப்படியே உள்ளுக்குள்ளே அடக்கி உங்க கல்யாணத்தை நடத்தி வைக்க மனப்பூர்வமான சந்தோஷத்தோட முன் வந்தேன். ஆனால் விதி வேற மாதிரி மாத்திடுத்து. ஐ... நெவர் தாட் தட் ராம்குமார் — ஓ.கே... தட்ஸ் ஆல் ஓவர். இப்போ அதைப் பேசறதுலே அர்த்தமில்லே... ஆனால் நான் இப்பவும் உன்னை நேசிக்கிறேன்... மனசு நிறைய நேசிக்கிறேன். உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். என்னடா இத்தனை சீக்கிரமா இவன் இதைப் பத்திப் பேசறானேன்னு நினைக்காதே ராதிகா... இதுக்கு மேலே என்னால என் மனசை அடக்கிக்க முடியும்னு தோணலை. அதனால சொல்லிட்டேன்..''

அதைச் சற்றும் எதிர்பார்க்காத ராதிகா அயர்ந்து போனாள். சற்று தடுமாறிக் கூடப் போனாள். அவன் தன்னை நேசித்ததும் — தற்போதும் நேசிப்பதாகச் சொன்னதும் புதிய விஷயமாகக் காதில் விழுந்தது. அதிர்ச்சியான செய்தியாகக் கூட இருந்தது. எத்தனை பெரிய மனிதத்தனம் இருந்தால் அத்தனையையும் அடக்கி வைத்துக் கொண்டு தங்கள் கல்யாணத்தைத் தானே முன் நின்று நடத்தி வைப்பதாகச் சொல்லியிருப்பான் என்று தோன்றியதில் அவன் மீதிருந்த மதிப்பும் மரியாதையும் அதிகமாயிற்று. ஆனாலும் அவனது கேள்விக்கு உடனே பதில் சொல்ல முடியாமல் தயங்கி, தடுமாறிக் கடைசியில் சொன்னாள்.

''எனக்குக் கொஞ்சம் யோசிக்க அவகாசம் தாங்களேன்... ப்ளீஸ்...''

''ஓ... இதுக்குப் போய் ப்ளீஸ் எல்லாம் எதுக்கு...? டேக் யுவர் ஓன் டைம்... ஆனால் நான் உன் பதிலுக்குக் காத்துக் கொண்டிருப்பேன் என்பதை மட்டும் மறக்காதே...''

சொல்லிவிட்டுக் கம்பீரமாக அவன் வெளியேற, இன்னமும் அதிக குழப்பத்தில் தடுமாறிப் போனாள் அவள்....

(தொடரும்)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: இ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 31543, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

